ජාතික ප්‍රතිපත්ති හා ආර්ථික කටයුතු අමාත්‍යාංශය
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
**Ministry of National Policies and Economic Affairs**

# 2016
# වාර්ෂික වාර්තාව
# ஆண்ட றிக்கை
# Annual Report

සේවා නියුක්තයන්ගේ භාර අරමුදල් මණ්ඩලය
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை
**Employees' Trust Fund Board**

ජාතික ප්‍රතිපත්ති හා ආර්ථික කටයුතු අමාත්‍යාංශය

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

Ministry of National Policies and Economic Affairs

# ஆண்ட றிக்கை

# 2016

සේවා නියුක්තයන්ගේ භාර අරමුදල් මණ්ඩලය

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை

Employees’ Trust Fund Board

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை
ஆண்ட றிக்கை 2016

© ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை

PRINTEC
ESTABLISHMENT
# 52/1, Ekwattha Road, Mirihana, Nugegoda.
Tel: 0112 815 816
Email: sales@printec.lk
Web: www.printec.lk

**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை**

---

# ஆண்ட றிக்கை 2016

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை
1ஆம் மாடி, தொழிற் செயலகம், கொழும்பு
தொலைபேசி: 011 2581704 / தொலைநகல்: 011 2806832
ஈமெயில்: finance@etfb.lk / வெப்: www.etfb.lk

---

# உள்ளடக்கம்

முக்கிய பக்கங்கள்
தாபனக் கண்ணோக்கு 124 தாபன நிர்வாகம் 144 நிதிசார் தகவல்கள் 158

தாபனக் கண்ணோக்கு
அறிக்கைகுறித்து 126 நாங்கள் யாவர் 127 எமது பெறுமானங்கள் 128-129
நிறுவனஞ்சார் மீளாய்வு 130-132 செயலாற்றுகை முக்கியபதிவுகள் 133-135
2016 ஆம் ஆண்டு ஒரேபார்வையில் 136 மைல்கற்கள் 138-139
பின்னணிப் பகுப்பாய்வு 140-142

தாபன நிர்வாகம்
பணிப்பாளர் மற்றும் சிரேஃட முகாமைத்துவம் 146 தலைவரின் மீளாய்வு 147-148
பணிப்பாளர் சபையின் மீளாய்வு 149-150 ஆளுகை அறிக்கை 151-155
இடர் முகாமைத்துவ அறிக்கை 156-157

நிதிசார் தகவல்கள்
விபரமான வருமானக் கூற்று 161-162 நிதிநிலைமைக் கூற்று 163
உரிமைப்பங்கு மாற்றங்களுக்கான கூற்று 164-167
காசுப் பாய்ச்சல் கூற்று 168 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் முக்கிய கணக்கியற் கொள்கைகள் 169-201

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 203-224

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை தொடர்பில் சபையின் அவதானிப்புக்கள் 226-242

புள்ளிவிபர பின்னிணைப்புக்கள் 362-365

ஏனைய பின்னிணைப்புக்கள் 367



# தாபனக் கண்ணோக்கு

01 அறிக்கையைப் பற்றி

02 நாம் யாவர

03 எமது பெறுமானங்கள

04 நிறுவனஞ்சார் மீளாய்வு

05 செயலாற்றுகை முக்கிய பதிவுகள

06 2016ஆம் ஆண்டு ஒரே பார்வையில்

07 மைல்கற்கள்

08 பின்னணிப் பகுப்பாய்வு

01

# இவ்வறிக்கையைப் பற்றி



இது 2016ஆம் ஆண்டின் போது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நலன்பெறுநர்களுக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் முக்கியமான பெறுமானத்தைத் தாபனம் உருவாக்கியது எவ்வாறு என்பதற்கான விரிவான கணக்கொன்றினை வழங்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் 36ஆவது வருடாந்த அறிக்கையாகும். இவ்வறிக்கையானது தாபனத்தின் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால தனித்துவமிக்க பெறுமான உருவாக்கக் கதையினை தமது பிரபலமிக்க பங்குதாரர்களுடன் பகிர்ந்துகொள்வதனை நோக்காகக் கொண்டுள்ளது. தந்திரோபாயம், ஆளுகை மற்றும் நிதி முகாமைத்துவம் குறித்து சுருக்கமான தொடர்பாடலையும் இது வழங்குகின்றதுடன், அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் தாபனத்தினால் உருவாக்கப்பட்ட சமூகத்தடங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான உறவினை நிருபணஞ் செய்கின்றது. நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆளுகை அறிக்கையானது பொது முயற்சிகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிச் சட்டம் (1980 ஆம் ஆண்டின் 46 இலக்கச் சட்டம்) ஆகியவற்றிற்கான கூட்டுரு ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக்கான விதியுடன் (Code of Best Practice) நிறுவனம் எவ்வாறு இணங்கி ஒழுகுகின்றது என்பது குறித்து கலந்துரையாடுகின்றது. எனவே அறிக்கையானது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் எந்தவொரு துணை அல்லது கூட்டு நிறுவனத்தினையோ கொண்டிராததால் அதன் நிதிசார் மற்றும் செயற்பாட்டுத் தகவல்களை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இவ்வறிக்கையானது அளவு மற்றும் தர ரீதியான தரவுகளைக் கொண்டுள்ளதுடன், ஒப்புநோக்கு மற்றும் மேலதிக பகுப்பாய்வினை எளிதாக்குவதற்கு முடியுமான அளவு ரீதியான தரவுகளை வழங்குவதே எமது நோக்காகும். நிதிக் கூற்றுக்களும் அதனுடன் தொடர்பான குறிப்புக்களும் அரச கணக்காய்வாளரால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளதுடன் உத்தரவாத அறிக்கையும் இவ்வறிக்கையில் உள்ளது.

இவ்வறிக்கை முழுதும் ஒப்பீடுகள் வழங்கப்பட்டுள்ள 2015 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கு மிக அண்மித்த அறிக்கையுடன் 2016 ஜனவரி முதலாம் திகதி முதல் 2016 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலான காலப்பிரிவிற்கான 2016 வருடாந்த அறிக்கையின் உள்ளடக்கங்கள் தலைமை அலுவலகத்தினை மற்றும் கிளை வலையமைப்பினை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளைக் கொண்டுள்ளன. இவ்வறிக்கையின் உள்ளடக்கங்கள் இந்நிறுவனத்திற்கும் அதன் முக்கிய பங்குதாரர்களுக்கும் பொருந்தக்கூடிய அம்சங்கள் மீது முக்கியத்துவமளிக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டுள்ளன.



02

# நாம் யாவர்



ஊழியர் நம்பிக்கை நிதியமானது 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு 1981 ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் திகதி செயற்பாடுகளை ஆரம்பித்தது. இது தொழில் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டு, 1997ஆம் ஆண்டில் நிதி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு, தற்போது 2015 ஒக்தோபர் முதல் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரித்தாகாத எல்லா அரச துறை ஊழியர்களும் மற்றும் தனியார் துறை ஊழியர்களும் இந்நிதியத்தில் அங்கத்தவர்களாவதுடன், அவர்களது தொழில்தருநர்கள் அவ்வூழியர்களின் மொத்த வருவாய்களிலிருந்து 3%இனை நிதியத்திற்கு மாதாந்தம் அனுப்பவேண்டியுள்ளனர். எனவே, நீகுஐப் போலன்றி, தொழில்தருநர் மாத்திரமே ஊழியர்.'.அங்கத்தவர் சார்பாகப் பங்களிப்பொன்றை மேற்கொள்வதுடன் அங்கத்தவர்களுக்கு இது பங்களிக்காத நலனாகும். பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் சுயதொழில் முயற்சியாளர்களினதும் புலம்பெயர் தொழிலாளர்களினதும் தன்னார்வ அங்கத்துவத்தினை அதிகரிப்பதற்கு விசேட கவனஞ் செலுத்தப்படுகின்றது.

**சபையின் குறிக்கோள்கள்**

(அ) நிதியிடல் மற்றும் முதலீட்டில் பங்குபெறுவதன் ஊடாக ஊழியர் உடைமையாண்மை, ஊழியர் நலன்புரி, பொருளாதார ஜனநாயகம் ஆகியவற்றை ஊக்குவித்தல்

(ஆ) நிறுவனங்களில் உரிமை வட்டியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் முகாமைத்துவத்தில் ஊழியர் பங்களிப்பினை ஊக்குவித்தல்

(இ) ஊழியர்கள் ஓய்வு பெறும் போது பங்களிப்பல்லாத நலன்களை வழங்குதல் மற்றும்

(ஈ) மேலே (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களிற்குத் தேவையான ஏனைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

03

# எமது விழுமியங்கள்

## எங்களுடைய பிரதான பணிகள்

- ஆக்கத்திறனமிக்க, புத்தாக்கமிக்க மற்றும் அர்ப்பணிப்புமிகு பணிக்குழாம்
- மக்கள் நேயமிகு வேலைச் சூழல்
- ஆதரவுமிக்க கொள்கைகள் மற்றும் செயன்முறைகள்
- சிறந்த அமைப்புக்கள் மற்றும் நடைமுறைகள
- நிறைவான நிதி
- மகிழ்ச்சிமிக்க வாடிக்கையாளர்கள்

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை



## எங்களுடைய தொலைநோக்கு

நிறுவன ரீதியான திறமையினூடாக அனைத்து பங்குதாரர்களுக்கும் செயலூக்கமிக்க மற்றும் சாத்தியமிக்க முதன்மையான நம்பிக்கைப் பொறுப்பாக விளங்குதல்.

## எங்களுடைய குறிக்கோள்

நிதிசார் உறுப்பினர் நலன்கள் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவைகளை பரந்த அளவில் வழங்குவதில் மிகவும் அக்கறையுள்ள மற்றும் விவேகமுள்ள நம்பிக்கைப் பொறுப்பாக விளங்குதல்.

04

# நிறுவனஞ்சார் மீளாய்வு



ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை (ETFB) ஆனது ஒரு நம்பிக்கையாளர் அல்லது பொறுப்பாளரின் வகிபங்கினைக் கொண்ட ஓர் ஒழுங்கான நிறுவனக் கட்டமைப்பைக் கொண்டுள்ளதுடன், எதிர்காலத்தில் ஒரு உன்னதமான நிதி நிறுவனமாகச் செயற்பட வைப்பதே முகாமைத்துவத்தின் நோக்கமாகும். நிறுவனக் கட்டமைப்பினைப் பற்றி சட்டவிதிகளில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும் சட்டப் பிரிவு 5 இன் கீழ், சபையானது அதன் செயற்பாட்டு விதிமுறைகளை நெறிப்படுத்தலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதியச் செயற்பாட்டின் ஒட்டுமொத்த முகாமைத்துவப் பொறுப்புக்களும் அதன் பணிப்பாளர் சபையிலேயே தங்கியுள்ளது. பணிப்பாளர் சபையானது ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இவ் ஒன்பது உறுப்பினர்களில் நால்வரை சம்பந்தப்பட்ட அமைச்சராலும் தலா ஒரு உறுப்பினர் வீதம் நிதி மற்றும் வணிக விடயங்களிற்கு பொறுப்பான அமைசர்களாலும் ஒரு உறுப்பினர் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்ததாலும் இரு உறுப்பினர்கள் ஒவ்வொன்றும் 100,000 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களாலும் நியமிக்கப்படுவார்கள்.

இச்சபைக்குப் பொறுப்பான அமைச்சரின் தீர்மானத்திற்கமைய சபைத் தலைவர் தெரிவு செய்யப்படுவதுடன் சட்டவிதியின் படி சபைத் தலைவரே சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் (CEO) ஆவார்.

மேல் மாகாணத்திலேயே பெரும்பாலான தொழில்தருநர்கள் உள்ளபடியால் ETFB ஆரம்பத்திலே ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பாக மேல்மாகாணத்திலே உருவாக்கப்பட்டது. முக்கிய பிரதேசங்களான பிராந்திய மற்றும் மாவட்ட அலுவலகங்கள் திறக்கப்பட்டதும் பிராந்திய அலுவலக வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மறுசீரமைப்பு பூர்த்தியானதன் பின்னர் அமுலாக்கம் மற்றும் சட்ட நடவடிக்கைகளில் துரித முன்னேற்றம் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து கோரல்களை ஏற்றல், கோரல் கொடுப்பனவுகள், உறுப்பினர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்ற பல உறுப்பினர் சேவைச் செயற்பாடுகள் பரவலாக்கப்பட்டன.

ETFB இன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளானது பரந்த அளவில் செயற்பாட்டுப் பிரிவு மற்றும் ஆதரவுச்சேவைப் பிரிவு என இரு வகைப்படுத்தப்படும். சேகரிப்பு மற்றும் தொழில்தருநர் தொடர்புகள், உறுப்பினர் சேவைகள் மற்றும் முதலீடுகள் என்பன செயற்பாட்டுப் பிரிவில் அடங்கும். நிர்வாகம் மற்றும் மனிதவளம், நிதி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் ஆதரவுச் சேவைகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

சட்டவிதியில் குறிப்பிட்டுள்ளவாறு தலைவர் அவர்கள் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகக் கடமைபுரிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் (CEO) நேரடிக் கண்காணிப்பின் கீழ் பொதுமுகாமையாளர் மற்றும் மேலதிகப் பொதுமுகாமையாளர் ஆகியோர் செயற்படுவர். ஒவ்வொரு செயற்பாட்டுப் பிரிவும் ஒவ்வொரு பிரதிப் பொதுமுகாமையாளர் (DGM) தலைமையில் செயற்படும். செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவியானது தலைவருக்கு உதவிபுரிவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நிறுவனம் சுமுகமாகச் செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு ஒரு முழுமையான நிறுவனக் கட்டமைப்பு விருத்தி செய்யப்பட்டுள்ளது.

**சபையின் திணைக்களங்கள்/ பிரிவுகள்/ அலகுகள் ஆகியவற்றின் தொழிற்பாடுகள்**

### 1. சேகரிப்பு மற்றும் தொழில் தொடர்புகள் பிரிவு

தனியார் நிறுவனங்களிலும் இளைப்பாற்றுச் சம்பளம் கிடைக்கப் பெறாத அரச நிறுவனங்களிலும் பணிபுரியும் ஊழியர்களின் மொத்த வருவாயில் 3%இனைப் பங்களிப்புச் செய்வது கட்டாயமாகும். தொழில்தருநர்களிடமிருந்து உரிய நேரத்தில் பங்களிப்புக்களைச் சேகரித்தல், மிகஅறவீடுகளைச் சேகரித்தல், தவறுபவர்களை/பங்களிக்காதோரை அடையாளங் காணுதல், தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் போன்றன பங்களிப்புச் சேகரித்தல் படிமுறையுடன் தொடர்புடைய முக்கியமான செயற்பாடுகளாகும். சபையின் சேகரிப்பு இலக்குகளை அடைவதே சேகரிப்பு மற்றும் தொழில்தருநர் தொடர்புப் பிரிவின் பொறுப்பு ஆகும்.

### 2. முதலீட்டுப் பிரிவு

சபையின் பல்வேறு முதலீட்டு நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள முதுலீட்டுப் பிரிவு நிறுவனத்தின் முக்கிய வர்த்தக அலகாகும். முதலீடுகள் மற்றும் திரவத்தன்மையின் பாதுகாப்பினைப் பேணும் அதே வேளையில் உச்ச வருவாயை ஈட்டுவதே இவ்வலகின் முக்கிய நோக்கமாகும். முதலீட்டுத் தீர்மானங்களுக்கான வழிகாட்டியாக விரிவான முதலீட்டுக் கொள்கை ஒன்று உள்ளது.

### 3. அங்கத்தவர் சேவைகள் பிரிவு

இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன, அங்கத்தவர் கணக்குகளை இற்றைப்படுத்தல் மற்றும் பேணுதல், அங்கத்தவர்களுக்கு வருடாந்த அங்கத்தவர் கூற்றுக்களை வெளியிடுதல் (AMS), பொது நலன்களின் (சாதாரண மற்றும் மரண நலன் கோரல்கள்) துரித செயலாக்கம் மற்றும் செயற்படு அங்கத்தவர்களுக்கான ஏனைய நலன்புரித் திட்டங்களைப் பேணுதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. இப்பரிவின் செயற்பாடுகளை மேலும் வலுவூட்டுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4. நிதிப் பிரிவு

நிதிப் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாவன, மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகள், வருடாந்த வரவு செலவுதிட்டம் மற்றும் பணிக்குழாத்தினரதும் ஏனையவற்றினதும் கொடுப்பனவுகள் ஆகியவற்றை அரச வரிகளுக்கு உட்பட்டவாறு தயாரித்தல், அரச கணக்காய்வு விடயங்களை ஒருங்கிணைத்தல், கூட்டிணைந்த திட்டம் மற்றும் ஏனைய முகாமைத்துவ தகவல் அறிக்கைகள் ஆகியவற்றைத் தயாரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

### 5. நிர்வாகம் மற்றும் மனித வளம

தற்போதைய போட்டிமிக்க வர்த்தகச் சூழலில் இன்றியமையாத நவீன மனித வள நுட்பங்கள் மற்றும் சிறந்த அலுவலக நடைமுறைகள் ஆகியவற்றை பின்பற்றுவதன் தேவை அறியப்பட்டுள்ளது. ஒரு சேவை நிறுவனமான நுவுகு சபை மக்கள் மீது (ஊழியர்கள்) தங்கியிருக்கும் தன்மையானது மிகவும் உயர்வானது. எனவே, நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை அபிவிருத்தி மற்றும் விருத்தி செய்வதற்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவினால் பின்பற்றப்படும் வழிமுறைகள் மற்றும் காணப்படும் முறைமைகளை இற்றைப்படுவதற்கும் விருத்தி செய்வதற்கும் மற்றும் பணிக்குழாத்தினருக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6. **தகவல் தொழில்நுட்பப் பிரிவு**

தகவல் தொழில்நுட்பப் பிரிவானது பிரதானமாக அங்கத்தவர் நிர்வாக மென்பொருள் முறைமையினை (MASS) முகாமை செய்வதற்கும் பேணுவதற்கும் பொறுப்பாயுள்ளது. மேலும் ஏனைய பிரிவுகளின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தகவல் தொழில்நுட்பப் பிரிவு மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

7. **கணக்காய்வு மற்றும் உத்தரவாதப் பிரிவு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது போதிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் நிறுவப்பட்டுள்ளன எனவும் அவ்வாறான முறைமைகள் தொடர்ச்சியாகவும் பொருத்தமாகவும் பிரயோகிக்கப்படுகின்றன எனவும் உறுதிப்படுத்தவதற்கு பொறுப்பாயுள்ளது. பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) நேரடியாகவே தலைவருக்கு அறிக்கையிடுவார். உள்ளகக் கணக்காய்வின் ஏற்கனவே உள்ள முறைமைகள் மற்றும் நடைமுறைகளின் நம்பகத்தன்மையை மீள்மதிப்பீடு செய்வதற்கு ஓர் ஆய்வினை மேற்கொள் வேண்டும் என்றும் நிறுவனத்தின் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் பயனுறுதிமிக்க கருவியொன்றாக உள்ளகக் கணக்காய்வின் வகிபங்கினை வலுவூட்டுவதற்கும் முகாமைத்துவம் கருத்திற் கொண்டுள்ளது.

8. **சட்டப் பிரிவு**

சட்டப்பிரிவானது சபையின் அனைத்து சட்ட விவகாரங்களுக்கும் ஆலோசனை சேவை அலகொன்றாகச் செயற்படுகின்றது. பிராந்திய அலுவலக வலையமைப்பு விரிவாக்கத்துடன் பிராந்திய மட்டத்திற்கு சட்ட நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிராந்திய அலுவலகத்திலும் சட்ட விவகாரங்களில் ஈடுபடுவதற்கு தனி ஒரு சட்ட அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். சட்டப் பிரிவானது பிரதிப் பொது முகாமையாளரின் (சேகரிப்பு மற்றும் தொழில் தருநர் தொடர்புகள்) கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றது.

9. **திட்டமிடல், ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு**

ஒவ்வொரு ஆண்டிலும் ஜனவரி 1ஆம் திகதியாகையில் கண்காணித்தல், இற்றைப்படுத்தல் மற்றும் வருடாந்த அடிப்படையில் நுவுகுடீ இற்கான கூட்டிணைந்த திட்டத்தினை திருத்தியமைத்தல் மற்றும் புதிய திட்டம் என்பன அமுல்படுத்துவதற்காக கிடைக்கப் பெறும். இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன மாதாந்த/காலாண்டு /வருடாந்த அடிப்படையில் நுவுகுடீயின் முன்னேற்றத்தினை அறிக்கையிடல், உரிய நேரத்தில் அமைச்சிற்கு, பாராளுமன்றத்திற்கு மற்றும் ஏனைய நிறுவனங்களிற்கு சட்டரீதியான அறிக்கையிடல் மற்றும் தேவையான திருத்தங்களைச் செய்தல், நுவுகுடீயின் முகாமைத்துவத்திற்குத் தேவையான பயனுறுதிமிக்க தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமான பயனுறுதிமிக்கம் உரிய நேரத்திலும் ஆய்வுளை நடாத்துதல் என்பனவாகும்.

10. **புள்ளிவிபரப் பிரிவு**

புள்ளிவிபரப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன பயனுறுதிமிக்க முகாமைத்துவ தீர்மானங்களை எடுத்தல், தேவையான தரவுகள் குறித்து போக்குப் பகுப்பாய்வினைத் தயாரித்தல் மற்றும் பகுப்பாய்தல் ஆகியவற்றிற்காக அனைவருக்கும் ரியல் டைம் தரவுத்தளத்தினைக் கிடைக்கப் பெறச் செய்தல், நேர அடிப்படையில் எதிர்கால வருடங்களுக்கான எதிர்வுகூறல் மற்றும் திட்டமிடல், அவ்வப்போது முகாமைத்துவத் தீர்மானங்களை எடுப்பதற்கு தேவையான முக்கிய குறிப்புக்களை வழங்குதல், தேசிய திட்டமிடல் மற்றும் அமுலாக்கத்திற்கான வகைப்படுத்தப்பட்ட மற்றும் குறியிடப்பட்ட தகவல்களைத் தேவையான நிறுவனங்களுக்கு வழங்குதல் என்பனவாகும்.

05

# பிரதான நிதித் தகவல்கள் 2016



## அங்கத்தவர் கண்ணோக்கு




வட்டி மற்றும் பங்கிலாபம் (பி.ரூபா)




மொத்த வருமானம் செயற்படு செலவினங்கள்




முதலீட்டுக் கலவை (%)

## ஊழியர் கண்ணோக்கு




ஊழியர் தொகை (எண்.)




பயிற்சி மற்றும் அபவிருத்திச் செலவு (மி.ரூபா)




மொத்த பணிக்குழாத்தினர் செலவு (மி. ரூபா)

## அரசாங்கக் கண்ணோக்கு




அரசாங்கததிற்கு செலுத்திய வரிகள் (மி. ரூபா)




அரச பிணைகளில் மொத்த முதலீடுகள் (மி.ரூபா)

## சமூகக் கண்ணோக்கு




நலன்கள் திட்டம் (மி.ரூபா)

06

# 2016 ஆம் ஆண்டு ஒரே பார்வையில



2016ஆம் ஆண்டினுள்ள சபை குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தினையும் முக்கியமான அடைவுகளையும் பதித்துள்ளது. சில அடைவுகள் கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

- கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12% அதிகரிப்பான இவ் ஆண்டிற்கான தொழில் தருநர்களிடமிருந்து கிடைத்த மொத்தப் பங்களிப்புகள் 20 பில்லியன் ரூபாவாகும்.

- அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் பல்வேறு முதலீட்டுப் பெறுமானம் 210 பில்லியன் ரூபாவிலிருந்து 229.5 பில்லியன் ரூபா வரை அதிகரித்ததுடன் 2015ஆம் ஆண்டில் 21.4 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 12% வளர்ச்சியான 24.0 பில்லியன் ரூபா என மொத்த முதலீட்டு வருமானம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

- கடந்த ஆண்டில் 18 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் சபையானது தேறிய இலாபமாக 20.2 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளதுடன் ஒட்டுமொத்த இலாபமும வருட இறுதியின் போது வட்டியாகவும் பங்கிலாபமாகவும் அங்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

- வருட இறுதியில் நிதியத்தின் மொத்த தேறிய சொத்துப் பெறுமதி 248 பில்லியன் ரூபாவையும் விஞ்சியது.

- சபையினால் 2016ஆம் ஆண்டிற்கான வட்டடியாகவும் பங்கிலாபமாகவும் அதன் அங்கத்தவர்களுக்கு 9% மொத்த வீதத்தினை அறிவிக்க முடிந்தது. இது அரச வங்கிகளினால் அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேமிப்பு வீதங்களுடன் ஒப்பிடுகையில் ஒரு கவர்ச்சிமிகு வீதமாகும்.

- மொத்த வருமானத்தின் வீதமொன்றாக தொழிற்படு செலவினங்கள் 2015ஆம் ஆண்டின் 7.9% இலிருந்து 2016ஆம் ஆண்டின் 7.3% இற்கு குறைவடைந்துள்ளது. இது இக்காலப்பிரிவிற்கான தாபனத்தின் மேம்படுத்தப்பட்ட தொழிற்படு வினைத்திறனின் பிரதிபலிப்பாகும்.

- செலுத்தப்படாத பங்களிப்புத் தொகைகள், மிகை அறவீடுகள் மற்றுமு் சட்ட நிலுவைகள் ஆகியவற்றின் மீது விசேட கவனஞ் செலுத்தப்பட்டதுடன் இவ்வாண்டினுள் பிராந்திய அலுவலக வலையமைப்பு தொடர்ந்தும் பயனுறுதிமிக்கதாகத் தொழிற்பட்டது.

- பரவலாக்கப்பட்ட கோரல்கள் கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம் கம்பஹ, கண்டி, மாத்தறை, பதுளை, குருணாகலை பிராந்திய அலுவலங்களுடன் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன் விரைவான கோரல் கொடுப்பனவும் கண்டி மற்றும் குருணாகலை பிராந்திய அலுவலகங்களில் ஆரம்பிக்கப்பட்டன.

- மாதாந்த பங்களிப்புக் கொடுப்பனவுகளை காசோலையினால் தொழில்தருநர்கள் தலைமை அலுவலகத்தில் செலுத்துவதற்கு மேலதிகமாக எமது பிராந்திய அலுவலக வலையமைப்பிலும் நகர அலுவலகம், இலங்கை வங்கியில் எமது சேகரிப்பு அலுவலகத்திலும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.

- 1600 தொழில்தருநர்களால் மாதாந்த பங்களிப்புத் தொகையாக சராசரி 10 மில்லியன் ரூபாவிற்கு அண்மித்த தொகையினைப் பேணுவதற்கு 2010ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட யாழ்ப்பான பிராந்திய அலுவலகத்தில் தொடர்ச்சியான முன்னேற்றத்தினைப் பதிவு செய்துள்ளது.





நிறுவனங்களில் உரிமை வட்டியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் முகாமைத்துவத்தில் ஊழியர் பங்களிப்பினை ஊக்குவித்தல்

07

# 1981 முதல் 2016 வரையிலான மைல்கற்கள்



## 1986
மரண நலத்திட்டம்:
ரூபா 100,000/=

## 1989
மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
ரூபா 200,000/=





## 1991
மரண நலத்திட்டம்:
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்:
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி:
ரூபா 300,000/=

## 1992
மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி :
கண்பளிங்கு வில்லை செலவிற்கான மீளளித்தல்
ரூபா 18,000/=





## 1994
மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி :
கண்பளிங்கு வில்லை செலவிற்கான மீளளித்தல்
**5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்**
**ரூபா 15,000/= - 9,000 புலமைப்பரிசில்கள்**

## 1997
மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி :
கண்பளிங்கு வில்லை செலவிற்கான மீளளித்தல்
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
**“சிரமசுவ ரெக்கவரண” சிகிச்சையகத் திட்டம்**
**முழு சேவைக் காலத்தின் போதும் வருடத்திற்கு ரூபா 25,000/= வீதம் கூடியபட்டசம் 50,000 வரை**





## 2002
மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி :
கண்பளிங்கு வில்லை செலவிற்கான மீளளித்தல்
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
“சிரமசுவ ரெக்கவரண” சிகிச்சையகத் திட்டம்
**“வியன” குறைந்த வட்டி வீட்டுக் கடன் திட்டம**

## 2006
மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி
கண்பளிங்கு வில்லை செலவிற்கான மீளளித்தல்
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
“சிரமசுவ ரெக்கவரண” சிகிச்சையகத் திட்டம்
“வியன” வீட்டுக் கடன் திட்டம்
**சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு ரூபா 300,000/= இலிருந்து நிதி உதவி**





## 2010
மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி :
கண்பளிங்கு வில்லை செலவிற்கான மீளளித்தல்
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
“சிரமசுவ ரெக்கவரண” சிகிச்சையகத் திட்டம்
“வியன” வீட்டுக் கடன் திட்டம்
சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி
**5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் ரூபா 15,000/=**
**(நிரந்தர ஊனமுற்றதன் காரணமாக பணியிலிருந்து நீங்கிய நுவகு அங்கத்தவர்கள்)**
**கபொத (உ/த) மாணவர்களுக்கான நிதியுதவி ரூபா 12,000/= - 5,000/= புலமைப்பரிசில்கள**

## 2016
மரண நலத்திட்டம்
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி
**கண்பளிங்கு வில்லை செலவிற்கான மீளளித்தல்**
**ரூபா 30,000/=**



08

# பின்னணிப் பகுப்பாய்வு

## I. SWOT பகுப்பாய்வு

உள்வாரிக் காரணிகள்

### பயன்தரு காரணிகள

**பலங்கள்**

I. சேகரித்தல், செயற்படுத்துதல், விநியோகத்தல் நடவடிக்கைகளின் போது பாதுகாப்பான மற்றும் சீரான வழிமுறைகள் கையாளப்படல
II. பலமான நலன் முறைமைகள் காணப்படுகின்றமையால் அங்கத்துவத்திற்கான கவர்ச்சி
III. உயர் திரவத்தன்மை நிலை
IV. சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட தனியுரிமை நிலை
V. வருமானம் உருவாக்கும் பெறுமதிமிக்க சொத்து உடைமையாண்மை காணப்படுகின்றமை
VI. நிதிய முகாமைத்தவத்திற்கான சுயாதீனம் காணப்படுகின்றமை
VII. விரைவான விநியோக வசதிகள் உள்ளமை
VIII. தக்கவைப்பதற்காக தனிச்சிறப்பு மிக்க பணியாளர் வெகுமதி முறைமை
IX. பயனுறுதிமிக்க அமுலாக்கம், சட்டத்தொகுதி மற்றும் வலையமைப்பு உள்ளமை

### பாதகமான காரணிகள்

**பலவீனங்கள்**

I. பயனுறுதிமிக்க செயற்பாடுகளுக்கான வசதிகளின் பற்றாக்குறை
II. சேகரிப்பிற்கு உள்ளடங்கும் பகுதிகள் போதியளவில் வரையறுக்கப்படவில்லை
III. சொந்த அலுவலக வளாகமொன்று இல்லாமை மற்றும் தற்பொதைய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான இடவசதிப் பற்றாக்குறை
IV. பயனுறுதிமிக்க தீர்மானங்களை எடுப்பதற்கான தரவுகளைப் பெறுவதற்கு பொதிய முறைமைகளின் பற்றாக்குறை
V. தற்போது பயன்பாட்டிலுள்ள காலங்கடந்த கணினி நிகழ்ச்சித்திட்டம் செயன்முறையின் வேகத்திற்கு தடையாகவும் தவறுகளை ஏற்படுத்துவதாகவும் உள்ளது
VI. தரவுத்தளம் போதாமை
VII. செயற்பாடுகளின் மொழிமூலங்களில் சமநிலையற்றதன்மை (விசேடமாகத் தமிழ் மற்றும் ஆங்கிலம்)

வெளிவாரிக் காரணிகள்

**வாய்ப்புக்கள்**

I. அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் ஒரு மில்லியன் தொழில்களை வழங்குவதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கை
II. தனியார் துறை மற்றும் பகுதி அரசாங்க சம்பள அதிகரிப்பு
III. தொழில் முயற்சியாண்மைக் கலாசாரத்தில் அதிகரிப்பு
IV. வெளிநாட்டு முதலீட்டாளர் உட்பாய்ச்சலின் அதிகரிப்பு
V. நுண்நிதிக்கான அதிகரிக்கும் போக்கு
VI. தேசிய ஆகக்குறைந்த ஊதியத்தின் அதிகரிப்பு
VII. புதிய அரசாங்கத்தின் அபிவிருத்தி உபாயங்கள்

**அச்சுறுத்தல்கள்**

I. முதலீட்டில் சந்தை இடர்பாடுகள
II. சந்தையில் உயர் வருவாயைத்தரக்கூடிய முதலீடுகள் இல்லாமை
III. சந்தையில் உயர் வருவாயைத்தரக்கூடிய முதலீடுகள் இல்லாமை
IV. கடுமையான சுற்றாடல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அதிகரித்த போக்கு
V. இளைப்பாறும் வீதத்தில் அதிகரித்த போக்கு
VI. காணப்படும் குறை வட்டி வீதங்கள் காரணமாக குறைந்த பங்கிலாப வீதம



## I. பொருளாதாரப் போக்குப் பகுப்பாய்வு




கைத்தொழிற்றுறை மற்றும் சேவைத் துறையில் வலுவான செயலாற்றுகைகளின் பக்கபலத்துடன் 2016ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் இலங்கைப் பொருளாதாரமானது வேகமாக நடைபோட்டது. இரண்டாவது காலாண்டின் போது அவதானிக்கப்பட்ட 2.6 வீதத்தையும் விடக் குறிப்பிடத்தக்களவில் அதிகமாக மூன்றாவது ஆண்டிற்கான பொருளாதார வளர்ச்சி 4.1 வீதமாக இருந்தது. 2016ஆம் ஆண்டின் முதலாம் அரைப்பகுதியில் பொருளாதாரம் உண்மையான அடிப்படையில் 3.9 வீதம் வளர்ச்சி கண்டுள்ளதுள்ளதுடன், 2015 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 5.7 வீத வளர்ச்சி பதிவு செய்யப்பட்டிருந்தது. 2016ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் போது 7.7 வீதத்தால் வளர்ச்சியடைந்த கைத்தொழிற்றுறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சரிவு ஏற்படுத்தும் வகையில் 2.2 வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சீரற்ற காலநிலை காரணமாக விவசாயத்துறை வருடத்தின் முதல் அரைப்பகுதியின் போது உள்நாட்டு உணவுப் பண்டங்களின் விலையில் பாதிப்பு ஏற்பட்டதுடன் வீழ்ச்சி கண்டது. 2016ஆம் ஆண்டின் முதல் அரைப் பகுதியில் சேவைத் துறை மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபார நடவடிக்கைகளின் காரணமாக 4.5 வீதத்தால் வளர்ச்சியடைந்து




விரிவடைந்ததுடன், நிதிசார் சேவைகள் 15.1 வீத அதிவேகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

வெளிவாரித் துறையில், ஏற்றுமதி வருவாய்ச் சுருக்கதின் மத்தியில் அதிகரித்த இறக்குமதிச் செலவினம் காரணமாக 2016 ஆம் ஆண்டில் முதல் பதினொரு மாதங்களில் வியாபார நிலுவையிலான திரண்ட பற்றாக்குறை 2015 இல் இதே காலப்பிரிவில் 7.6 பில்லியன் அ.டொலரிலிருந்து 8.2 பில்லியன் அ.டொலரிற்கு மேலும் விரிவடைந்தது. சுற்றுலாத்துறை மற்றும் ஊழியர்களின் பண அனுப்புகையிலிருந்து பெறும் வருவாய்கள் கொடுப்பனவுகளின் ஒட்டுமொத்த நிலுவை மீதான வியாபாரப் பற்றாக்குறையின் பாதகமான தாக்கத்தினைத் தொடர்ந்தும் குறைத்தன. 2016இல் சுற்றுலாத்துறையினால் கிடைத்த வருவாய் 14.0




வீதத்தால் ஏறக்குறைய 3.4 பில்லியன் அ.டொலரிற்கு அதிகரித்துள்ளமை கணக்கிடப்பட்டதுடன், இவ்வாண்டின் போது ஊழியர்களின் பண அனுப்புகைகள் 3.7 வீதத்தால் 7.2 பில்லியன் அ.டொலரிற்கு அதிகரித்துள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீட்டு (FDI) உட்பாய்ச்சல்களின் தேறுகை ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் எதிர்பார்ப்புகளுக்கு கீழ் இருந்ததுடன், ரூபா நாணயமாற்று அரசாங்கப் பிணைகள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்கள் சிலவும் இருந்தன.

நிரம்பல் பக்கக் குறுக்கீடுகள் மற்றும் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட வரி மாற்றங்களின் உடனடித் தாக்கம் ஆகியவற்றிலிருந்து எழும்விலை அழுத்தங்கள் இருந்த போதிலும், நுகர்வோர் விலைப் பணவீக்கம் தனி இலக்கங்களாகவே இருந்தது. எவ்வாறெனினும், உள்நாட்டு நிரம்பல் பக்க தடங்கல்கள், குறிப்பாக சீரற்ற காலநிலை காரணமாக, பெறுமதி கூட்டப்பட்ட வரி (ஏயுவு) மற்றும் அரச இறை நிதியிலிருந்து **தெரிவுசெய்யப்பட்ட சந்தை வட்டி வீதங்கள்**




ஏயுவு மற்றும் டேவுக்கான சில விதிவிலக்குகளை அகற்றுதல் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த தாக்கத்தின் காரணமாக வருடத்திற்கு வருடம் இரண்டாவது காலாண்டின் போது பணவீக்கம்




அதிகரித்தது. அதன்பின்னர் உள்நாட்டு நிரம்பல் நிலைமைகள் சாதாரண நிலையை அடைதல் மற்றும் அரச வரி அமைப்பிற்கான மாற்றங்களின் அமுலாக்கத்தினை இடைநிறுத்துதல் காரணமாகப் பணவீக்கம் குறைவடைந்தது

அதற்கமைய, மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை முதலில் நியதிச்சட்ட ஒதுக்கு விகிதத்தை உயர்த்துவதாலும் (SRR)




பின்னர் அதன் பிரதான கொள்கை வட்டி வீதங்களை இவ்வருடத்தில் பெப்ரவரியிலும் ஜுலையிலும் ஆக இரு தடவைகளில் உயர்த்துவதாலும்

திடப்படுத்தியுள்ளது. நாணயக் கொள்கையினைத் திடப்படுத்தலால் அமெரிக்காவில் நாணயக் கொள்கையின் இயைபாக்கச் சூழ்நிலையில் பல்வேறு முதலீடுகளின் மூலதன வெளிப்பாய்ச்சல்களை ஊக்கமிழக்கச் செய்தல் மற்றும் பொருளாதாரத்திற்கு இறக்குமதி செறிவான கடன் பாய்ச்சல்களைக் குறைப்பதன் மூலம் வெளிவாரித் துறையின் மீதான அழுத்தத்தைக் குறைக்க உதவுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

உரிமைப்பங்குச் சந்தை 2016ஆம் ஆண்டின் போது பாரிய சரிவினைக் கண்டது. விலைக் குறியீவிற்பனைப் புரள்வு மட்டங்கள் வீழ்ச்சியடைந்தன. எதிர்கால கொள்கை முறைகளில் மற்றும் அரசியல் மாற்றங்களில் அதிகரித்த முதலீட்டாளர் நிச்சயமற்றதன்மை, பரிமாற்ற வீதம் மீதான அழுத்தம் மற்றும் வெளிநாட்டுக் கொள்வனவுகளின் கணிசமான குறைந்த அளவுகள் என்பன குறைவான வட்டி வீத நிலை காணப்படினும் உரிமைப்பங்கு சந்தையில் எதிர்மறை தாக்கத்தை ஏறபடுத்தியுள்ளதாகத் தெரிகிறது. இதன் விளைவாக, இவ்வாண்டிற்கு 9.5 வீத சரிவுடன் யுளீஜ வீழ்ச்சியடைந்தது.



# தாபன நிர்வாகம்

01 பணிப்பாளர் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம்

02 தலைவரின் மீளாய்வு

03 பணிப்பாளர் சபையின் மீளாய்வு

04 ஆளுகை அறிக்கை

05 இடர் முகாமைத்துவ அறிக்கை

# பணிப்பாளர் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம்

## பணிப்பாளர் சபை (2016)

**திரு. மஹிந்த மடிஹஹேவா**
தலைவர்.'.பி.நி.அதிகாரி
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு.பீ.பி. மெதகெதர**
செயற்பாட்டுப் பணிப்பாளர்
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. நிஹால் பொன்சேகா (2016 ஏப்பிரல் வரை)**
பணிப்பாளர்
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. கே.எஸ். குருகுலசிங்க**
பணிப்பாளர்
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரால் நியமிக்கப்பட்டவர

**திருமதி. சம்பா பாலசூரிய**
பணிப்பாளர்
நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர

**திருமதி. ஷியேதா சேனாரத்ன**
பணிப்பாளர்
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. சீ.எல்.கே.பீ. ஜயசூரிய (2016 செப்தெம்பர் வரை)**
பணிப்பாளர்
இலங்கைப் பணிகொள்வோர் கழகப் பிரதிநிதி

**திரு. டப்ளியூ.எம்.கே.எல். வீரசிங்க (2016 ஒக்டோபர் வரை)**
பணிப்பாளர்
இலங்கைப் பணிகொள்வோர் கழகப் பிரதிநிதி

**திரு. பீ. ரணவக்கஆரச்சி**
பணிப்பாளர்
தொழிற்சங்கப் பிரதிநிதி

**திரு. எல்.எஸ். தேவேந்திர**
பணிப்பாளர்
தொழிற்சங்கப் பிரதிநிதி

**திரு. எச்.எம்.ஏ.ஜே. குமார**
சபைச் செயலாளர

## சிரேஷ்ட முகாமைத்துவம

**தலைவர்/பி.நி.அதிகாரி**
திரு. மஹிந்த மடிஹஹேவா

**செயற்பாட்டுப் பணிப்பாளர்**
திரு.பீ.பி. மெதகெதர

**மேலதிகப் பொது முகாமையாளர**
திருமதி. ஆர்.என். ஞாணசேக்கர

## பிரதிப் பொது முகாமையாளர்கள

| | |
|---|---|
| திருமதி. ஆர்.என். ஞாணசேக்கர | முதலீடுகள் |
| திரு. டப்ளியூ.எஸ். திசாநாயக்க | அங்கத்தவர் சேவைகள் |
| திரு. எல்.எச். நிஹால் | நிர்வாகம் மற்றும் மனித வளங்கள் |
| திரு. கே.எஸ். வெலிவிட்ட | உள்ளகக் கணக்காய்வு |
| திரு. என்.டப்ளியூ. விமலவீர | நிதி/ முதலீடுகள |
| திரு. ஏ.ஜே.எம்.எஸ். ஜயசுந்தர | சேகரிப்பு மற்றும் தொழில்தருநர் தொடர்புகள் |

## உதவிப் பொது முகாமையாளர்கள

| | |
|---|---|
| திரு. சீ.மல்லிகாரச்சி | அங்கத்தவர் கணக்குகள் |
| திரு. எச்.எம். செனெவிரத்ன | அங்கத்தவர் சேவைகள் |
| திரு. எம்.எஸ். திசாநாயக்க | சுய தொழில் |
| திரு. எம்.ஏ.கே. அளுத்கமகே | நிதி/ முதலீடுகள |
| திருமதி. எச்.ஏ.வை.ஆர். பெர்னாண்டோ | பங்களிப்பு சேகரித்தல் |
| திரு. டப்ளியூ.எஸ். தர்மசிறி | தகவல் தொழில்நுட்பம் |
| திருமதி. ஆர்.ஏ.எஸ். ரூப்பசிங்க | நிர்வாகம் மற்றும் மனித வளங்கள் |
| திரு. ஜே.கே.பீ. ரஞ்சித | வினைப்படுத்தல் - பிராந்தியம் 1 |
| திரு. பி.ஆர். ஆரியவன்ச | வினைப்படுத்தல் - பிராந்தியம் 11 |



*நிதிச் சந்தைகளில் வழமையான தளம்பல்கள் இருந்தபோதிலும், நாட்டிலுள்ள முதுன்மை ஓய்வூதிய நிதியங்களில் ஒன்றாக நிதியத்தின் நீண்ட கால முதலீட்டு உபாயத்தினால் ஒரு நிலையான வட்டி வீதத்தினை எம்மால் செலுத்த முடிந்தது. எமது நாட்டின் பாரிய பொருளாதார சாத்தியப்பட்டினைக் கருத்திற் கொண்டு எதிர்வரும் ஆண்டுகளில் நிதியத்தினை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.*



# தலைவரின் மீளாய்வு

தலைவரின் மீளாய்வு

2016ஆம் ஆண்டிற்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் (ETF) வருடாந்த அறிக்கையினை முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். நிதியமானது 2016ஆம் ஆண்டில் பல்வேறு தடைகளையும் தாண்டி உறுதியான செயலாற்றுகையைத் தொடர்ந்தது.

மொத்த சொத்தின் பெறுமதி 249 பில்லியன் ரூபாவினை அடைந்ததுடன் மொத்த வருமானம் கடந்த ஆண்டை விட 13% அதிகரிப்புடன் 24.6 பில்லியன் ரூபாவைப் பதவு செய்துள்ளது. நிறுவனத்தின் அடிமட்டம் 10 வீதமான முதலீட்டின் மீதான வருவாயை ஈட்டுவதன் மூலம் இயக்கப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டின் போது முகங்கொடுத்த மந்தமான பங்குச் சந்தை நிலைமைகளுக்கு மத்தியில் ETF அதன் வலுவான நிதி முகாமைத்துவம் மற்றும் முதலீட்டு நடைமுறைகளை எடுத்துக் காட்டி செயலாற்றியமை பாராட்டுக்குரியதாகும். ETF அதன் மேலதிக நிதிகளை பெரும்பாலும் அரச பிணைகளில் முதலிடுவதைத் தொடர்ந்து உரிமையாண்மைகளிலும் தாபனக் கடன் கருவிகளிலும் பன்முகப்படுத்தி, வெளிப்பாடுகளை முறையாக நிர்வகித்தும் வருகின்றது.

நிதிச் சந்தைகளில் வழமையான தளம்பல்கள் இருந்தபோதிலும், நாட்டிலுள்ள முதுன்மை ஓய்வூதிய நிதியங்களில் ஒன்றாக நிதியத்தின் நீண்ட கால முதலீட்டு உபாயத்தினால் ஒரு நிலையான வட்டி வீதத்தினை எம்மால் செலுத்த முடிந்தது. எமது நாட்டின் பாரிய பொருளாதார சாத்தியப்பட்டினைக் கருத்திற் கொண்டு எதிர்வரும் ஆண்டுகளில் நிதியத்தினை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

புலம்பெயர்ந்தோர் மற்றும் சுயதொழில் துறைகளில் விரிவாக்கத்தை ஏற்படுத்துவதற்கான கவனம் செலுத்துவதன் மூலம் நிதியத்தின் செயற்படு அங்கத்துவத்தினை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மறுபுறம் வயது முதிர்ந்தோர் சனத்தொகைப் போக்கு நிதியத்திலிருந்து மீளப்பெறுவது அதிகரிக்கச் செய்யும். எனவே இவ் அபிவிருத்திகளை எதிர்பார்க்கும் நிதித் துறையில் ஒரு செயலூக்கமிக்க வீரனாக ETF நிதியத்தின் பெறுமதியை அதிகரிப்பதற்கு நிதி முகாமைத்துவ உபாயங்களுக்கான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

அதனால், நல்பெறுநர்களுக்காக வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நிதியத்தினை நிர்வகிக்கும் நம்பகமிகு பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு காணப்படும் பொருளாதார

நிலைமைகளிலிருந்து மிகுந்த பயன்களைப் பெறுவதற்கான திறனை ETF கொண்டுள்ளது என்பதை எமது அங்கத்தவர்களுக்கு உறுதிப்படுத்துவதற்கு நான் விரும்புகின்றேன். தொழில்தருநர்களிடமிருந்து சேகரிக்கும் செயன்முறையினை நெறிப்படுத்துவதன் ஊடாக அங்கத்தவர்களுக்கு மிகவும் வினைத்திறன் கொண்ட சேவையினை வழங்குவதற்கு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வருட இறுதியின் போது, முறைமைக்கான தகுதியுள்ள தொழில்தருனர்களில் பல தொழில்தருநர்கள் விரைவாகக் கடன்கொடுத்தல் மற்றும் அங்கத்தவர் கணக்குகளின் அதிக வினைத்திறன்மிக்க முகாமைத்துவம் ஆகியவற்றிற்கு வழிவகுக்கும் முறைமையில் வெற்றிகரமாகப் பதிவு செய்து கொண்டுள்ளதன் மூலம் ETF அதன் அங்கத்தவர்களுக்கு சிறப்பாக சேவையினை வழங்குவதற்கு இயலுமாக்கியுள்ளது.

நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இன்னுமொரு முக்கியமான நடவடிக்கை எதிர்வரும் வருடங்களில் முன்னேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நுஜளுயு செயற்றிட்டம் ஆகும். தொழில்தருநர் பிரதான கோவைகளின் முறைவழியாக்கலை மேம்படுத்துதல் மற்றும் பிரதேச செயலகங்களின் செயலெல்லையினை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலம் கண்காணிப்பு முறைவழியாக்கத்தின் செயற்றிறனை விருத்தி செய்வதை இச்செயற்றிட்டம் இலக்கக் கொண்டுள்ளது. வங்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதன் மூலம் ஈ- வங்கியிடல் வசதிகளைப் பயன்படுத்தும் தொழில்தருநர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2018ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டாகையில், ஒரு காகிதமற்ற சூழலுக்கு மாற்றும் பொருட்டு எல்லா செயற்பாடுகளையும் தன்னியக்கமயப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்து வருகின்ற வருடத்தில் இமேஜ் ஸ்கேனிங் செயற்றிட்டம் செயல்படுத்தப்படும். இச்செயற்றிட்டம் எமது அங்கத்தவர்களுக்குச் சொந்தமான ஏற்கனவே பாரிய அளவில் உள்ள ஆவணங்களை இலத்திரனியல் அமைப்பிற்கு மாற்றுவதை இலக்காகக் கொண்டுள்ளது. பூர்த்தியடையும் இந்நடவடிக்கைகள் நிதியத்தின் உற்பத்தித்திறனைக் கணிசமான அளவில் அதிகரிக்கச் செய்யும். ETF ஆனது ஏனைய அரச அமைப்புக்களுடன் பல்வேறு விதமாக ஒத்துழைத்தது. ETF பங்களிக்காதோரைக் கண்டு பிடிப்பதற்காக EPF உடன் இணைந்தது. மேலும், பயனுறுதிமிக்க சந்தைப்படுத்தல் உபாயங்களைச் செயற்படுத்துவதற்கு சுயதொழிலுடன் தொடர்புடைய உரிய அதிகாரிகளிடமிருந்து உதவி பெறப்பட்டுள்ளது.

இப்பின்னணியில், பணிக்குழாத்தினருக்கு அவர்களது இடைவிடா அர்ப்பணிப்பு மற்றும் கடமையாற்றலுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன். எமது பயணத்தை வெற்றிமிக்கதாக ஆக்குவதற்எம்மில் முழு நம்பிக்கை நம்பிக்கை வைத்துள்ளமைக்கு ETF இன் அனைத்து அங்கத்தவர்களுக்கும் தொழில்தருநர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகினறேன்.



**திரு. மஹிந்த மடிஹஹேவா**
தலைவர/பிரதான நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

# பணிப்பாளர் சபையின் மீளாய்வு

2016 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் மற்றும் அந்நிதிசார் கூற்றுக்களுக்கான கணக்காய்வாளர்களின் அறிக்கை ஆகியவற்றுடனான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய 36ஆவது வருடாந்த அறிக்கையை முன்வைப்பதில் பணிப்பாளர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். இது நற்பரிபாலனத்திற்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிடல் தேவைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்குவதாக உள்ளது.



## நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு

நிறுவனத்தின் நிதிசார் நிலைமை மற்றும் செயலாற்றுகையின் உண்மைத்தன்மை மற்றும் நியாயமான நோக்கினைப் பிரதிபலிக்கும் ETF இன் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்களாவர். 169 முதல் 201 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள வருமானக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, உரிமையாண்மையில் மாற்றங்கள் கூற்று, பணப்பாயச்சல்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் என்பன 1995இன் 15ஆவது இலக்க இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியதிகள் சட்டத்தினால் கட்டளையிடப்பட்டுள்ளவாறு இலங்கை கணக்கீட்டு நியதிகள் SLFRSகள் மற்றும் LKASfளின் தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

மேற்கண்டவற்றின் அடிப்படையில் பணிப்பாளர் சபையானது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி அறிக்கையிடல் முறைமை இலங்கை கணக்கீட்டு நியதிகள் மற்றும் நியதிச்சட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை மற்றும் வெளிவாரி நோக்கங்களுக்கான நிதிக்குற்றுக்களின் தயாரிப்பு செய்யப்பட்டுள்ளன என்பது தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தினை வழங்குவதற்குது என உறுதிப்படுத்துகின்றது.

## பிரதான செயற்பாடுகளின் மீளாய்வு

**தொழில்தருநர் பங்களிப்புக்கள் மற்றும் அங்கத்தவர் கணக்குகள்**

2016ஆம் ஆண்டில் மொத்தம் 12,892 புதிய தொழில்தருநர்கள் அவர்களது பங்களிப்புக்களை நிதியத்திற்கு வழங்கியதுடன், அவர்களில் 5832 பேர் வருட இறுதி வரை செயற்படுவோராக இருந்தனர். அவ்வாறே 2016ஆம் ஆண்டின் போது தொழில்தருநர்களிடமிருந்து அவர்களது ஊழியர்களின் சார்பாக பெறப்பட்ட மொத்த பங்களிப்புக்கள் 2015ஆம் ஆண்டின் 17.9 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 20.0 பில்லியன் ரூபாவாக இருந்தது. மேலும், மீளாய்வாண்டின் இறுதியின் போது அங்கத்தவர் நிதியத்தின் பெறுமதி 218.5 பில்லியன் ரூபாவிலிருந்து 245.6 பில்லியன் ரூபா வரை அதிகரித்தது.

அங்கத்தவர் நலன்கள் மற்றும் நலன்புரி நலன்கள்
2016ஆம் ஆண்டின் போது, 171,801 மீளளிப்புக் கோரல்கள் முறைவழியாக்கப்பட்டதுடன் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையானது 13.5 பில்லியன் ரூபாவாக இருந்தது. 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 162,983 கோரல்கள்

முறைவழிாக்கப்பட்டு 11.5 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டிருந்தது. இவ்வருடத்தில் கோரல் ஒன்றிற்கான சராசரி கொடுப்பனவுத் தொகை கடந்த வருடத்தின் 70,519 ரூபாவிலிருந்து 78,579 ரூபா வரை அதிகரித்தது. 2016ஆம் ஆண்டின் போது, 3,654 நலன் கோரல்கள் முறைவழியாக்கப்பட்டு 299.3 மில்லியன் ரூபா செலுத்தபட்டு இருந்தது. 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொது 3,481 கோரல்கள் முறைவழியாக்கப்பட்டு 180 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டு இருந்தது. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு 2016ஆம் ஆண்டில் 176.74 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த ETF அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு அவர்களது உயர் கல்விக்கு உதவும் வழியாக 42.52 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது.

**அங்கத்தவர் கணக்குகளைப் பேணுதல்**

வருட இறுதியில், நிதியத்துக்கு பங்களிக்கும் செயற்படு மற்றும் செயற்பாடற்ற அங்கத்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஏறக்குறைய 12.5 மில்லியனை எட்டியுள்ளது. நிதியம் அனைத்து செயற்படு மற்றும் செயற்பாடற்ற அங்கத்தவர் கணக்குகளையும் பேணி வருகின்றது. 2016 ஆம் ஆண்டு வரை வருட இறுதியில் 96மூ அங்கத்தவர் கணக்குகள் இற்றைப்படுத்தப்பட்டன. இக்கணக்குகளில் 10 மில்லியன் செயற்பாடற்றவையாகவும் 2.5 மில்லியன் அங்கத்தவர் கணக்குகள் செயற்படுபவையாகவும் உள்ளதுடன் அவற்றிற்கான வருடாந்த அங்கத்தவர் கூற்றுக்கள் இவ்வருடத்தின் பொது உரிய தொழில்தருநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**முதலீடுகள்**

கடந்த வருடத்தை விட 2016ம் ஆண்டில் 9.3% அதிகரிப்பைக் கொண்டதாக, முதலீட்டுக் கலவை 210 பில்லியன் ரூபாவிலிருந்து 229.5 பில்லியன் ரூபா வரையில் அதிகரித்துள்ளது. 2016ஆம் ஆண்டில் சபை முதலீட்டுக் கொள்கையின் வழிகாட்டல்களை கடுமையாகக் கடைப்பிடித்து, மூலதனத்தைப் பாதுகாத்துக் கொண்ட அதேவேளை, நியாயமானதொரு வருவாயையும் பெற்றுக் கொண்டது. முதலீட்டுக் கலவையின் பெரும் பகுதியான ரூபா 194 பில்லியன் (84.5%) அரசாங்கப் பிணைகளில் முதலீடு செய்யப்பட்டதுடன், ரூபா 2.3 பில்லியன் (1%) அரச உத்தரவாதமளிக்கப்பட்ட நிலையான வருமானக் கருவிகளிலும் ரூபா 12.3 பில்லியன் (5.4%) உரிமைப் பங்குகளிலும் ரூபா 5 பில்லியன் (2.2%) ஏனைய முதலீடுகளிலும் முதலீடு செய்யப்பட்டன. சபை பங்கு வியாபாரத்தில் 27.1 மில்லியன் ரூபா ஈட்டியுள்ளதுடன், நீண்ட கால பிடிப்பின் அடிப்படையில் 32.8 மில்லியன் ரூபாவினை ஈட்டியது. முன்பு குறிப்பிட்டுள்ளவாறு, 2016ஆம் ஆண்டின் போது, மேலுள்ளவற்றிற்கு மேலதிகமாக 2015ஆம் ஆண்டில் 21.4 பில்லியன் ரூபாவிற்கு மாறாக, ETF 2.5 பில்லியன் ரூபா அதிகரிப்பான 24 பில்லியன் ரூபாவினை முதலீட்டு வருமானமாக ஈட்டியது.

**சேகரிப்பு மற்றும் தொழில்தருநர் தொடர்புகள்**

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், எல்லா மாவட்டங்களும் உள்ளடங்குமாறு 17 பிராந்திய அலுவலகங்களுடாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் காரணமாக தொழில்தருநர்களின் அங்கத்தவர்கள் 77,842 வரை அதிகரிக்கப்பட்டனர். சபையின் தகவல் தொழில்நுட்ப வலையினூடாக செயற்பாட்டு பணி மற்றும் கண்காணிப்பு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. அதன் பயனாக, 2015ஐ விட 2016ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட பங்களிப்புக்களை 2,151 மில்லியன் ரூபாவால் அதிகரிக்க முடிந்தது.

வர்த்தக வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, சம்பத் வங்கி, ஹற்றன் ந'னல் வங்கி ஆகியவற்றுடகாக இணையத்தள வங்கிச் சேவை மூலமாக பங்களிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் அங்கத்தவர் விபரங்களைப் பெறல் என்பன வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டதுடன் அவ்வகைச் சேகரிப்பு மொத்தச் சேகரிப்பின் 45மூ ஆக இருந்தது. மேலும், வழமையான அடிப்படையில் பிராந்திய அலுவலகள் ஊடாக நடாத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளின் காரணமாக 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016ஆம் அண்டில் இணங்கற் வீதத்தினை அதிகரிக்க நிறுவனத்தினால் முடிந்தது.

மேலும், 2016ஆம் அண்டின் போது பிராந்தி முகாமையாளர்கள் மற்றும் கள அலுவலர்கள் ஆகியோர்களுக்கு ஒட்டு மொத்த ஊழியப்படைக்கும் பொருந்தக்கூடிய தொழிற் சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் தொடர்பில் உள்ளக மற்றும் ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சிகளுக் செயலமர்வுகளும் றடாத்தப்பட்டதுடன், அவ்வாறான நிகழ்ச்சிகள் மூலம் பிராந்திய அலுவலகப் பணிக்குழாத்தினரால் தமது கோட்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியிலான அறிவை விருத்தி செய்து கொள்ள முடிந்தது. பணிப்பாளர் சபையானது இந்த அறிக்கையின் உள்ளடக்கங்களை ஒப்புக் கொள்கின்றது.

**மஹிந்த மடிஹஹேவா**
பணிப்பாளர் சபையின் சார்பாக தலைவரால் கைெயொப்பமிடப்பட்டது.



# ஆளுகை அறிக்கை

ETFB பகுதி அரசாங்க நிறுவனமாக இருக்கும் நிலையில், எல்லா நியிதிச்சட்ட மற்றும் ஒழுங்குமுறை ரீதியான தேவைகளுக்கும் இணங்கக் கூடிய உறுதியான ஆளுகை நடைமுறைகள் அங்கத்தவர்களுக்கு உயர் பெறுமானத்தை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமையும். சபையினுள் வெளிப்படைத்தன்மையினை மிக உயர்ந்த தரத்திற்கு கடைபிடித்தல், நம்பகத்தன்மை மற்றும் இணங்கி ஒழுகுதல் என்பன நன்கு நிறுவப்பட்ட வழிகாட்டல் நெறிமுறைகளாகும். இந்த அறிக்கையானது தாபன ஆளுகையின் உயர்ந்த தரத்தினைப் பேணுவதற் ETFB யின் பணிப்பாளர் சபை எவ்வாறு தம்மை அர்ப்பணித்துள்ளனர் மற்றும் பொறுப்பக்களை ஏற்றுள்ளனர் என்ற தெளிவினை வழங்குகின்றது..




**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு**

- ETF சட்டம்
- நிதிப் பிரமாணங்கள் (அரச)
- பொது முயற்சிகள் வழிபாட்டல்கள் (பொது முயற்சிகள் திணைக்களம்)
- சிறந்த நடைமுறை விதி (பொது முயற்சிகள் திணைக்களம)
- இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்களைக் கண்காணிக்கும் சபைச் சட்டம்
- தேசிய கொள்வனவு வழிகாட்டல்கள்
- சம்பந்தப்பட்ட அரச சுற்றறிக்கைள் (திறைசேரி, பொது நிர்வாக அமைச்சு)

**சட்டங்கள் மற்றும் செயன்முறைகள**

- சபையின் செயன்முறைக் கையேடு மற்றும் கொள்கைகள

**சபையின் செயன்முறைக் கையேடு மற்றும் கொள்கைகள**

- கணக்காய்வு கமிட்டி
- முகாமைத்தவக் கமிட்டி
- முதுலீட்டுக் கமிட்

**கட்டுப்பாடுகள் மற்றும் கண்காணித்தல்**

- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

# தாபன ஆளுகை விவரணம்

| ஆளுகைக் கோட்பாடுகள் | | 2016 இற்கான கருத்துக்கள |
|---|---|---|
| | | **1. பணிப்பாளர் சபை** |
| 1.1. | பணிப்பாளர் சபை | அரசாங்க மற்றும் அதன பங்குதாரர்கள் சார்பாக நிதியத்தின் நிர்வாகத்தில் பணிப்பாளர் சபைக்கு சட்டபூர்வமான பொறுப்பு உள்ளது. |
| 1.1.1. | பணிப்பாளர் சபைக்கான நியமனங்கள | சபையானது அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br>• அமைச்சரினால் நிமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்கள்<br>• நிதி விடயம் தொடர்பாக பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்<br>• வர்த்தக விடயம் தொடர்பாக பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்<br>• இலங்கை பணிகொள்வோர் கழகத்தினால் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்<br>• ஒவ்வொன்றும் 100,000 அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களின் நிறைவேற்றுக் குழுவுடன் ஆலோசித்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் |
| 1.1.2. | பணிப்பாளர் சபைக் கூட்டங்கள | சபையானது வழமையாக ஒரு மாத இடைவெளியில் மற்றும் தேவைப்படும் போது ஒன்றுகூடும். இவ்வாண்டினுள் சபை பதின்மூன்று (13) தடவைகள் ஒன்றுகூடியது. சபைக் கூட்டங்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக சபைக் கூட்டங்களுக்கு மூன்று நாட்களுக்குக் குறையாத வேலை நாட்களுக்கு முன்னர் மற்றும் நன்கு முன்கூட்டியே சபை குறிப்பாணைகள் வழங்கப்படுகின்றன. 2016ஆம் ஆண்டில் சபைக் கூட்டங்களின் போதான வரவு கீழே தரப்பட்டுள்ளது. |




| | | |
|---|---|---|
| 1.1.3. | பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள | பொதுமக்கள் வளங்களின் பாதுகாவலனாகப் பணிப்பாளர் சபையானது அதன் கட்டாயமான உரிமைகளையும் பொறுப்புக்களையும் நடைமுறைப்படுத்தல் வேண்டும். முறையான திட்டமிடலின்றி மேற்கொள்ளப்படும் எந்தவிதமான முடிவுகளும் நடவடிக்கைகளும் பொது மக்களைப் பெருமளவில் பாதிக்கும் என்பதால் சபையானது அதன் பாரதுரமிக்க பொறுப்புக்கள் குறித்து எல்லா வேளைகளிலும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.<br>பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் பிரச்சினைகளும்:-<br>• கொள்கையாக்கம்<br>• நிதியத்தின் செயலாற்றுகையைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்<br>• துணை.்.கூட்டு மற்றும் ஏனைய முதலீடுகளின் செயலாற்றுகையைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்<br>• வருடாந்த செயலாற்றுகை மீள்நோக்கு<br>• தொழிற்படு மூலதனம்<br>• காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்<br>• பணிப்பாளர் சபை குறிப்பாணைகள |



| ஆளுகைக் கோட்பாடுகள் | | 2016 இற்கான கருத்துக்கள |
|---|---|---|
| 1.1.4. | சபையின் செயலாளர் | பணிப்பாளர் சபைக்குத் தேவையான நம்பகமான மற்றும் நம்பகமான மற்றும் பொருத்தமான தகவல்களை உரிய நேரத்தில் வழங்குவதை உறுதிப்படுத்தவதற்காக மற்றும் சபை நடைமுறைகள், சட்டங்கள் மற்றும் பொருத்தமான சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் இணங்கி ஒழுகுவது குறித்து சபைக்கு ஆலோசனை வழங்குவதற்காகப் பொறுப்பாகவுள்ள தொழில்வாண்மை தகுதியுள்ள தாபனச் செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுமதி உண்டு. உரிய நேரத்தில் சபை குறிப்பாணைகளை வழங்குவதுடன் சபையின் வினைத்திறன்மிக்க செயற்பாட்டினை மற்றும் சபைக் கூட்டங்கள் கொண்டிருக்க வேண்டிய நடைமுறைகளைச் செயலாளர் உறுதிப்படுத்துவார். |
| 1.1.5. | சபைச் செயலாளரின் வகிபங்கு | சபை நடைமுறைகள் பின்பற்றுவது குறித்து சபைச் செயலாளர் உறுதிப்படுத்த வேண்டியதுடன், சபை நடைமுறைகள் டொடர்பான சட்டரீதியான தேவைகளைக் குறித்து வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக செயலாளரின் கடமைகள் :<br>• சபைக் கூட்டங்களின் அறிவித்தல், கூட்ட நடவடிக்கைக் குறிப்புக்கள், சபைக் குறிப்பாணைகள் ஆகியவற்றுடன் ஏனைய உரிய ஆவணங்களைச் சுற்றனுப்புதல்.<br>• சபைத் தீர்மானங்கள் தொடர்பிலான பின்தெதாடர் நடவடிக்கைகள்<br>• உள்ளக மற்றும் வெளிவாரித் தகவல்களை வழங்குவதன் மூலம் சபை உறுப்பினர்களுக்கு உதவுதல |
| 1.1.6. | சபைச் சமநிலை | (நிதி, வர்த்தகம், பணிகொள்வோர் சம்மேளனம், தொழிற்சங்கம் போன்ற) வேறுபட்ட துறைகளிலிருந்து வரும் பணிப்பாளர்கள் சபைக்கு சமநிலையான தளத்தினை வழங்குவர். அவர்கள் ஒவ்வொரு விடயமும் தொடர்பாக அவர்களது சுதந்திரமான கருத்தக்களைத் தெரிவிப்பர். |
| 1.1.7. | பயனுறுதிமிக்க சபைக் கூட்டத்திற்கான போதிய கால அவகாசம | சபையானது வழமையாக மாதாந்த இடைவெளியில் கூடுகின்றது. ஒரு சபைக் கூட்டத்திற்குச் செலவிடப்படும் சராசரி நேரம் 3 மணித்தியாலங்களாகும். |
| **1.2.** | **தலைவர்/பிரதான நிறைவேற்று அதிகாரி** | |
| 1.2.1. | தலைவரின் நியமனங்கள | சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியானசபையின் தலைவர் அமைச்சரினால் நியமிக்கப்படுவார். |
| 1.2.2. | தலைவரின் பொறுப்புக்கள் | ஒட்டுமொத்த நிர்வாக அமைப்பிலும் முக்கியமான இணைப்பாளராக உள்ள தலைவர்.். பிரதான நிறைவேற்று அதிகாரி அணியையும் நிறுவனத்தையும் சரியான திசையில் வழிநடத்திச் செல்வார். அவர் முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு முக்கிய நடவடிக்கைகள் தொடர்பிலான பொள்கைகளைச் செயற்படுத்துதல் மற்றும் திட்டங்களையும் நிகழ்ச்சிகளையும் தயாரித்தல் ஆகியவற்றிற்குப் பொறுப்பாயுள்ளார். |
| | | **2. கணக்கியல் மற்றும் கணக்காய்வு** |
| **2.1.** | **நிதி அறிக்கையிடல** | சபையின் நிதிக் கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரமும் மற்றும் கண்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களைக் கண்காணிக்கும் சபைச் சட்டத்திற்கு இணங்கவும் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படுகின்றன. |
| 2.1.1. | நியதிச்சட்ட மற்றும் ஒழுங்குவிதி சார் அறிக்கையிடல் | 1971இன் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) பிரிவின் மற்றும் சட்டவாக்கத்தின் பிரகாரம் கணக்காய்வளர் தலைமை அதிபதியே அனைத்து அரச தாபனங்களினதும் கணக்காய்வாளராக இருத்தல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமை அதிபதி தமது வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டிற்குள் செயற்படக்கூடிய தகுதிமிக்க எவரேனும் கணக்காய்வாளரை நியமிக்கலாம். |
| 2.1.2. | நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வாளரின் பொறுப்பு | கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கையை உசாவவும். |
| 2.1.3. | வருடாந்த அறிக்கையில் பணிப்பாளர்களின் அறிக்கை | பணிப்பாளர் சபையின் மீளாய்வினை உசாவவும். |
| 2.1.4. | நிதிக் கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு குறித்து கூற்று | பணிப்பாளர் சபையின் மீளாய்வினை உசாவவும். |
| 2.1.5. | முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு | முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வினை உசாவவும். |

| ஆளுகைக் கோட்பாடுகள | | 2016 இற்கான கருத்துக்கள |
|---|---|---|
| 2.2. | உள்ளகக் கட்டுப்பாடு | |
| 2.2.1. | உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடு | ETFB அதன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினைக் கொண்டுள்ளது. |
| 2.2.2. | கணக்காய்வுக் கமிட்டியினால் உள்ளகக் கட்டுப்பாட்டு பயனுறுதித் தன்மையின் மீளாய்வு | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் உள்ளடங்கலாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் பயனுறுதித்தன்மை குறித்து கணக்காய்வுக் கமிட்டிக்கு தொடர்ந்தும் அறிக்கை அளிக்கின்றது. |

## துணைக் கமிட்டிக

மிகக் கவனமான கலந்துரையாடல்களின் பின்னர் மேற்கொள்ளப்படும் பயனுறுதிமிக்க செயற்பாடுகளுக்கான தீர்மானங்களை உறுதிப்படுத்தவதற்கு சபை மீதான முக்கியமான தாக்கத்தைக் கொண்டுள்ள விடயங்களைக் கையாள்வதற்குப் பொருத்தமான நபர்ககளைக் கொண்ட கமிட்டிகளை அமைப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். சபை கொண்டுள்ள சில முக்கியமான கமிட்டிகளாவன:-

### I. கணக்காய்வுக் கமிட்டி

இக்கமிட்டி குறைந்தபட்சம் நிறைவேற்று சபை உறுப்பினர்களல்லாத மூவரைக் கொண்டிருக்க வேண்டியதுடன் முடிந்தால் திறைசேரிப் பிரதிநிதி ஒருவரால் அல்லது நிதி முகாமைத்துவத் திறன்களைக் கொண்ட ஒருவரால் தலைமைத் தாங்கப்படுதல் வேண்டும். இந்த கமிட்டி வழக்கமான அடிப்படையில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை அவைக் கூட்டுநராக பிரதான உள்ளகக் கணக்காய்வாளருடன் ஒன்றுகூடுவதுடன், தேவையான நடவடிக்கைகளுக்காக அதன் அவதானிப்புக்களை பரிந்துரைகளுடன் பணிப்பளர் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஏனையவற்றிற்கு இடையிலான இக்கமிட்டியின் நோக்கெல்லையாக அடங்குபவை பின்வருமாறு :-

- உள்ளகக் கணக்காய்வு அலகின் பொறுப்புக்களை முடிவுசெய்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்வு செய்தல்
- நிறுவனத்தின் எல்லா செயற்பாடுகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் மீளாய்வு செய்தல்
- செலவுப் பயனுறுதிக்காகவும் வீண் செலவினங்களை இல்லாதொழிக்கவும் வழமையான இடைவெளியில் செயலாற்றுகையை மீளாய்வு செய்தல்
- வெளிப்புற கணக்காய்வாளர்களுடன் தொடர்புகொள்ளல் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிர்வாகக் கடிதங்களைப் பின்பற்றி ஒழுகுதல்
- சட்டங்கள், ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றுடன் இணங்கி நடப்பதை உறுதிப்படுத்தல்
- கணக்கீட்டு நியமங்களுடன் நிதிக் கூற்றுக்கள் இணங்கிச் செல்வதை உறுதிப்படுத்தவதற்கு மீளாய்தல்
- உள்ளகக் கணக்காய்வு.ஃ.வெளிவாரி கணக்காய்வாளர் அறிக்கைகள், நிர்வாகக் கடிதங்கள் என்பவற்றை மாற்று நடவடிக்கைகளுக்காக மீளாய்தல்
- பொது முயற்சிகள் தொடர்பான கமிட்டியின் பரிந்துரைகள்.ஃ.அறிவுறுத்தல்களின் செயற்படுத்தலை மீளாய்வு செய்தல்
- வருடாந்த அறிக்கையில் உள்ளடக்குவதற்கு கமிட்டியின் கண்டுபிடிப்புகள் குறித்து அறிக்கை தயாரித்தல்

**கணக்காய்வுக் கமிட்டியின் அமைப்பு**

- **திருமதி சம்பா பாலசூரிய**
  கணக்காய்வுக் கமிட்டியின் தலைவர்.ஃ.பணிப்பாளர்
  நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்
- **திருமதி ஷியெதா சேனாரத்ன**
  மேலதிகச் செயலாளர்.ஃ.பணிப்பாளர்
  கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரால்
  நியமிக்கப்பட்டவர
- **திரு. பீ. ரணவக்கஆரச்சி**
  பணிப்பாளர்
  தொழிற்சங்கப் பிரதிநிதி
  மேலதிக பொது முகாமையாளர
  எல்லா பிரதிப் பொது முகாமையாளர்கள் மற்றும் எல்லா உதவிப் பொது முகாமையாளர்கள

### II. முகாமைத்துவக் கமிட்டி

நிதியத்தின் செயற்பாடுகளின் முகாமைத்துவத்திற்கான பொறுப்பு தலைவர் மற்றும் சிரேட்ட முகாமைத்துவத்துடன் உள்ளது. பணிப்பாளர் சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களை பயனுறுதிமிக்கதாகச் செயற்படுத்துவதற்கு அவர்கள் பொறுப்பாயுள்ளனர். நன்கு கவனத்திற்கொண்ட தீர்மானங்களைப் பெறுவதற்கு இயலுமாக்க சபைக்கு தகவல்களையும் தேவையான விளக்கங்களையும் தலைவரும் சிரேட்ட முகாமைத்துவக் குழுவும் வழங்கும். சபையின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதுடன் நிதியத்தின் பயனுறுதிமிக்க முகாமைத்துவத்திற்கு செயற்படு திட்டங்கள், வரவுசெலவுகள், முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளைப் பேணுதல் ஆகியவற்றை அவர்கள் முறைப்படுத்துவார்கள்.

எனவெ, பருவகால முன்னேற்றக் கண்காணிப்பிற்காக சபையிலுள்ள முக்கியமானதொரு கருவியாக முகாமைத்தவக் கமிட்டி உள்ளது. இக்கமிட்டி கவனஞ செலுத்தவேண்டிய முக்கிய விடயங்களாக உள்ளடங்க வேண்டியவை:-

- இன்னும் செயற்படுத்தப்படாத முன்னைய கூட்டங்களில் எடுத்த சபைத் தீர்மானங்கள்
- மாற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவசியமான விலகல்களுக்கான காரணங்களை இனங்காணல் மற்றும் இலக்குகளுக்கு எதிரான உண்மையான செயலாற்றுகைகளை மீளாய்தல்
- பணிப்பாய்ச்சல்களின் விமர்சனமிக்க மதிப்பீடு மற்றும் எதிர்வரும் காலாண்டிற்கான திட்டமிடப்பட்ட தேவைகள்
- கடன் .ஃ.காசு முகாமைத்தவம்
- அவசரக் கொள்வனவுகளைத் தவிர்ப்பதற்கு கொள்வனவுத் தாமதங்களை (ஏதேனும் இருப்பின்)
பின்னூட்டம் செய்தல்
- நீர், நுவரு மற்றும் வரிகள் போன்ற சட்ட ரீதியான கட்டணங்களின் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தல்
- சபையினால் தீர்மானங்களை எடுத்தலை எளிதாக்குவதற்கு நியாயப்படுத்துகைகளுடன் தேவையான தொழில்நுட்ப மேம்பாடு
- மேம்படுத்தல் .ஃ.திருத்தியமைத்தல் ஆகியவற்றிற்கான மாற்று நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்கு ஊடகங்கள் ஊடான முறைபாடுகள் உள்ளடங்கலாக வாடிக்கையாளர் திருப்தி .ஃ.அதிருப்தி குறித்து பின்னூட்டஞ் செய்தல்
- திருத்தப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய ஏதேனும் புதிய முன்மொழிவுகள்
- நிர்வாகம் மற்றும் தாபனத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்களும்
- வேறு ஏதேனும் நாளாந்த செயற்பாட்டுப் பிரச்சினைகள

**2016 இல் முகாமைத்துவக் கமிட்டிக் கூட்ட வரவு**




### III. முதலீட்டுக் கமிட்டி

சபையின் நிதிக கடப்பாடுகளை செலுத்துவதற்கு திரவத்தன்மையினை நிர்வகித்தல் மற்றும் அதிகாரம் பெற்ற முதலீடுகளைப் பயன்படுத்தி உகந்த முதலீட்டு வருவாயினை வழங்குதல் ஆகியவற்றுடன் சபையின் நிதியினை முதலீடு செய்வதில் சபையின் முதன்மை நோக்கமாவது அசல் தொகையின் பாதுகாப்பினை உறுதி செய்வதாகும். எனவே முதலீட்டுக் கமிட்டி அம்மூன்று இலக்குகளையும் உறுதிப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது.

- **பாதுகாப்பு**
  மூலதனத்தின் பாதுகாப்பே சபையின் முதன்மைமிகு நோக்கமாகும். மூலதனத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு முதலீட்டுக் கலவையின் கணிசமான பகுதியினை சிறைகாப்புடைய அரசாங்க பிணையப் பத்திரங்களில் முதலீடு செய்யப்படும்.
- **திரவத்தன்மை**
  நியாயமாகத் திட்டமிடப்பட்ட எல்லா செயற்பாட்டுத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு சபையினால் முடியுமாவதற்கு முதலீட்டுக் கலவையானது போதுமான திரவமாக இருத்தல் வேண்டும்.
- **முதலீடு மீதான வருவாய்**
  அதிகாரம்பெற்ற முதலீட்டுக் கருவிகளைப் பயன்படுத்தி இருக்கும் உயர் வருவாயினைப் பெறுவதற்கு முதலீட்டுக் கலவை வடிவமைக்கப்படுதல் வேண்டும்..

முதலீட்டுக் கமிட்டி நாளாந்த அடிப்படையில் ஒவ்வொரு வேலை நாளிலும் ஒன்று கூடக்கூடிய எட்டு உறுப்பினர்களைக் கொண்டது. சந்தை நிலைமையை அடிப்படையாகக் கொண்டு நிதியத்திலிருந்து பொருத்தமான முதலீடுகளை அவர்கள் தீர்மானிப்பர்.

## துணைக் கமிட்டிகள் நிறைவேற்றுச் சுருக்கம்

| உப கமிட்டிகள் | செயலெல்லை | கூட்டமைவு |
|---|---|---|
| I. | • உள்ளகக் கட்டுப்பாடுகளை மீளாய்தல்<br>• உள்ளகக் கணக்காய்வினை மீளாய்தல்<br>• வெளிவாரி கணக்காய்வினை மீளாய்தல்<br>• நிதிக் கூற்றுக்களை மீளாய்தல் | • மூன்று பணிப்பாளர்கள்<br>• எல்லா பிரதிப் பொது முகாமையாளர்களும் எல்லா உதவிப் பொது முகாமையாளர்களும |
| II. முகாமைத்துவக் கமிட்டி | • செயற்பாட்டுப் பிரச்சினைகளை மீளாய்தல்<br>• தேவையான மேம்பாடுகளை மீளாய்தல்<br>• செயலாற்றுகைகளை மீளாய்தல | • தலைவர்<br>• தொழிற்படு பணிப்பாளர்<br>• சிரேட்ட முகாமைத்துவம் |
| II. முதலீட்டுக் கமிட்டி | • சபை முதலீட்டுக் கொள்கை<br>• முதலீட்டுக் கலவைகள் மற்றும் அவற்றின் செயலாற்றுகை<br>• தற்போதைய சூழற் காரணிகளை மீளாய்தல | **முதலீட்டுக் கமிட்டி**<br>• திறைசேரி பிரதிநிதிகள்<br>• தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் பிரதிநிதி<br>• மேலதிக பொது முகாமையாளர்<br>• பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)<br>• பிபொமு (முதலீடுகள்)<br>• பிபொமு (உள்ளகக் கணக்காய்வு) - அவதானிப்பாளர்<br>**உரிமைப்பங்கு கமிட்டி**<br>• உதவிப் பொது முகாமையாளர் (நிதி)<br>• நிதிப் பிரிவிலிருந்து இரண்டு முகாமையாளர்கள்<br>• மூன்று முதலீட்டு பகுப்பாய்வாளர்கள் |



# இடர்நேர்வு முகாமைத்துவ அறிக்கை

### இடர்நேர்வு முகாமைத்தவம

இலங்கையில் முதன்மையான ஓய்வூதிய நிதியங்களில் ஒன்றாக இருக்கும் ETF மூலதனத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதுடன், உச்ச இளைப்பாற்று நலன்களை வழங்குவதற்கு தனியார் துறை மற்றும் பகுதி அரசாங்க ஊழியர்களின் நீண்ட கால சேமிப்புக்களை நிர்வகிக்கின்றது. கொழும்பு பங்குச் சந்தையின் சந்தை மூலதனமயமாக்கத்தின் 0.3%இனைக் கொண்டுள்ளதுடன் அரசாங்கப் பிணையப் பத்திரங்களில் கணிசமான அளவினைக் கொண்டிருப்பதனாலும் ETF நிதித் துறையில் முக்கியமானதொரு நிறுவனமாகும். அதனால், நிதியத்துடன் தொடர்புடைய இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீது முகாமைத்துவம் மிகுந்த கவனஞ் செலுத்துகின்றது.

ETF இனால் முகங்கொடுத்த முக்கிய இடர்நேர்வுகளாவன கடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, செயற்பாட்டு இடர்நேர்வு என்பனவாகும்.

### கடன் இடர்நேர்வு

கடன் இடரநேர்வானது கடன்பெறுவோனிடமிருந்து தேவையான கொடுப்பனவுகளைச் செலுத்தவதற்கு தவறுவதால் ஏற்படும் கடனைத் திருப்பிச் செலுத்துவதன் இடர்நேர்வாகும். இடர்நேர்வற்ற முதலீடுகள் எனக் கருதப்படும் அரச பிணையப்பத்திரங்களில் 84.5 வீத முதலீடுகள் செய்யப்பட்டிருந்ததால் (2016 திசெம்பர் 31ஆந் திகதியாகையில்) நிதியத்தின் கடன்இடர்நேர்வு குறைவாக இருந்தது. பல்வேறு முதலீட்டுக் கலவையின் 1வீதமாகக் கருதப்படும், தாபனத் தொகுதிக்கடனிலிருந்து எழும் கடன் இடர்நேர்வு, முதலீட்டுத் தரத் தாபனக் கடன் கருவிகளில் மாத்திரம் நிதியம் முதலீடு செய்வதால் குறைவாக உள்ளது. அவ்வாறான முதலீடுகள் முதலீட்டாளர் விகிதங்கள் மற்றும் ஏனைய இடர்நேர்வுக் காரணிகளை நன்கு கவனத்திற்கொண்டதன் பின்னரே மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், நிதியத்தின் 0.03 வீதமாக அனுமானிக்கக்கூடிய எல்லா நேர்மாற்று ரெப்போ முதலீடுகளும் போதிய அரசாங்க பிணையப் பத்திரங்களால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளன. அதனால் ETF இன் கடன் இடர்நேர்வு மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது.

### சந்தை இடர்நேர்வு

நிதிச் சந்தைகளில் உள்ள தளம்பல்களின் காரணமாக எழும் இடர் நேர்வே சந்தை இடர்நேர்வாகும். தற்போது, நிதியத்தின் மீதாக நேரடி பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய சந்தை இடர்நேர்வுகளாவன வட்டி வீத இடர்நேர்வு மற்றும் உரிமைப்பங்கு இடர் நேர்வும் ஆகும். சந்தை வட்டி வீதம் அதிகரிக்கும் போது திறைசேரி முறி போட்போலியோவின் பெறுமதி வீழ்ச்சியடைகின்றது (விலை இடர்நேர்வு) மற்றும் வட்டி வீதம் குறைவடையும் போது நிதியம் குறைந்த வட்டி வீதத்தில் மீள்முதலீடு செய்ய வேண்டி ஏற்படும் (மீள்முதலீட்டு இடர் நேர்வு). எவ்வாறெனினும், வேறுபட்ட முதிர்வுகள் மற்றும் பொருத்தமான விளைச்சல்களை தெரிவு செய்யத் திறைசேரி முறிகளால் இவ்விடர்நேர்வு அவ்வப்போது நிர்வகித்துள்ளது. உரமைப்பங்கு இடர் நேர்வானது குறிப்பிட்ட முதலீட்டில் உரிமையினைக் கொண்டிருக்கும் நிதியத்தினால் முகங்கொடுக்கும் இடர் நேர்வினைக் குறிக்கின்றது. பங்கு விலைகளில் வீழ்ச்சி காரணமாக உரிமைப்பங்கு போர்ட்போலியோவின் பெறுமதியில் குறைவு ஏற்படுவதால் அவ்வாறு ஏற்படலாம். இவ்விடர் நேர்வு வங்கியிடல், நிதி மற்றும் காப்புறுதி, பல்வகைப்பட்ட பங்குகள், உற்பத்தி செய்தல், சக்தி மற்றும் பானங்கள் போன்ற வேறுபட்ட துறைகளுள் உரிமைப்பங்கு போர்ட்போலியோ மற்றும் பல்வகைப்படும் உரிமைப்பங்கு போர்ட்போலியோ ஆகியவற்றின் மீது வரையறைகளை ஏற்படுத்தவதன் மூலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அடிப்படைகளுக்கு மேலதிகமாக கருமபீடங்களின் முகாமைத்துவத் தரம் முதலீடு செய்வதற்கு முன்னர் மதிப்பீடு செய்யப்படுகின்றது. போர்ட்போலியோவின் வெளிப்பாடு நிதியத்தின் மொத்த போர்ட்போலியோவின் 5.4 வீதத்தினை மாத்திரம் குறிக்கின்ற வேளையில் ஒட்டு மொத்தத்தில் உரிமைப்பங்கு போர்ட்போலியோ மீதான சந்தை இடர்நேர்வானது ஒப்பீட்டளவில் குறைவாகும்.

### திரவத்தன்மை இடர்நேர்வு

திரவத்தன்மை இடர் நேர்வு என்பது குறுகிய கால நிதிக் கேள்விகளைப் பூர்த்தி செய்ய முடியாமையினால் எழும் இடர் நேர்வாகும். இழப்பொன்றை விரைவாகத் தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு வாங்கவோ அல்லது விற்கவோ முடியாத முதுலீட்டொன்றின் சந்தைப்படுத்தல் பற்றாக்குறையினால் இது பாதிக்கப்படும். நிதியத்தின் திரவத்தன்மை நிலைமையினை மேம்படுத்தல் மாதத்திற்கு ஒரு முறை சராசரியாக 548 மில்லியன் நேர்மறை காசுப்பாய்ச்சலை மீளளித்தலின் பின்னரான தேறிய பங்களிப்பு அடையும். வருவாய் மற்றும் முதிர்வு வருவாய்கள் போன்ற ஏனைய காசுப் பாய்ச்சல்களைக் கருத்திற் கொண்டு 2016ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த காசுப் பாய்ச்சலின் வீதமாக வருடாந்த மீளளித்தல் கொடுப்பனவுகள் சராசரி 67% ஆக இருந்தது. மேலும், உயர் திரவ அரசாங்க பிணையப்பத்திரக் கலவை இருக்கின்றமை எந்த திரவத்தன்மைக் கட்டுப்பாடிற்கும் எதிராக மேலதிக பாதுகாப்பொன்றை வழங்குகின்றது. நாளாந்த திரவத்தன்மை முகாமைத்துவக் கருவியாக, நுவுகு நியாயமான வருவாயினை ஈட்டுவதுடன் நாளாந்த அடிப்படையில் போதிய நிதிகளைப் பேணுவதற்கு ஒரே நாள் ரிப்போ சந்தையில் முதலீடு செய்யும். அதனால், நுவுகுஇன் திரவத்தன்மை இடர் நேர்வும் குறைவாகவே காணப்படுகின்றது.

### செயற்பாட்டு இடர் நேர்வு

செயற்பாட்டு இடர் நேர்வு என்பது கம்பனி செயற்பாடுகளில் உள்ளார்ந்த இடர் நேர்வாகும். இது நிதியிடல் மற்றும் முறைப்படுத்திய இடர் நேர்வினைத் தீர்மானித்ததன் பின்னர் மீதமுள்ள இடர்நேர்வாகுவதுடன், உள்ளக செயன்முறைகள், மக்கள் மற்றும் முறைமைகளில் உள்ள தடங்கல்களின் காரணமாக ஏற்படும் இடர் நேர்வுகளும் உள்ளடங்கும். நிதியத்தின் செயற்பாட்டு இடர் நேர்வுகளின் பிரதான மூலங்கள் தொழில்நுட்பம் தொடர்பான இடர் நேர்வு, மனித தவறுகள், தலையீடுகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் எழும் இடர் நேர்வு ஆகியவற்றை உள்ளடக்கும். செயற்பாட்டு நடவடிக்கைகள் சுதந்திரமான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்பட்டு கணக்காய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டவைகள் உடனடியாக மாதாந்த அடிப்படையில் காணப்படும் பலவீனங்கள் மற்றும் விலகல்களைத் தீர்ப்பதற்கு கலந்துரையாடப்படும்.

# நிதித் தகவல்கள்

விபரமான வருமானக் கூற்று

நிதி நிலைமைக் கூற்று

உரிமைப்பங்கு மாற்றத்திற்கான கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்று

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள

# நிதிக்கூற்றுக்கள்

# 2016

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**
**இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விபரமான வருமானக் கூற்று**
**2016, திம்பெர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது**

| | | குழு | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2016 திசெம்பர் 31 | 2015 திசெம்பர் 31 | 2016 திசெம்பர் 31 | 2015 திசெம்பர் 31 |
| | குறிப்பு | ரூபா. '000 | மீள்குறி-க்கப்பட்ட ரூபா. '000 | ரூபா. '000 | மீள்குறி-க்கப்பட்ட ரூபா. '000 |
| **மொத்த வருமானம்** | | | | | |
| வட்டி வருமானம் | 5 | 23,530,300 | 20,277,559 | 23,492,350 | 20,274,204 |
| (-) வட்டிச் செலவினம்- 3.0□ | | (6,759,768) | (6,013,817) | (6,759,768) | (6,013,817) |
| (ETF சட்டத்தின் 22ஆவது பிரிவின் பிரகாரம்) | 6 | 1,114,228 | (78,146) | - | - |
| தேறிய வியாபார வருமானம் | 7 | 486,194 | 360,582 | 486,194 | 360,582 |
| பங்கிலாப வருமானம் | 8 | 68,592 | 833,850 | 68,592 | 833,850 |
| நட்டம்/இலாபத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் மீதான ஆதாயம்/இழப்பு | 9 | 540,511 | 332,623 | 531,650 | 320,139 |
| | | **18,980,056** | **15,712,651** | **17,819,018** | **15,774,958** |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவினஙகள** | | | | | |
| தனிநபர் செலவினங்கள் | 10 | 1,059,412 | 1,048,211 | 985,963 | 994,389 |
| நிர்வாகச் செலவினங்கள் | 11 | 161,514 | 147,519 | 140,819 | 132,608 |
| நிதிச் செலவினங்கள் | 12 | 7,967 | 14,336 | 2,904 | 1,988 |
| அங்கத்தவர் செலவினங்கள் | 13 | 454,466 | 429,610 | 454,466 | 429,610 |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன்கழிப்பு | 14 | 40,660 | 43,515 | 15,290 | 16,896 |
| நடப்பு ஆண்டில் அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி | | 173,630 | 148,737 | 173,630 | 148,737 |
| உரிமையாண்மை முதலீடுகளின் பெறுமதி இழப்பு | 19 | 283 | - | 283 | - |
| | | **1,897,931** | **1,831,929** | **1,773,355** | **1,724,228** |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | **17,082,125** | **13,880,722** | **16,045,663** | **14,050,730** |
| வருமானவரிச் செலவினங்கள் | 15 | (2,733,111) | (2,007,460) | (2,394,498) | (2,060,646) |
| **ஆண்டிற்கான இலாபம** | | **14,349,014** | **11,873,262** | **13,651,165** | **11,990,084** |
| **இலாபம் குறிக்கக்கூடியது:** | | | | | |
| கம்பனி பங்குதார்கள் | | 14,279,229 | 11,884,945 | 13,651,165 | 11,990,084 |
| கட்டுப்பாடற்ற வட்டிகள் | | 69,785 | (11,682) | - | - |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **14,349,014** | **11,873,262** | **13,651,165** | **11,990,084** |
| **நிறுத்தி வைத்த இலாபம் மு.ஃ.கொ** | | **3,317,869** | **18,090** | **3,317,869** | **18,090** |
| ஒதுக்கீட்டுக்கு கிடைககக்கூடிய இலாபம் | | 14,349,014 | 15,082,088 | 13,651,165 | 15,327,413 |
| **ஒதுக்கீட்டுக்கு கிடைககக்கூடிய மொத்த இலாபம்** | | **17,666,883** | **15,100,178** | **16,969,034** | **15,345,503** |
| கழிக்க: உத்தேசிக்கப்பட்ட பகிர்வு - பங்கிலாபம் 6.0மு | | 13,519,536 | 12,027,634 | 13,519,536 | 12,027,634 |
| கழிக்க: பங்கிலாபம் - இலங்கை உப்பு | | 180,000 | 7,875 | - | - |
| **பகிர்வின் பின்னரான இலாபம்** | | **3,967,347** | **3,064,669** | **3,449,498** | **3,317,869** |

169 முதல் 201 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்ககள் இந்நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும்.
சரி என உறுதிப்படுத்தப்பட்டது.

**எம்.ஏ.வீ. குமுதுனீ**
நிதி முகாமையாளர்

**என்.டப்ளியூ. விமலவீர**
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

பணிப்பாளர் சபை இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் தொடர்பில் பொறுப்புடையவர்கள் சபைக்காகவும் சபை சார்பாகவும் அனுமதித்து கையொப்பமிடப்பட்டது.

**மகிந்த மடிகஹேவா**
தலைவர்ஃநிறைவேற்று அதிகாரி

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**
**இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விபரமான வருமானக் கூற்று**
**2016, திம்பெர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது**

| | | குழு | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2016 திசெம்பர் 31 | 2015 திசெம்பர் 31 | 2016 திசெம்பர் 31 | 2015 திசெம்பர் 31 |
| | குறிப்பு | ரூபா. '000 | மீள்குறி-க்கப்பட்ட ரூபா. '000 | ரூபா. '000 | மீள்குறி-க்கப்பட்ட ரூபா. '000 |
| **ஏஜனுயு வீபுருமுர்னு வருமுர்னும்** | | | | | |
| **விபரமான வருமானக் கூற்றுக்கு மீள்வகைப்படுத்தக்கூடிய அல்லது மீள்வகைப்படுத்தப்படும் உருப்படிகள்** | | | | | |
| நிதிக்கருவிகள் ஒதுக்கு விற்பனைக்கு கிடைக்கக் கூடியவைக்கு மாற்றல் | | (964,030) | 60,425 | (964,030) | 60,425 |
| விற்பனைக்குக் கிடைக்கக்கூடியவை ஒதுக்கு (அலகுகள்) | | (3,846) | - | (3,846) | - |
| **விபரமான வருமானக் கூற்றுக்கு மீள்வகைப்படுத்தப்படாத உருப்படிகள்** | | | | | |
| இளைப்பாற்று நலன் கடப்பாடுகள் மீதான காப்பீட்டு ஆதாயம்ஃ (இழப்பு) | | 500 | (29,794) | 500 | (29,794) |
| ஆண்டிற்கான ஏனைய விபரமான வருமானம் ஃ(செலவினங்கள்) மீதான வருமான வரி | | - | - | - | - |
| **தேறுரீயு வுரீ ஆணுடீறுகுர்னு ரேர்த்து ஏஜனுயு வீபுருமுர்னு வருமுர்னும்** | | **(967,376)** | **30,631** | **(967,376)** | **30,631** |
| **தேறுரீயு வுரீ ஆணுடீறுகுர்னு ரேர்த்து வீபுருமுர்னு வருமுர்னும்** | | **13,381,638** | **11,903,893** | **12,683,789** | **12,020,715** |
| **குறிக்கப்படக்கூடியவைக்கு மொத்த விபரமான வருமானம்** | | | | | |
| கம்பனியின் பங்குதாரர்கள் | | 13,311,853 | 11,915,576 | 12,683,789 | 12,020,715 |
| கட்டுப்படுத்தப்படாத வட்டிகள் | | 69,785 | (11,682) | - | - |
| **தேறுரீயு வுரீ ஆணுடீறுகுர்னு ரேர்த்து வீபுருமுர்னு வருமுர்னும்** | | **13,381,638** | **11,903,893** | **12,683,789** | **12,020,715** |

169 முதல் 201 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்ககள் இந்நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும்.
சரி என உறுதிப்படுத்தப்பட்டது.

.......................................................
**என்.டப்ளியூ. விமலவீர**
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

.......................................................
**எம்.ஏ.வீ. குமுதுனீ**
நிதி முகாமையாளர்

பணிப்பாளர் சபை இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் தொடர்பில் பொறுப்புடையவர்கள் சபைக்கா-கவும் சபை சார்பாகவும் அனுமதித்து கையொப்பமிடப்பட்டது.

.......................................................
**மகிந்த மடிகஹேவா**
தலைவர்.'.நிறைவேற்று அதிகாரி



**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**
**நிதி நிலைமைக் கூற்று**
**2016, திம்பெர் 31ஆந் திகதியில் உள்ளவாறு**

| | | குழு | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2016 திசெம்பர் 31 | 2015 திசெம்பர் 31 | 2016 திசெம்பர் 31 | 2015 திசெம்பர் 31 |
| | குறிப்பு | ரூபா "000 | மீள் குறி-க்கப்பட்ட ரூபா "000 | ரூபா "000 | மீள் குறி-க்கப்பட்ட ரூபா "000 |
| **சொத்துக்கள்** | | | | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | | 748,033 | 863,226 | 614,332 | 841,949 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் வியாபாரத்திற்கு விடப்பட்டவை | | 1,955,837 | 1,494,287 | 1,955,837 | 1,494,287 |
| துணை நிறுவனங்களில் முதலீடு | 17 | - | - | 470,961 | 470,961 |
| நிதிசார் முதலீடுகள் - விற்பனைக்கு கிடைக்கக்கூடியவை | 18 | 9,209,233 | 8,837,699 | 9,209,233 | 8,837,699 |
| நிதிசார் முதலீடுகள் - முதிர்ச்சிக்கு விடப்பட்டவை | 19 | 223,110,604 | 198,376,078 | 222,454,509 | 198,305,886 |
| நிதிசார் முதலீடுகள் - கடன்கள் மற்றும் வருமதிகள் | 20 | 1,357,817 | 1,364,362 | 1,343,876 | 1,336,538 |
| ஏனைய சொத்துக்கள் | 21 | 9,591,507 | 8,213,782 | 9,214,010 | 8,053,014 |
| சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் | 22 | 1,101,719 | 896,635 | 176,379 | 173,144 |
| குத்தகைச் சொத்துக்கள் | 23 | 5,576 | 6,273 | - | - |
| அருவச் சொத்துக்கள் | 24 | 192 | 266 | 192 | 266 |
| முதலீட்டுச் சொத்துக்கள் | 25 | 3,400,000 | 3,200,000 | 3,400,000 | 3,200,000 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **250,480,519** | **223,252,608** | **248,839,330** | **222,713,744** |
| **மொத்த செயற்பாட்டுச் செலவினங்கள்** | | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| வட்டிக் கடன்களும் கடன்களும் | 26 | 227,124 | 53,667 | - | - |
| மானியங்கள் மற்றும் உதவித் தொகைகள் | 27 | 38,041 | 41,258 | - | - |
| நிலையான நலன் கடப்பாடு | 28 | 401,707 | 356,924 | 202,603 | 193,085 |
| நடப்பு வரிப் பொறுப்புக்கள் | | 270,909 | 33,582 | 81,082 | 33,582 |
| ஏனைய பொறுப்புக்கள் | 29 | 507,483 | 355,606 | 101,501 | 158,766 |
| ஏற்பாடுகள் | 30 | 87,841 | 213,754 | 87,841 | 213,754 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,533,106** | **1,054,790** | **473,027** | **599,187** |
| உரிமையாண்மை | | 248,842,206 | 222,142,396 | 248,366,304 | 222,114,558 |
| கட்டுப்பாடற்ற வட்டிகள் | | 105,207 | 55,422 | - | - |
| **மொத்த உரிமையாண்மை** | | **248,947,413** | **222,197,818** | **248,366,304** | **222,114,558** |
| **மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை** | | **250,480,519** | **223,252,608** | **248,839,330** | **222,713,744** |

169 முதல் 201 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்ககள் இந்நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும்.

.......................................................
**என்.டப்ளியூ. விமலவீர**
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

.......................................................
**எம்.ஏ.வீ. குமுதுனீ**
நிதி முகாமையாளர்

பணிப்பாளர் சபை இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் தொடர்பில் பொறுப்புடையவர்கள் சபைக்காகவும் சபை சார்பாகவும் அனுமதித்து கையொப்பமிடப்பட்டது.

.......................................................
**மகிந்த மடிகஹேவா**
தலைவர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**
**உரிமையாண்மை மாற்றக் கூற்று**
**2016, திம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு**

| குழு | கம்பனியின் பங்குதாரர்களுக்கு குறிக்கப்பட்டவை | | | | | | | | | | கட்டுப்படுத்தப்படா வட்டி | மொத்தம் வழுவுபடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கத்தவர் நிதியம் | | | | | | | | | | | |
| | பங்களிப்பு | வட்டி | பங்கிலாபம் | அங்கத்தவர் நிதியம | நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் | விற்பனைக்கு கிடைக்கக்கூடியவை | ஏனைய ஒதுக்குகள் | பங்கிலாபம் சமப்படுத்தும் ஒதுக்கு நிதியம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | கையகப்படுத்திய பின்னரான ஒதுக்குகள் | | |
| **2015.01.01.ஆந் திகதியில் நிலுவை** | | | | **193,868,676** | **18,090** | **1,468,737** | | **142,000** | **3,155,730** | **140,853** | **67,979** | **198,862,065** |
| வரிச்சொத்தின் மீள்கூற்று | | | | | 128,503 | | | | | | | 128,503 |
| கடந்த ஆண்டு சரிப்படுத்தல்கள் -வரி | | | | | 30,073 | | | | | | | 30,073 |
| வரிச் செலவினங்களை பதிவுசெய்தல் - 2015 | | | | | (30,073) | | | | | | | (30,073) |
| திறைசேரி முறி வருமான சரிப்படுத்தல்கள் | | | | | 74,995 | | | | | | | 74,995 |
| பங்குகள் மீது தேறக்கூடிய மூலதன ஆதாயம் - பங்கு ஒதுக்கு A/C | | | | | | (475,070) | | | | | | (475,070) |
| விலை கூறிய பங்கு முதலீடு - நீண்ட கால | | | | | | (871,627) | | | | | | (871,627) |
| கடந்த ஆண்டு பங்களிப்பு சரிப்படுத்தல்கள் | | | | (2,815) | | | | | | | | (2,815) |
| கிடைக்கப்பெற்ற பங்களிப்பு | 18,087,249 | | | 18,087,249 | | | | | | | | 18,087,249 |
| பங்களிப்பு மீளளித்தல் | (11,492,543) | | | (11,492,543) | | | | | | | | (11,492,543) |
| அங்கத்தவர் நிதிய நிலுவை மீது வட்டி 3.0% | | 6,013,817 | | 6,013,817 | (6,013,817) | | | | | | | - |
| பங்கிலாபம் 7.0% | | | 12,027,634 | 12,027,634 | (12,027,634) | | | | | | | - |
| ஆண்டிற்கான திரண்ட இலாபம் | | | | | 18,003,901 | | | | | | (11,682) | 17,992,219 |
| துணை நிறுவனங்களால் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | | | | | | | | | | (875) | (875) |
| துணை நிறுவன உரிமையாண்மையில் அசைவு | | | | | | | | | | (113,015) | | (113,015) |
| விற்பனை ஒதுக்கிற்கு கிடைக்கக்கூடியவை | | | | | | 60,425 | | | | | | 60,425 |
| நிகழத்தக்க பொறுப்புக்கள் ஏற்பாடு | | | | | | | (21,900) | | | | | (21,900) |
| வைப்பு - Summervill & Co. | | | | | (21,900) | | 21,900 | | | | | - |
| காப்பீட்டு ஆதாயம்/(இழப்பு) | | | | | | | (29,794) | | | | | (29,794) |
| முதலீட்டுச் சொத்தின் முன்னர் இனங்காணப்பட்ட மீள்மதிப்பீட்டு ஆதாயத்தின் மாற்றம் | | | | | 3,155,730 | | | | (3,155,730) | | | - |
| **2015.12.31.ஆந் திகதியில் நிலுவை** | **6,594,705** | **6,013,817** | **12,027,634** | **218,502,017** | **3,317,869** | **182,466** | **(29,794)** | **142,000** | **-** | **27,838** | **55,422** | **222,197,818** |
| **2016.01.01.ஆந் திகதியில் நிலுவை** | | | | **218,502,017** | **3,317,869** | **182,466** | **(29,794)** | **142,000** | **-** | **27,838** | **55,422** | **222,197,818** |

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**
**உரிமையாண்மை மாற்றக் கூற்று**
**2016, திம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு**

| குழு | கம்பனியின் பங்குதாரர்களுக்கு குறிக்கப்பட்டவை | | | | | | | | | | கட்டுப்படுத்தப்படா வட்டி | மொத்தம் வழுவுபடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கத்தவர் நிதியம் | | | | | | | | | | | |
| | பங்களிப்பு | வட்டி | பங்கிலாபம் | அங்கத்தவர் நிதியம | நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் | விற்பனைக்கு கிடைக்கக்கூடியவை | ஏனைய ஒதுக்குகள் | பங்கிலாபம் சமப்படுத்தும் ஒதுக்கு நிதியம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | கையகப்படுத்திய பின்னரான ஒதுக்குகள் | | |
| கடந்த ஆண்டு சரிப்படுத்தல்கள் -வரி | | | | | 30,376 | | | | | | | 30,376 |
| வரிச் செலவினங்களை பதிவுசெய்தல் - 2016 | | | | | (30,376) | | | | | | | (30,376) |
| பங்குகள் மீது தேறக்கூடிய மூலதன ஆதாயம் - பங்கு ஒதுக்கு A/C | | | | | | (15,395) | | | | | | (15,395) |
| கடந்த ஆண்டு பங்களிப்பு சரிப்படுத்தல்கள் | | | | (16,607) | | | | | | | | (16,607) |
| கிடைக்கப்பெற்ற பங்களிப்பு | 20,318,193 | | | 20,318,193 | | | | | | | | 20,318,193 |
| பங்களிப்பு மீளளித்தல் | (13,478,002) | | | (13,478,002) | | | | | | | | (13,478,002) |
| அங்கத்தவர் நிதிய நிலுவை மீது வட்டி 3.0% | | 6,759,768 | | 6,759,768 | (6,759,768) | | | | | | | - |
| பங்கிலாபம் 7.0% | | | 13,519,536 | 13,519,536 | (13,519,536) | | | | | | | - |
| ஆண்டிற்கான திரண்ட இலாபம் | | | | | 20,410,933 | | | | | | 69,785 | 20,480,718 |
| துணை நிறுவனங்களால் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | | | | | | | | | | (20,000) | (20,000) |
| துணை நிறுவன உரிமையாண்மையில் அசைவு | | | | | | | | | | 448,064 | | 448,064 |
| விற்பனை ஒதுக்கிற்கு கிடைக்கக்கூடியவை | | | | | | (173,479) | | | | | | (173,479) |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய ஒதுக்கு (அலகுகள்) | | | | | | (3,846) | | | | | | (3,846) |
| துணை நிறுவன நியாயமான பெறுமதியின் நேர்மாற்றுகை | | | | | | (790,551) | | | | | | (790,551) |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | | | | | | | | | 200,000 | | | 200,000 |
| காப்பீட்டு ஆதாயம்/. (இழப்பு) | | | | | | | 500 | | | | | 500 |
| முதலீட்டுச் சொத்தின் மீள்மதிப்பீட்டு ஆதாயத்தின் மாற்றம் | | | | | | | | | (200,000) | | | (200,000) |
| **2016.12.31.ஆந் திகதியில் நிலுவை** | **6,840,190** | **6,759,768** | **13,519,536** | **245,604,905** | **3,449,498** | **(800,805)** | **(29,295)** | **142,000** | **-** | **475,902** | **105,207** | **248,947,413** |

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**
**உரிமையாண்மை மாற்றக் கூற்று**
**2016, திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு**

| கம்பனி | கம்பனியின் பங்குதாரர்களுக்கு குறிக்கப்பட்டவை | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கத்தவர் நிதியம் | | | | நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் | விற்பனைக்கு கிடைக்கக்கூடியவை | ஏனைய ஒதுக்குகள் | பங்கிலாபம் சமப்படுத்தும் ஒதுக்கு நிதியம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | மொத்தம் |
| | பங்களிப்பு | வட்டி | பங்கிலாபம் | அங்கத்தவர் நிதியம் | | | | | | |
| **2015.01.01.ஆந் திகதியில் நிலுவை** | **-** | **-** | **-** | **193,868,676** | **18,090** | **1,468,737** | **-** | **142,000** | **3,155,730** | **198,653,233** |
| வரிச்சொத்தின் மீள்கூற்று | - | - | - | - | 128,503 | - | - | - | - | 128,503 |
| கடந்த ஆண்டு சரிப்படுத்தல்கள் -வரி | - | - | - | - | 30,073 | - | - | - | - | 30,073 |
| வரிச் செலவினங்களை பதிவுசெய்தல் - 2015 | - | - | - | - | (30,073) | - | - | - | - | (30,073) |
| திறைசேரி முறி வருமான சரிப்படுத்தல்கள் | | | | | 74,995 | | | | | 74,995 |
| பங்குகள் மீது தேறக்கூடிய மூலதன ஆதாயம் - பங்கு ஒதுக்கு A/C | - | - | - | - | - | (475,070) | - | - | - | (475,070) |
| விலை கூறிய பங்கு முதலீடு - நீண்ட கால | - | - | - | - | - | (871,627) | - | - | - | (871,627) |
| கடந்த ஆண்டு பங்களிப்பு சரிப்படுத்தல்கள் | - | - | - | (2,815) | - | - | - | - | - | (2,815) |
| கிடைக்கப்பெற்ற பங்களிப்பு | 18,087,249 | - | - | 18,087,249 | - | - | - | - | - | 18,087,249 |
| பங்களிப்பு மீளளித்தல் | (11,492,543) | - | - | (11,492,543) | - | - | - | - | - | (11,492,543) |
| அங்கத்தவர் நிதிய நிலுவை மீது வட்டி 3.0% | - | 6,013,817 | - | 6,013,817 | (6,013,817) | - | - | - | - | - |
| பங்கிலாபம் 7.0% | - | - | 12,027,634 | 12,027,634 | (12,027,634) | - | - | - | - | - |
| ஆண்டிற்கான திரண்ட இலாபம் | - | - | - | - | 18,003,901 | - | - | - | - | 18,003,901 |
| விற்பனை ஒதுக்கிற்கு கிடைக்கக்கூடியவை | - | - | - | - | - | 60,425 | - | - | - | 60,425 |
| நிகழத்தக்க பொறுப்புக்கள் ஏற்பாடு | - | - | - | - | - | - | (21,900) | - | - | (21,900) |
| வைப்பு - Summervill & Co. | - | - | - | - | (21,900) | - | 21,900 | - | - | - |
| காப்பீட்டு ஆதாயம் / (இழப்பு) | - | - | - | - | - | - | (29,794) | - | - | (29,794) |
| முதலீட்டுச் சொத்தின் முன்னர் இனங்காணப்பட்ட மீள்மதிப்பீட்டு ஆதாயத்தின் மாற்றம் | - | - | - | - | 3,155,730 | - | - | - | (3,155,730) | - |
| **2015.12.31.ஆந் திகதியில் நிலுவை** | **6,594,705** | **6,013,817** | **12,027,634** | **218,502,017** | **3,317,869** | **182,466** | **(29,794)** | **142,000** | **-** | **222,114,558** |
| **2016.01.01.ஆந் திகதியில் நிலுவை** | **-** | **-** | **-** | **218,502,017** | **3,317,869** | **182,466** | **(29,794)** | **142,000** | **-** | **222,114,558** |

**நுஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**
**உரிமையாண்மை மாற்றக் கூற்று**
**2016, திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு**

| கம்பனி | கம்பனியின் பங்குதாரர்களுக்கு குறிக்கப்பட்டவை | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கத்தவர் நிதியம் | | | | நிறுத்திவைக்கப்பட்ட இலாபம | விற்பனைக்கு கிடைக்கக்கூடியவை | ஏனைய ஒதுக்குகள் | பங்கிலாபம் சமப்படுத்தும் ஒதுக்கு நிதியம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | மொத்தம் |
| | பங்களிப்பு | வட்டி | பங்கிலாபம் | அங்கத்தவர் நிதியம் | | | | | | |
| கடந்த ஆண்டு சரிப்படுத்தல்கள் -வரி | - | - | - | - | 30,376 | - | - | - | - | 30,376 |
| வரிச் செலவினங்களை பதிவுசெய்தல் - 2016 | - | - | - | - | (30,376) | - | - | - | - | (30,376) |
| பங்குகள் மீது தேறக்கூடிய மூலதன ஆதாயம் - பங்கு ஒதுக்கு A/C | - | - | - | - | - | (15,395) | - | - | - | (15,395) |
| ]ந்த ஆண்டு பங்களிப்பு சரிப்படுத்தல்கள் | - | - | - | (16,607) | - | - | - | - | - | (16,607) |
| கிடைக்கப்பெற்ற பங்களிப்பு | 20,318,193 | - | - | 20,318,193 | - | - | - | - | - | 20,318,193 |
| பங்களிப்பு மீளளித்தல் | (13,478,002) | - | - | (13,478,002) | - | - | - | - | - | (13,478,002) |
| அங்கத்தவர் நிதிய நிலுவை மீது வட்டி 3.0% | - | 6,759,768 | - | 6,759,768 | (6,759,768) | - | - | - | - | - |
| பங்கிலாபம் 7.0% | - | - | 13,519,536 | 13,519,536 | (13,519,536) | - | - | - | - | - |
| ஆண்டிற்கான திரண்ட இலாபம் | - | - | - | - | 20,410,933 | - | - | - | - | 20,410,933 |
| விற்பனை ஒதுக்கிற்கு கிடைக்கக்கூடியவை | - | - | - | - | - | (173,479) | - | - | - | (173,479) |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய ஒதுக்கு (அலகுகள்) | - | - | - | - | - | (3,846) | - | - | - | (3,846) |
| துணை நிறுவன நியாயமான பெறுமதியின் நேர்மாற்றுகை | - | - | - | - | - | (790,551) | - | - | - | (790,551) |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | - | - | - | - | - | - | - | - | 200,000 | 200,000 |
| காப்பீட்டு ஆதாயம்/(இழப்பு) | - | - | - | - | - | - | 500 | - | - | 500 |
| முதலீட்டுச் சொத்தின் மீள்மதிப்பீட்டு ஆதாயத்தின் மாற்றம் | - | - | - | - | - | - | - | - | (200,000) | (200,000) |
| **2016.12.31.ஆந் திகதியில் நிலுவை** | **6,840,190** | **6,759,768** | **13,519,536** | **245,604,905** | **3,449,498** | **(800,805)** | **(29,295)** | **142,000** | **-** | **248,366,304** |

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**
**இகாசுப் பாய்ச்சல் கூற்று**
**2016, திம்பெர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது**

| | குறிப்பு | குழு | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2016 திசெம்பர் 31 | 2015 திசெம்பர் 31 | 2016 திசெம்பர் 31 | 2015 திசெம்பர் 31 |
| | | ரூபா "000 | மீள் குறி க்கப்பட்ட ரூபா"000 | ரூபா "000 | மீள் குறிக்க-ப்பட்ட ரூபா "000 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகள்** | | | | | |
| FVTPL இல் நியமிக்கப்பட்ட நிதிச் சாதனத்தின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 1 | 264,734 | 2,953,322 | 264,734 | 2,953,322 |
| முதிர்ச்சிக்கு விடப்பட்ட நிதிச் சாதனங்ளின் முதிர்வுகள் | 2 | 226,866,952 | 243,132,309 | 226,866,952 | 243,132,309 |
| நிதிச் சாதனங்கள் கடன் மற்றும் வருமதிகளின் முதிர்வுகள் | 3 | 128,216 | 6,263,837 | 128,216 | 6,263,837 |
| FVTPL இல் நியமிக்கப்பட்ட நிதிச் சாதனத்தின் கொள்வனவிற்கான கொடுப்பனவு | 4 | (2,105,430) | (5,006,253) | (2,105,430) | (5,006,253) |
| முதிர்ச்சிக்கு விடப்பட்ட நிதிச் சாதனத்தின் கொள்வனவிற்கான கொடுப்பனவு | 5 | (250,088,421) | (271,650,535) | (250,088,421) | (271,650,535) |
| நிதிச் சாதனங்கள் கடன் மற்றும் வருமதிகளைப் பெறுவதற்கு வழங்கப்பட்ட கடன் | 6 | (215,730) | (148,464) | (215,730) | (148,464) |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட பணங்கள் | | 2,137,602 | 1,011,685 | - | - |
| வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்ட பணங்கள் | | (1,160,490) | (783,195) | - | - |
| கிடைக்கப்பெற்ற வட்டி | 7 | 19,493,760 | 16,872,388 | 19,493,760 | 16,872,388 |
| கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | 8 | 329,938 | 524,271 | 329,938 | 524,271 |
| கிடைக்கப்பெற்ற ஏனைய வருமானம் | 9 | 306,894 | 281,709 | 306,894 | 281,709 |
| செலுத்தப்பட்ட செயற்பாட்டுச் செலவினங்கள் | 10 | (1,047,671) | (1,010,390) | (1,047,671) | (1,010,390) |
| செலுத்தப்பட்ட அங்கத்தவர் செலவினங்கள் | 12 | (315,819) | (228,298) | (315,819) | (228,298) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 13 | (713) | (11,395) | (713) | (11,395) |
| செலுத்தப்பட்ட வட்டி | | (181,210) | (158,976) | (176,512) | (149,122) |
| செலுத்தப்பட்ட நிலையான நலன் திட்டச் செலவுகள் | | (23,142) | (11,962) | | |
| பிரதேச செயலகங்களுக்கு செலுத்தப்பட்ட நில வாடகை | | (25,095) | (4,472) | | |
| ஆண்டு 5 புலமைப்பரிசில் கொடுப்பனவு/மீளளித்தல் | | (178,314) | (8,368) | (178,314) | (8,368) |
| உயர்கல்விப் புலமைப்பரிசில் கொடுப்பனவு/மீளளித்தல் | | (41,908) | (19,704) | (41,908) | (19,704) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(5,855,848)** | **(8,002,490)** | **(6,780,024)** | **(8,204,693)** |
| **முதலீட்டு நடவடிக்கைகள்** | | | | | |
| சொத்துக்கள் மற்றும் கருவிகளின் கொள்வனவு | | (271,465) | (28,515) | (24,990) | (8,633) |
| சொத்துக்கள் மற்றும் கருவிகளின் விற்பனை மூலம் வருமானம் | | 470 | 17,164 | 73 | 12,462 |
| முதலீடுகளின் கையக்கப்படுத்துகை | | (585,903) | (12,494) | - | - |
| கிடைக்கப் பெற்ற வரி | | 40,087 | 7,149 | - | - |
| பணிக்குழாத்தினர் கடன்கள் மீள்கொடுப்பனவுகள்/தேறிய (ஆதாயங்கள்) | | 13,882 | 17,691 | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(802,930)** | **995** | **(24,917)** | **3,829** |
| **நிதியிடல் நடவடிக்கைகள்** | | | | | |
| கிடைக்கப் பெற்ற பங்களிப்பு | | 20,053,869 | 17,902,928 | 20,053,869 | 17,902,928 |
| மீளளிப்புக்கள் | | (13,473,997) | (11,493,449) | (13,473,997) | (11,493,449) |
| செலுத்தப்பட்ட நிதிச் செலவினங்கள் | 11 | (2,547) | (1,639) | (2,547) | (1,639) |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | (200,000) | (8,750) | - | - |
| வட்டிக் கடன்களும் கடன்களின் மீள்கொடுப்பனவுகள் | | (24,038) | (35,843) | - | - |
| நிதிக் குத்தகைப் பொறுப்புக்களின் கீழ் பிரதான கொடுப்பனவு | | (4,425) | (1,676) | - | - |
| **நிதியிடல் நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்** | | **6,348,862** | **6,361,570** | **6,577,325** | **6,407,840** |
| **காசும் காசுக்கு சமமானவையில் தேறிய அதிகரிப்பு** | | **(309,916)** | **(1,639,925)** | **(227,616)** | **(1,793,024)** |
| ஜனவரி 01ஆந் திகதியில் காசும் காசுக்கு சமமானவையும் | | 855,620 | 2,495,545 | 841,949 | 2,634,973 |
| **திசெம்பர் 31ஆந் திகதியில் காசும் காசுக்கு சமமானவையும்** | | 545,704 | 855,620 | 614,332 | 841,949 |



## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை பக்கம்
## நிதிக் கூற்றுக்களுக்கான முக்கிய கணக்கியற் கொள்கைகள

## 1. தாபனத் தகவல்கள்

### 1.1. சட்ட மற்றும் இட அமைப்பு

1981ம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி கொழும்பில் 1980ம் ஆண்டின் 46ஆவது இலக்க ஊ.ந.நி. சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ETF) ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனமாகும். இது தொழில் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டு 1997இல் நிதி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டதுடன், 2016ம் ஆண்டில் அபிவிருத்திப் பணிகள் அமைச்சிற்கு மாற்றப்படும் வரை 2015 ஒக்டோபர் முதல் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் கீழ் செயற்பட்டது.

இலங்கை உப்புக் கூட்டுதாபனம் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு வரையறுக்கப்பட்ட பொது கம்பனியாகும். கம்பனியின் பிரதான வர்த்தகத் தலம் மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் ஹம்பாந்தோட்டை, மகாலேவாயாவில் அமைந்துள்ளது.

### 1.2. பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

இவ்வாண்டினுள், கம்பனியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் பிரதான செயற்பாடுகள் இந்நிதிக் கூற்றுகளுக்குள் பின்வருமாறு மேற்கொள்ளபட்டன:

| கம்பனியின் பெயர | வியாபாரத்தின் தன்மை |
|---|---|
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை | அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்திற்கு உரித்தாகாத எல்லா அரசாங்கத் துறை ஊழியர்களும் எல்லா தனியார் துறை ஊழியர்களும் இந்நிதியத்தின் உறுப்பினர்களாவதுடன், அவர்களின் தொழில்தருநர்கள் அவ்வூழியர்கின் மொத்த வருவாயில் 3% இனை மாதாந்தம் நிதியத்திற்குப் பங்களித்தல் வேண்டும். மேலும், நிதியமானது முன்னோக்கிச் செல்கையில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கக்கூடிய புலம்பெயர் மற்றும் சுய தொழில் துறையினரையும் உள்ளடக்குகின்றது. நிதியத்தினை நிர்வகித்தல் தவிர, நுவுகு சபை, அதன் உறுப்பினர்களுக்கு அவர்களது பணிபுரியும் காலப்பகுதியில் சமூக மற்றும் நலன்புரி நன்மைகள் பலவற்றை நிறைவேற்றுவதில் ஈடுபடுகின்றது. |
| இலங்கை உப்புக் கூட்டுத்தாபனம் | கம்பனியின் பிரதான செயற்பாடானது உப்பு உற்பத்தியும் விநியோகித்தலும் ஆகும். |

### 1.3. தாய் நிறுவனம் மற்றும் இறுதித் தாய் நிறுவனம

கம்பனிக்கான இறுதித் தாய் நிறுவனம் ஒன்று இல்லை. – ETFB தாய் கம்பனியாகும். .

### 1.4. வெளியிடுவதற்கான அதிகாரம் பெறும் திகதி

2013 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நுவுகு சபையின் நிதிக் கூற்றுக்களை 201 26ஆந் திகதியன்று பணிப்பாளர் சபையின் தீர்மானம் பிரகாரம் வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 2. முக்கியமான கணக்கியற் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1. பொதுவான கொள்கைகள

#### 2.1.1. நிதி நிலைமைக் கூற்றுக்களை முன்வைத்தல

நிதி நிலைமைக் கூற்றில் முன்வைக்கப்பட்ட நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தன்மையைக் கொண்டு வகைப்படுத்தப்பட்டு மற்றும் அவை தொடர்பில் திரவத்தன்மையைப் பிரதிபலிக்கும் பொருட்டு பட்டியலிடப்படுகின்றன. நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்கக்

காரணிகளுக்கு சரிப்படுத்தல்கள் ஏற்படுத்தப்படவில்லை. 12 மாதங்களுக்குள் மற்றும் அறிக்கையிடும் திகதியிலிருந்து 12 மாதங்களுக்குப் பிறகு மீட்சி அல்லது தீர்த்தல் மீதான பகுப்பாய்வொன்று இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

### 2.1.2. இணக்கக் கூற்று

2016 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு மற்றும் அப்போது முடிவுற்ற ஆண்டிற்கான, நிறுவனத்தின் கணக்கியற் கொள்கைள் மற்றும் குறிப்புக்கள் ("நிதிக் கூற்றுக்கள்") உள்ளடங்கலாக நிதி நிலைமைக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLFRS/LKAS) இணங்குகின்றன. இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் என்பன 2007இன் கம்பனிகள் சட்ட இல. 07இன் தேவைகளின் பிரகாரம் இணங்குகின்றன.

| |
|---|
| இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (SME களுக்கான SLFRS) வழங்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் டுளுடுஇன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. |

### 2.1.3. முக்கியமான கணக்குகளின் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

சபை எதிர்காலத்திற்காக குறிப்பிட்ட சில மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்கின்றது. எதிர்காலத்திற்கான எதிர்பார்ப்புகள் உட்பட வரலாற்று ரீதியான அனுபவம் மற்றும் ஏனைய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புக்கள் தொடர்ச்சியாக கணிக்கப்படுகின்றன.

SME களுக்கான SLFRS உடன் இணங்குமாறு LSL இன் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு சில தீர்க்கமான கணக்கீட்டு மதிப்பீடுகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. நிறுவனத்தின் கணக்கியற் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டில் அதன் தீர்ப்பினை முகாமைத்துவம் பிரயோகிப்பதற்கும் வேண்டியுள்ளது. நிதிக் கூற்றுக்களுக்கு முக்கியமான ஊகங்கள் மற்றும் மதிப்பீடுகள் கொண்ட விடயங்கள் அல்லது உயர்ந்த அளவிலான தீர்ப்பு அல்லது சிக்கல் கொண்ட விடயங்கள் என்பன பின்வருமாறு எடுத்துக்காட்டப்படுகின்றன.

**தீர்ப்புக்கள்**

**பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்:**

பிற்போடப்பட்ட வரிச் சொத்துககள் இப்புக்கள் பயன்படுத்தக்கூடியதற்கு மாறாக வரிக்குட்பட்ட இலாபம் கிடைப்பதில் சாத்தியப்பாடு உள்ளது என்ற அளவிற்கு எல்லா பயன்படுத்தப்படாத வரி இழப்புக்களுக்கு இனங்காணப்படும். முக்கியமான முகாமைத்துவத் தீர்ப்பு, எதிர்கால வரித் திட்டமிடல் உபாயங்களுடன் எதிர்கால வரிக்குட்பட்ட இலாபங்களின் வாய்ப்பு மற்றும் மட்டத்தின் அடிப்படையில் இனங்காண முடியுமான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் அளவினைத் தீர்மானிப்பதற்கு தேவைப்படுகின்றது.

### 2.1.4. அளவிடுதலின் அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் நியாயமான விலையில் அளவிடப்படும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகிய குறிப்பிட்ட சிலவற்றைத் தவிர நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

| |
|---|
| LSL இன் நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. |

### 2.1.5. தொழிற்படு மற்றும் முன்வைத்தல் நாணயம்

கம்பனியின் புழக்கத்திலுள்ள நாணயமான இலங்கை ரூபாவில் இந்நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எல்லா நிதிசார் தகவல்களும் இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளன.

### 2.1.6. தொடர்ச்சியான நிலைப்பாடு

ETF சபையின் முகாமை தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடர்வதற்கான சபையின் இயலுமையை மதிப்பீடு செய்துள்ளதுடன், எதிர்வரும் எதிர்காலத்திற்கு வர்த்தகத்தில தொடர்ந்தும் ஈடுபடுவதற்கான வளங்களை சபை கொண்டுள்ளது என்பதில் திருப்தியடைந்துள்ளது. மேலும், தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத தொடருவதற்கு சபையின இயலுமை மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை ஏற்படுத்தக் கூடிய ஏதேனும் நிச்சயமற்ற தன்மைகள் குறித்து முகாமை அறியவில்லை. அதனால், நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தும் தொடர்ச்சியான நிலைப்பாட்டின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

| |
|---|
| LSL இன் பணிப்பாளர்கள் தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடர்வதற்கான சபையின் இயலுமையை மதிப்பீடு செய்துள்ளதுடன், அவர்கள் வர்த்தகத்தை நிறுத்தவோ அல்லது கலைப்பதற்கோ எண்ணவில்லை. |



### 2.1.7. ஒப்பீட்டுத் தகவல

| |
|---|
| கணக்கியற் கொள்கைகள் கம்பனியால் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் கடந்த ஆண்டுடன் இசைவானவையாகவும் உள்ளன. |

## 2.2. ஒருங்கிணைவின் அடிப்படை

**அ) ஒருங்கிணைவு**

ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2016 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றன.

துணை நிறுவனமானது, குழுமம் கட்டுப்பாட்டினைப் பெற்றுக்கொண்ட நாளாகிய, கையகப்படுத்திய நாள் முதல் ஒருங்கிணைக்கபட்டுள்ளதுடன் அத்தகைய கட்டுப்பாடு முடிவடையும் நாள் வரை தொடர்ந்தும் ஒருங்கிணைக்கபட்டிருக்கும். துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் தாய் நிறுவனத்தைப் போன்றே அறிக்கையிடும் அதே காலப்பகுதியில் தயாரிக்கப்படும்.

| |
|---|
| எனினும், குழு கணக்கியற் கொள்கைகளுள் முன்னிலைப்படுத்தப்பட்ட இரு நிறுவனங்களினதும் கணக்கியற் கொள்கைகள் வித்தியாசமானவை. |

**ஆ) துணை நிறுவனங்கள**

துணை நிறுவனங்களாவன, வாக்குரிமைகளின் அரைப்பகுதிக்கும் மேலாக பங்குரிமையினைப் பொதுவாகக் கொண்ட செயற்பாட்டு மற்றும் நிதிசார் கொள்கைகளை நிர்வகிப்பதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆற்றலைக் கொண்ட குழுமத்தாலான நிறுவனங்களாகும். குழுமம் வேறோரு நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகின்றதா என மதிப்பிடும் போது நடைமுறைப்படுத்தக் கூடியதும் அல்லது மாற்றக்கூடியதுமான சாத்தியமான வாக்குரிமைகளின் நிலைப்பாடு மற்றும் விளைவு கருத்திற் கொள்ளப்படும். குழுமத்திற்கு கட்டுப்பாட்டினை மாற்றப்பட்ட நாள் முதல் துணை நிறுவனங்கள் முற்றாக ஒருங்கிணைக்கப்படும். கட்டுப்பாடு நிறுத்தப்பட்ட நாளிலிருந்து அவை ஒருங்கிப்பினை இழக்கும்.

துணை நிறுவனங்களாவன, வாக்குரிமைகளின் அரைப்பகுதிக்கும் மேலாக பங்குரிமையினைப் பொதுவாகக் கொண்ட செயற்பாட்டு மற்றும் நிதிசார் கொள்கைகளை நிர்வகிப்பதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆற்றலைக் கொண்ட குழுமத்தாலான நிறுவனங்களாகும். குழுமம் வேறோரு நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகின்றதா என மதிப்பிடும் போது நடைமுறைப்படுத்தக் கூடியதும் அல்லது மாற்றக்கூடியதுமான சாத்தியமான வாக்குரிமைகளின் நிலைப்பாடு மற்றும் விளைவு கருத்திற் கொள்ளப்படும். குழுமத்திற்கு கட்டுப்பாட்டினை மாற்றப்பட்ட நாள் முதல் துணை நிறுவனங்கள் முற்றாக ஒருங்கிணைக்கப்படும். கட்டுப்பாடு நிறுத்தப்பட்ட நாளிலிருந்து அவை ஒருங்கிப்பினை இழக்கும்.

**இ) அறிக்கையிடும் திகதி**

12 மாதங்களுடன் முடிவடையும் திசெம்பர் 31ஆந் திகதியான பொதுவான அறிக்கையிடும் காலப்பகுதியில் துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும்.

## 2.3. இலாபம் மற்றும் நட்டத்தினை அளவிடுவதன் அடிப்படை

### 2.3.1. வருவாய்

தாபனத்திற்கு எதிர்கால பொருளாதார நன்மைகள் கிடைக்கக் கூடிய சாத்தியம் உள்ள போதும் வருவாய்த் தொகையை நம்பகமான முறையில் அளவிட முடிகின்ற போதும் வருவாய் இனங்காணப்படுகின்றது. வருவாய் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் திட்டவட்டமான இனங்காணல் பிரமாணங்கள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

பொருட்களின் விற்பனை மூலமான வருவாய் பொருட்கள் வழங்கப்படும் போது மற்றும் உரிமை கடந்து விட்ட போதும் இனங்காணப்படும். கிடைத்தவை அல்லது கிடைக்க வேண்டியவை, கழிவுகளின் தேறிய தொகை மற்றும் அரசாங்கத்தின் சார்பாக சேகரிக்ப்பட்ட விற்பனை தொடர்பிலான வரிகள் ஆகியவற்றின் நியாயமான பெறுமதியினைக் கருத்திற் கொண்டு வருவாய் அளக்கப்படும். வருவாய் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் திட்டவட்டமான இனங்காணல் பிரமாணங்கள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

**அ) பொருட்களின் விற்பனை**

பொருட்களின் விற்பனை மூலமான வருவாய் சாதாரணமாக பொருட்களை வழங்குகையில் கொள்வனவாளருக்கு பொருட்களின் உடைமையுரிமையின் குறிப்பிடத்தக்க இடர்கள் மற்றும் வெகுமதிகள் மாற்றப்படும் போது இனங்காணப்படும்.

**ஆ) சேவைகளை வழங்குதல்**

சேவைகளை வழங்குவதன் மூலமான வருவாயானது, ஒவ்வொரு ஒப்பந்தத்திற்குமான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட ஊழிய மணித்தியாலங்களின் வீதமாக நடைபெற்ற ஊழிய மணித்தியாலத்தினைக் கணக்குகளில் எடுப்பதன் மூலம் தீர்மானித்து நிறைவடையும் கட்டத்திற்கு குறிப்பிடுவதன் மூலம் இனங்காணப்படும். ஒப்பந்த முடிவின் நம்பகத்தன்மையை அளவிட முடியாத சந்தர்ப்பத்தில் வருவாய் மீட்டெடுக்கக் கூடிய செலவினங்களுக்கு இனங்காணப்படும்.

**இ) வட்டி**

வருவாய் சொத்து மீதான பயனுறுதிமிக்க வட்டியை கணக்குகளில் எடுக்கும் நேர விகித அடிப்படையில் இனங்காணப்படும்.

**ஈ) ஏனையவை**

ஏனைய வருமானம் அட்று அடிப்படையில் இனங்காணப்படும்.

### 2.3.2. வட்டி மற்றும் ஒத்த வருமானமும் செலவும்

| 1954 இன் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் அதிகாரச்சட்டம் | (i) | சபை கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் அதிகாரச்சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுவதுடன் அதன் பிரகாரம் ஊழியர்களுக்கு உரித்தான விடுமுறைகளின் எண்ணிக்கை வருடாந்தம் 14 மற்றும் 07 அமைய விடுமுறைகளுமாக ஆகக்கூடியது 21 நாட்கள் எனினும், சபை ஆண்டொன்றிற்கு 42 விடுமுறைகளை ஊழியர்களுக்கு வழங்கியிருந்தது. |
| | (ii) | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மேலதிக நேரத்திற்காக படிகளைச் செலுத்தும் போது சாதாரணமாக ஒரு மணித்தியாலயத்திற்கான சம்பளத்தைப் போன்ற ஒன்றரை மடங்கு செலுத்தப்பட வேண்டுமெனினும், அதற்கு முரணாக சபை மேலதிக நேர மணித்தியாலமொன்றிற்கு ஒன்றரை மணித்தியாலமும் நாளொன்றிற்கான சம்பளமும் கூட்டப்பட்டு மேலதிக நேரப் படிகளைச் செலுத்தியிருந்தது. அதன் பிரகாரம் சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான மேலதிக நேரக்கிரயம் ரூபா 16,312,000 ஆன உயர் பெறுமதிளைக் கொண்டிருந்தது. |
| | (iii) | மேலதிக நேரத்திற்காக உரித்தினைப் பெற வேண்டுமாயின் சராசரியான ஆகக்கூடிய காலமான வாரமொன்றிற்கு 45 மணித்தியாலத்தை விட அதிகமாக சேவையாற்ற வேண்டும். எனினும், சபையினால் வாரமொன்றிற்கு 45 மணித்தியால ஆகக்கூடியதைக் கவனத்தில் கொள்ளாமல் நாளொன்றிற்கு 8 மணித்தியாலத்தை விஞ்சுகின்ற ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் மேலதிக கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தொகுதியின் இலாபம் ரூபா 14,349 ஆகவும் சபையின் இலாபம் ரூபா 13,651 மில்லியனாகவும் இருந்தன. அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் தொகுதியினதும் சபையினதும் இலாபம் முறையே ரூபா 11,873 மில்லியன் ஆகவும் ரூபா 11,990 மில்லியன் ஆகவும் இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகள் முறையே ரூபா 2,476 மில்லியனாலும் ரூபா 1,661 மில்லியனாலும் அதிகரித்திருந்தது. சபையின் வட்டி வருமானம் ரூபா 3,218 மில்லியனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது. எனினும், இந்த அறிக்கையின் 2.3.1 (இ)(ii) ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட விற்பனைக்காகவுள்ள நிதிச் சொத்துக்களின் இழப்பீட்டு நட்டமான ரூபா 295,372,261 தொகையைக் கவனத்தில் கொள்ளும் போது இலாபத்தில் உள்ளபடியான அதிகரிப்பு அந்த அளவை விடக் குறைவாக இருக்க வேண்டியுள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது சபையின் இலாபம் ˉடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 7,958,000,000 தொகையான இலாபம் மீளாய்வாண்டின் போது ரூபா 13,651,165,000 ஆக இருந்தது. அவ்வாறே நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம், வருமான வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீளச் சீராக்கியதன் பின்னர் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 8,776,771,000 தொகையான சபையின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 17,052,574,000 வரை அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2.3.1 (இ)(ii) இல் காண்பிக்கப்பட்ட பிரகாரம் இழப்பீட்டு நட்டத்தை சீராக்கியதன் பின்னரும் மீளாய்வாண்டின் இலாபத்தில் முன்னைய ஆண்டின் இலாபமும் ஒன்றுசேர்க்கப்பட்ட ரூபா 3,317,869,000 தொகை அகற்றப்படும் போது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 22 ஆவது பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டி இருந்த 3



AGDSL
විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

சதவீத கட்டாய வரி செலுத்துதல் மற்றும் 14 ஆவது பிரிவின் பிரகாரம் வெளியிடப்பட்ட 6 சதவீதப் படியான இலாபப் பங்கு நலன்கள் செலுத்தியதன் பின்னர் முன்கொண்டு வரப்பட்ட தேறிய நட்டம் ரூபா 163,743,261 ஆகும். அது சபையின் நடப்பாண்டில் நிதிச் செயலாற்றலில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தாதிருக்கும் என கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது.

(ஆ) ஆண்டின் மொத்த வருமானம் ஆண்டின் ஆரம்ப திகதியில் உள்ள நிதியத்தின் பெறுமதியுடன் ஒப்பிடும் போது 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் 11.24 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டதுடன் ஆண்டில் கிடைத்த தேறிய பங்களிப்புப் பணத்தை ஆரம்ப அங்கத்தவர் நிதியத்துடன் ஒப்பிடும் போது 10.8 சதவீதமாக இருந்தது.

(இ) சபையின் செயற்பாட்டு இலாப விகிதம் 2016 ஆம் ஆண்டின் போதும் 2015 ஆம் ஆண்டின் போதும் 89 சதவீதமாகக் மாற்றமின்றிக் காணப்பட்டது.

(ஈ) 2015 சனவரி மாதத்துடன் ஒப்பிடும் போது 2016 சனவரி மாதம் வரையில் சபையின் அங்கத்தவர் நிதியத்தினதும் மொத்த வருமானத்தினதும் அதிகரிப்பு முறையே 12.7 சதவீதம் மற்றும் 12.9 சதவீதமாகக் காணப்பட்டது.

### 3.3 நிறுவனத்தினால் அல்லது நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 21,900,000 நட்டஈட்டுத் தொகை ஒன்றை மேவுகை செய்வதற்காகவும் அறவிடுவதற்கு இருந்த ரூபா 1,902,318 வரித் தொகையை அறவிடுவதற்காக 02 வெளி நிறுவனங்களுக்கு எதிராகவும், ரூபா 242,887,355 தொகையான பங்களிப்பு பணம் மற்றும் மிகைக் கட்டண அறவிடலுக்கான நாடு முழுவதும் நிதிமன்றங்களில் 2,415 வழக்குகளும் தொடுக்கப்பட்டு இருந்தன. அவ்வாறே வெளி நிறுவனங்களினால் ரூபா 16,292,987 தொகையான அறவிட வேண்டிய பணம் தொடர்பாக சபைக்கு எதிராக 18 வழக்குகளும் நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டிருந்தன. மேலும், அவைகளின் தன்மை, தற்போதைய நிலை போன்றவை தொடர்பாக போதியளவான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி வழங்கல் மற்றும் முதலீட்டுக்கு பங்களிப்பினை வழங்குவதன் மூலம் ஊழியர் உரிமைகள், ஊழியர் நலன்புரி மற்றும் பொருளாதார சமத்துவத்தினை மேம்படுத்தல், முயற்சியாண்மைகளின் சாதாரண பங்குகளை கைப்பற்றுவதன் மூலம் முகாமைத்துவத்தில் ஊழியர் பங்களிப்பினை மேம்படுத்தல், ஊழியர்கள் ஒய்வு பெறும் போது பங்களிப்பற்ற நலனொன்றைப் பெற்றக்கொள்வதற்கான ஏற்பாடுகளை ஒழுங்கமைத்தல் போன்ற நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை உருவாக்கப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களை நறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 20(1) ஆம் பிரிவின் 1988 இன் 47 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 7 ஆவது பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு சுய தொழில் வழங்குனர்கள் ஆட்சேர்க்கப்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின் படி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள 2,511,568 எண்ணிக்கை மாத்தரமாக இருந்த போதிலும் சுயதொழில் வழங்குனர்களில் நிதியத்திற்கு அங்கத்தவர்களாக சேர்ப்பதற்கு 39,629 அங்கத்தவர்கள் அல்லது மொத்த எண்ணிக்கையில் 1.58 சதவீதத்திற்கு மாத்திரமே முடியுமானதாக இருந்தது. 2016 ஆம் ஆண்டினுள் சுய தொழில் வழங்குனர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்பு பணம் ரூபா 43,716,657 ஆக இருந்ததுடன், அது அந்த வருடத்தின் மொத்த பங்களிப்புப் பெறுவனவுகளின் 0.22 சதவீதம் மாத்திரமாகும். 1989 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை சுயதொழில் வழங்குனர்களிடமிருந்து பெறப்பட்ட மொத்தப் பங்களிப்புத்தொகை ரூபா 277,457,066 ஆக இருந்ததுடன், அது 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிலவிய அங்கத்துவ நிதியத்தில் 0.13 சதவீதமாகும். நிதிய அதிகாரச்சட்டத்தின் மூலம் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள இந்தத் துறையினை மேம்படுவத்துவதற்காக சபையினுள் தனியான பிரிவொன்று தாபிக்கப்பட்டு, செயல்நடவடிக்கைத் திட்டத்தில் தந்திரோபாய வழிகள் குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், மேற்குறிப்பிட்ட அவதானிப்பின் பிரகாரம் 2016





ஆம் ஆண்டின் இறுதியளவில் அது தொடர்பில் காட்டப்பட்ட அவதானம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) சபையின் அங்கத்தவர்களுக்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி அதிகாரச் சட்டத்தின் 22 ஆவது பிரிவின் பிரகாரம் பிரேரிக்கப்பட வேண்டிய கட்டாய வட்டி வீதம் 3 மற்றும் 14 ஆம் பிரிவின் பிரகாரம் பிரேரிக்கப்பட்ட 6 சதவீத இலாபப்பங்கு சதவீதத்துடன் மொத்த நலன்கள் மற்றும் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளின் போதும் அக்கொடுப்பனவுகள் நிதியீட்டம் செய்யப்பட்ட வழிகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2010 ஆம் ஆண்டின் போது அங்கத்தவர்களுக்கு வட்டி மற்றும் இலாபப் பங்காக 12.5 சதவீதம் பிரேரிக்கப்பட்டிருந்ததுடன் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டளவில் அந்த சதவீதம் 9 சதவீதம் வரை 5 வருட காலத்தில் 3.5 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ii) சபையின் அங்கத்துவ நிதியம் தொடர்ச்சியாக அதிகரித்திருந்த போதிலும், ஆண்டின் போது உழைக்கப்பட்ட இலாபம் அதிகரிக்காமையின் காரணமாக அங்கத்தவர் நலன்களைச் செலுத்துவதற்காக தொடர்ச்சியாக நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் அல்லது ஒதுக்கங்களை பயன்படுத்த வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் வட்டி மற்றும் இலாபப் பங்குகளை செலுத்துவதற்காக போதியளவான இலாபமொன்று நடப்பாண்டின் போது உழைக்காமையின் காரணமாக 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் இலாபப் பங்கை சமநிலைப்படுத்துவதற்காக ஒதுக்கத்திலிருந்து ரூபா 3,858,000,000 தொகை பெறப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 4,000,000,000 ஆகக் காணப்பட்ட இலாபப் பங்கை சமப்படுத்தும் ஒதுக்கம் 2016 அளவில் ரூபா 142,000,000 வரை கீழே வீழ்ச்சியடைந்தமையால் சபையின் அங்கத்தவர்களுக்கு எதிர்காலத்தின் போது நலன்களைச் செலுத்தும் போது ஆபத்திற்கு முகங்கொடுக்க நேரிடும் என்பதை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது. மேலும், 2015 ஆம் ஆண்டிற்குரிய 09 சதவீதமான நலன்களைக் தீர்ப்பதற்காக நிறுத்திவைக்கப்பட்ட இலாபத்திலிருந்து ரூபா 37,550,000 தொகையும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) 2014 ஆம் ஆண்டில் ரூபா 17,624,426,000 தொகையான வட்டி மற்றும் இலாபப் பங்குகள் என்பவற்றை நிதியீட்டம் செய்வதற்கு அவ்வாண்டில் உழைக்கப்பட்ட இலாபத்தை பயன்படுத்தியதன் பின்னர் இலாபப்பங்கை சமப்படுத்தும் ஒதுக்கத்திலிருந்து பெறப்பட வேண்டியது ரூபா 492,167,000 ஆக இருந்த போதிலும் அவ்வாண்டின் போது இலாபப்பங்கை சமப்படுத்தும் ஒதுக்கத்திலிருந்து ரூபா 515,000,000 பெறப்பட்டிருந்தது.

(இ) சபையினால் பத்து அங்கத்தவர் நலன்புரி நலன்திட்டம் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டினதும் கடந்த 03 வருடங்களினதும் தகவல்களை கவனத்தில் கொள்ளும் போது நலன்புரி நலன்களுக்கான உரித்தை பெறுகின்ற அங்கத்தவர் எண்ணிக்கை மொத்த அங்கத்தவர் எண்ணிக்கையில் 2015 ஆம் ஆண்டின் போதும் 2016 ஆம் ஆண்டின் போதும் முறையே 0.41 சதவீதம் மற்றும் 0.57 சதவீதம் என்ற சிறிய சதவீதமாக இருந்த போதிலும் அதற்காக ஏற்பட்ட செலவினம் செயற்பாட்டுச் செலவினத்தின் சதவீதமாக 22 சதவீதமான உயர்ந்த பெறுமதியினைக் கொண்டிருந்தது.

(ஈ) கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் தற்போது காணப்படுகின்ற அங்கத்தவர்கள் கணக்குகள், முகாமைத்துவ முறைமை மற்றும் ஏனைய மென்பொருள் முறைமைகள் தொடர்பாக ஆய்வு செய்து புதிய மென்பொருள் முறைமையொன்றை அபிவிருத்தி செய்வதற்கும், இடர்களைத் தடுப்பதற்குமான திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த பணிகள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.3 நிதிய முதலீடு

-----------------------

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையினால் அரசாங்கத்தின் சேமிப்பு பத்திரங்களைக் கொள்வனவு செய்யும் போது முதலீடு செய்யப்பட வேண்டிய துறைகளின் காலஎல்லை (Tenor), வினைத்திறன் விகிதம் மற்றும் நிதி தொடர்பாக முதலீட்டு மதியுரைப் பணிக்காக 2015 யூலை மாதம் முதல் தனியார் நிதி முகாமைத்துவ நிறுவனத்தின் உதவி பெறப்பட்டிருந்த போதிலும், இரு தரப்பிற்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டில் அந்த நிறுவனத்தின் மதியுரை உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி பிணைமுறி முதலாம் மற்றும் இரண்டாம் சந்தைகளில் கொள்வனவுகளின் முகப் பெறுமதி ரூபா 24,055,225,802 ஆகும். எழுத்துமூல உடன்படிக்கையின்றியும் கட்டணம் அறவிடப்படாமலும் வழங்கப்படுகின்ற மதியுரைகளின் சட்டரீதியான







செல்லுபடித்தன்மை மற்றும் சபைக்குரிய முக்கியமான நிதித்தகவல்களின் இரகசியத்தன்மை என்பவற்றைப் பாதுகாத்தல் தொடர்பாக பிரச்சினையான நிலமையொன்று இதன் மூலம் தோற்றம் பெறாது என்பதை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

மேற்கூறப்பட்ட தனியார் நிதி முகாமைத்துவ நிறுவனத்தின் ஆலோசனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் தொடர்பாக மேலும் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது அரச கடன் திணைக்களத்தில் திறைசேரி பிணைமுறிகளை ஏலமிடுவதற்காக கூறுவிலை கோரப்பட்ட வெற்றிகரமான 22 சந்தர்ப்பங்களுக்கிடையே ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட 100 சதவீத கேள்விகளும் நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் 13 ஆகக் காணப்பட்டது. அவ்வாறு நிராகரிக்கப்பட்ட பிணை முறிகளுக்காக இரண்டாம் சந்தையில் வினைத்திறன் விகிதம் தொடர்பாக கவனத்திற் கொள்ளும் போது காணப்படுகின்ற சந்தை நிலமை தொடர்பாக உரிய ஆய்வின்றி கூடிய வினைத்திறன் விகிதத்தின் கீழ் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டமையின் காரணமாக, முதலாம் சந்தையில் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலை நிராகரிக்கப்பட்டிருந்தது. அதனால் முதலாம் சந்தையில் முதலீடு செய்வதனால் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த நிதி நலன்கள் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 மே மற்றும் யூன் மாதங்களின் போது விநியோகிக்கப்பட்ட சர்வதேச சேமிப்பு பத்திரங்களை இனங்காணும் LKB01226F014 ஆம் இலக்க கடிதத்தில் சபையினால் முதலாம் சந்தையில் ரூபா 2,200 மில்லியன் தொகையான பிணை முறி 12.6 சதவீதத்திற்கும் 13.5 சதவீதத்திற்கும் இடையே வினைத்திறன் விகிதத்தில் கொள்வனவு செய்வதற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் அந்த சகல கேள்விகளும் நிராகரிக்கப்பட்டிருந்தன. எனினும் அந்த இலக்க பிணைமுறிக்கு 11.8 சதவீதத்திற்கும் 12.8 சதவீதத்திற்கும் இடையிலான குறைந்த வினைத்திறன் விகிதத்தின் கீழ் 2016 மே, யூன் மற்றும் யூலை மாதங்களில் ரூபா 1,927 மில்லியன் செலவில் இரண்டாம் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே சர்வதேச சேமிப்புப் பத்திரங்களை இனங்காணும் இலக்கம் LKB01025C157 இல் ரூபா 2,100 மில்லியன் தொகையான பிணைமுறிகள் 2016 யூன் மாதத்தின் போது முதலாம் தர சந்தையில் கொள்வனவு செய்வதற்கு 12.7 சதவீதத்திற்கும் 13.26 சதவீதத்திற்கும் இடையே வினைத்திறன் விகிதத்தின் கீழ் விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதும், அந்த கேள்விகளும்

நிராகரிக்கப்பட்டிருந்தன. எனினும், அந்த இலக்கம் குறிப்பிடுகின்ற பிணைமுறியே 12.25 சதவீதத்திற்கும் 12.58 சதவீதத்திற்கும் இடையேயாக குறைந்த வினைத்திறன் விகிதத்தின் கீழ் 2016 யூலை மாதத்தின் போது ரூபா 416 மில்லியன் செலவில் இரண்டாம் சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், சபையினால் நியாயமான கூறுவிலை சமர்ப்பித்து முதலாம் தர சந்தையிலிருந்து நேரடியாக கொள்வனவு செய்வதிற்கிருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்ததுடன் குறைந்த வினைத்திறனுடன் இரண்டாம் சந்தையிலிருந்து இந்த பிணைமுறிகள் கொள்வனவு செய்யப்பட்டமையின் காரணமாக பெறக்கூடியதாக இருந்த நிதி நலன்கள் சபைக்கும் அங்கத்தவர்களுக்கும் உரித்தற்று போயிருந்தது.

(இ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையினால் முதலாம் தர சந்தையிலிருந்து திறைசேரி பிணை முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு விண்ணப்பிக்கும் போது சேகரிக்கப்பட்ட வினைத்திறன் விகிதம் அதனுடன் சமமான துறைகளில் ஈடுபடுகின்ற நிதியத்தால் சமர்ப்பிக்கப்பட்ட வினைத்திறன் விகிதத்துடன் ஒப்பீடு செய்யும் போது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையினால் மிகவும் உயர்ந்த வினைத்திறன் விகிதத்தில் சமர்ப்பிக்கப்பட்டமையின் காரணமாக முதலீட்டுச் சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கொள்வனவுத் திகதி | சர்வதேச சேமிப்பு பத்திர இலக்கம் | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை | | சமமான துறைகளில் ஈடுபடுகின்ற நிதியம் | |
|---|---|---|---|---|---|
| | | நிராகரிக்கப்பட்ட பெறுமதி | வினைத்திறன் விகிதம் | ஏற்றுக் கொள்ளப்பட்ட பிணைமுறிப் பெறுமதி | வினைத்திறன் விகிதம் |
| | | ரூபா.மில்லியன் | (%) | ரூபா.மில்லியன் | (%) |
| 11/01/2016 | LKB01025H016 | 1,300 | 11.13-11.49 | 1,000 | 11.10 |
| 01/03/2016 | LKB00821H019 | 605 | 11.6-12.2 | 1,000 | 11.4 |
| | | | 12.2-12.5 | 2,000 | 11.45 |
| 16/05/2016 | LKB01024A014 | 440 | | 1,000 | 12.10 |

(ஈ) சபையினால் முதலாம் தர மற்றும் இரண்டாம் தர சந்தைகள் ஊடாக கொள்வனவு செய்யப்படுகின்ற திறைசேரி பிணைமுறிகள் "முதிர்ச்சியடையும் வரை நிறுத்தி வைக்கும் பிணைமுறி" ஆக வகைப்படுத்தப்பட்டு பெறப்பட்டமையினால் இரண்டாம் தர சந்தையில் விற்பனை செய்வதனால்





பெறக்கூடியதாக இருந்த நிதி நலன்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை அரசாங்கத்தின் சேமிப்புப் பத்திரங்களில் நிதியம் முதலீடு செய்யப்படுகின்ற பிரதான முன்னுரிமை நிறுவனமாக இருந்த போதிலும், சேமிப்பு பத்திர ஏலவிற்பனையின் போது நேரடியாக கூறுவிலை சமர்ப்பிக்கும் வசதிகள் (Dealership) சபையினால் இலங்கை மத்திய வங்கியிலிருந்து கைப்பற்றுவதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2016 ஆம் ஆண்டின் போது சபையினால் இரண்டாம் சந்தை ஊடாக திறைசேரி பிணைமுறிகள் கொள்வனவு செய்தல் தொடர்பான பரீட்சிப்பின் போது 08 ஆரம்ப வாடிக்கையாளர்களுடன் அக்கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றிருந்ததுடன் திறைசேரி கொள்வனவுகளில் உயர்ந்த சதவீதமொன்றை அதாவது 41 சதவீதம் சர்ச்சைக்குரியதாகக் காணப்பட்ட ஒரு தனியார் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், 40 சதவீதம் வேறொரு தனியார் கம்பனியுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஏனைய ஆரம்ப வாடிக்கையாளர் ஆறு பேர்களுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த சகல கொள்வனவுகளும் 19 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

(எ) 2016 திசெம்பர் 13 ஆந் திகதி நடைபெற்ற திறைசேரி உண்டியல்கள் ஏலவிற்பனையின் போது 364 நாட்களில் காலாவதியாகின்ற உண்டியல்களில் சபை ரூபா 4,000 மில்லியன் தொகையை 10.35 சதவீத வினைத்திறன் விகிதத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மாற்றுவழி முதலீட்டுச் சந்தர்ப்பம் (தொகுதிக்கடன் / நிலையான வைப்பு) தொடர்பாக சரியான ஆய்வின்றி குறைந்த வட்டி விகிதத்திற்கு மேற்கூறப்பட்ட முதலீடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் சபைக்கு கிடைக்ககூடியதாக இருந்த நிதி நலன்கள் இழக்கப்பட்டிருக்கவில்லை என்பதை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

2016 செப்தெம்பர் 12 ஆந் திகதி திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டளையின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட முதலீட்டைச் செய்ய வேண்டுமாகையால் அந்த முதலீடு தொடர்பாக முன்ஆய்வு செய்யும் சந்தர்ப்பமொன்று இல்லாதிருந்ததாகவும் சபையின் தலைவரால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

4.4 **சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சதுப்பு தன்மையுடைய நிலம் இலங்கை உப்புக் கம்பனிக்கு அரசினால் கையளிப்பதற்குரிய வாடகை உடன்படிக்கையின் 09 ஆம் இலக்க பிரிவின் பிரகாரம், பிரதேச செயலாளரின் முன் அங்கீகாரமின்றி உரிய காணி அல்லது அதன் கட்டிடம் துணைக் கம்பனியின் நடவடிக்கைகளுக்காக தவிர வேறு எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்த முடியாததாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், துணைக் கம்பனியில் சபையின் விளையாட்டுச் சங்கத்திற்கு ஓய்வு விடுதியொன்றை நிர்மாணிப்பதற்கு 80 பேர்ச் கையளிக்கப்பட்டிருந்தது. விளையாட்டுச் சங்கத்திற்கு அக்காணியில் ஓய்வு விடுதியை நிர்மாணிப்பதற்காக சபையினால் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 3,000,000 கடன் பணம் எவ்வித சட்டரீதியான அடிப்படையுமின்றி 10 சதவீத வட்டி வீதத்தில் 24 தவணைகளில் தீர்ப்பதற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் அரசாங்கத்தின் வங்கியொன்றில் பேணப்பட்டுச் செல்கின்ற நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட காசோலைக்காக அடுத்த தினம் பணத்தை செலவு வைக்கும் வசதியை வழங்குவதற்காக 2006 ஆம் ஆண்டின் போது இரு தரப்பினர்களுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் சபையினால் ரூபா 500,000,000 ஆரம்ப வைப்பு உரிய வங்கியில் பேணப்படுகின்றது. வருடாந்தம் முதிர்ச்சியடையும் மீள்கொள்வனவு உடன்படிக்கையாக பேணப்பட்டுச் செல்லப்படுகின்ற அந்த வைப்பு தொடர்பாக இரு தரப்பினர்களுக்குமிடையே முறையான உடன்படிக்கை காணப்படாததுடன் வருடாந்தம் வட்டி வீதம் தீர்மானிக்கப்படுகின்ற முறையும் பிரச்சினைக்குரியதாக இருந்தது. உரிய சேவையினை வழங்குவதற்காக வங்கியினால் மாதாந்தம் ரூபா 100,000 வீதம் மேலதிக கட்டணம் அறவிடப்பட்டதுடன், அக்கணக்கில் ரூபா 5,000,000 தொகையான ஆகக் குறைந்த மீதியும் பேணப்பட வேண்டியுள்ளது. அந்த வைப்பிற்குரிய வட்டி வீதம் 2015/2016 ஆம் ஆண்டுகளின் போது 6.5 சதவீதமும், 2016/2017 இன் போது 8.9 சதவீதம் மற்றும் 10.8 சதவீதம் எனக் கிடைத்திருந்தது. மேற்கூறப்பட்ட இணக்கப்பாட்டின் காரணமாக அந்தப் பணம் அதிக நலனுள்ள சதவீத முதலீட்டில் ஈடுபடுத்தி சபைக்கு பெறக்கூடியதாக இருந்த நிதி நலன்கள் இழக்கப்பட்டிருந்தது.







4.5 **இனங்காணப்பட்ட நட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் மூன்று கம்பனிகளின் தொகுதிக்கடன்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீட்டுக்காக 2006 ஆம் ஆண்டு வரை கிடைக்க வேண்டிய ரூபா 27,497,905 தொகையான வட்டி வருமானம் அந்த ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. அதனை அறவிடுவதற்கு எடுக்கப்பட்ட சட்டரீதியான நடவடிக்கைகள் தொடர்பாக அல்லது அறவிடுவதற்குள்ள இயலுமையின் தன்மை தொடர்பாகவோ இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் பிரகாரம் நிதி ஏற்பாடுகள் அல்லது வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் ஊழியர்களுக்கு தங்குமிடங்களை வழங்குவதற்கு சபையின் செலவினத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற சுற்றுலா விடுதிகளிலிருந்து 2016 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற தேறிய நட்டம் ரூபா 2,817,000 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது கிடைத்த தேறிய நட்டம் ரூபா 2,938,000 ஆக இருந்தமை சபையின் அங்கத்தவர்களின் நலன்களைச் செலுத்துவதற்காக காணப்படுகின்ற நிதியம் குறைவடைந்தமை தொடர்பில் தாக்கமளித்திருந்தது.

(இ) சபை முன்னர் மூன்று நம்பிக்கை பொறுப்பு நிதியங்களில் மேற்கொண்டிருந்த முதலீடுகளில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 356,426,847 தொகையான சந்தைப் பெறுமதி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 21,696,000 இனாலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 3,846,000 இனாலும் வீழ்ச்சியடைந்தமையினால் அந்த அளவால் நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) சபையியால் ரூபா 25,284,181 தொகை முதலீடு செய்யப்பட்ட 03 கம்பனிகளுக்குரிய இரண்டு கம்பனிகள் கலைக்கப்பட்டிருந்ததுடன் மற்றைய கம்பனி முறிவடைந்ததின் கீழ் (Default Board) காண்பிக்கப்பட்டிருந்தது. கலைப்பதற்கு உட்பட்டிருந்த இரண்டு நிறுவனங்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், முதலீட்டாளர்களிடமிருந்து மீண்டும் பெறுமதியை மீண்டும் அறவிடும் இயலுமை தொடர்பாக சரியான உறுதிப்படுத்தலொன்று சபையில் காணப்படவில்லை.

(உ) வனிக் கம்பனியின் உத்தரவாதச் சீட்டுக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 12,174,382 தொகை மற்றும் தொகுதிக் கடன்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 7,450,259 தொகைகள் முறையே 2002 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளின் போது தேறக்கூயதாக இருந்த போதிலும், அந்த பணத்தை தேறச் செய்வதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபைக்கு முடியாதிருந்தது.

(ஊ) சபையின் சாதாரண பங்கு முதலீட்டாளர்களின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நியாயப் பெறுமதி ரூபா 12,095,980,000 ஆக இருந்ததுடன், 2017 மார்ச் 31 ஆந் திகதி வரையில் இறுதிப் பெறுமதி ரூபா 465,748,000 இனால் அதாவது 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளில் காணப்படுகின்ற பிரதான நிறைவேற்றுப் பதவியான பொது முகாமையாளர் பதவி 2013 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது. இந்தப் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டமை சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கும் உயர் முகாமையின் மேற்பார்வைக்கும் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அவ்வாறே சபையின் முதலீட்டுத் தொகுதியின் செயற்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குத் தேவையான மதியுரைகளை வழங்குவதற்கு பட்டயம் பெற்ற நிதிசார் மதியுரையாளர் ஒருவரை ஆட்சேர்க்காமை சிறந்த முதலீடு தொடர்பான தீர்மானம் எடுக்கும் போது தாக்கத்தை ஏற்படத்தாதிருக்கும் என்பதை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது. இந்த நிலமை 4.2 ஆம் நிதிய முதலீடு தொடர்பான பந்தியின் அவதானிப்புக்களிலும் மிகவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

## 4.7 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1981 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை சபையினால் சேவைப் பங்களிப்பு நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட்டிருந்த கூட்டுமொத்தமாக ரூபா 1,764,995,612 மற்றும் 1996 முதல் 2002 காலப்பகுதிக்குரிய இனங்காணப்படாத ரூபா 1,228,101 தொகையான பங்களிப்புப் பணம், நிதிய அதிகாரச்சட்டத்தின் 16 ஆவது பிரிவின் பிரகாரம் அந்தந்த அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளில் செலவு வைக்கப்படாது வேறொரு தற்காலிக கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக உரிய அங்கத்தவர்களுக்கு தமது பணம் இழக்கப்படும் ஆபத்துக் காணப்பட்டது. இந்த பணம் தாமதமாக அங்கத்தவர்களின்







கணக்குகளில் செலவு வைப்பதற்காக விஷேட பிரிவொன்று 2016 பெப்ரவரி 10 ஆந் திகதி தாபிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 மார்ச் 01 முதல் 2017 யூன் 30 ஆந் திகதி வரை அதில் ரூபா 137,000,000 தொகை மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்துவத்தை பெறாமல் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் மாத்திரம் பதிவு செய்துள்ள தொழில்தருனர்களுக்காக சபையினால் தற்காலிகமாக பதிவு இலக்கம் வழங்கப்பட்டு போலியான (Dummy) தொழில்தருனராக பதிவு செய்து அந்த பங்களிப்பு பணம் “XX” என்ற பெயரில் கணக்கொன்றில் பேணப்படுகின்றது. 1984 ஆம் ஆண்டு முதல் அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்த போலியான தொழில்தருனர்களின் எண்ணிக்கை 2017 மே 31 ஆந் திகதியளவில் 14,232 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் உரிய அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளில் செல்வு வைக்கப்படாமல் “XX” கணக்கில் 2017 மே 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதி ரூபா 140,265,923 ஆக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது மாத்திரம் அந்த தொழில்தருனர்களிடமிருந்து அறவிடப்பட்ட பங்களிப்பு பணம் மற்றும் மிகைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 45,189,980 ஆகும். இவ்வாறு போலியான தொழில்தருனர்களாக பதிவு செய்துள்ள தொழில்தருனர்கள் சபையின் உள்ளபடியான தொழில்தருனர்களாக பதிவுசெய்து கொள்வதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று ஊழியர் சேமலாப நிதியத்துடன் தொடர்புபடுத்தி தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் சபையின் மாதாந்த கணக்குகள் தொடர்பாக மாதாந்தமும், வருடாந்த கணக்குகள், பாதீடு, வருடாந்த அறிக்கை, கூட்டிணைந்த திட்டம் தொடர்பான அறிக்கையும், தலைவரால் கையளிக்கப்பட்ட புலனாய்வுகளும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வின் மூலம் நிதியத்தின் பிரதான பணிப்பொறுப்பான நிதியத்தின் முதலீடு மற்றும் அதன் நலன்கள் போன்ற துறைகளில் வெளிப்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் நேரடியான உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான பதவியணியினர்கள் 34 இற்கு வரையறுக்கப்பட்டிருந்ததுடன், அதில் பட்டம், பூர்த்தியான அல்லது பகுதி தொழிற் தகைமை பெற்றவர்களின் எண்ணிக்கை 09 பேர்களாக இருந்தனர். 2016 திசெம்பர் 31 வரையில் ரூபா 249,089,083,000 தேறிய சொத்துக்கள் காணப்படுகின்ற நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு போதியளவான தகைமை பெற்ற பதவியணியொன்று இருக்காமை அதன் விடயப்பிரிவில் தாக்கமளித்திருந்தது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் 2016 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் உள்ளபடியான வருமானத்தையும் ஒப்பீடு செய்த போது வருமானத் தலைப்புகளுக்கிடையே 25 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்ட 06 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதன்போது விலை குறிப்பிடப்பட்ட பங்குகளின் அடிப்படையில் இலாபப் பங்கு மற்றும் பணச் சந்தை வைப்பு வட்டி முறையே 96 சதவீதம் மற்றும் 29 சதவீதமாக பாதீட்டு அளவைவிட குறைவடைந்திருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் பாதீடு செய்யப்பட்டதை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்யும் போது 25 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடையே முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது 16 செலவின விடயங்களில் 50 சதவீதத்திற்கும் 202 சதவீதத்திற்குமிடையே முரண்கள் அவதானிக்கப்பட்ட 13 விடயங்களுக்கும் காணப்பட்டன. அதன்போது சரியான நலன் திட்டம், வட்டிக்கிரயம், அலுவலக பராமரிப்பும் தேவைகளும், நானாவித செலவினம் மற்றும் கட்டிட பராமரிப்புச் செலவினம் என்பன முறையே 66 சதவீதம், 130 சதவீதம், 71 சதவீதம் மற்றும் 53 சதவீதம் என பாதீடு செய்யப்பட்ட அளவை விட அதிகரித்திருந்ததுடன் மொத்த அங்கத்தவர் செலவினம் 39 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட எண்ணிக்கைக்கும் உள்ளபடியான எண்ணிக்கைக்கும் இடையே கவனத்திற் கொள்ளக்கூடிய முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.





විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

**5.3 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்**

சபையினால் 2016 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 16,252,053 தொகையான 05 பெறுகை செயற்பாடுகள் தொடர்பில் விடயம் தொடர்பான நிபுணர் மற்றும் வரிசை அமைச்சின் பிரதிநிதியொருவர் என்பவர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவை பிரதிநித்துவப்படுத்தாமை, பெறுகை கால அட்டவணை தயாரிக்காமை, மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்படாமை, கேள்விகளின் செல்லுபடிக்காலம் குறிப்பிடப்படாமை மற்றும் முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமை போன்றவற்றை உள்ளடக்கிய குறைபாடுகள் காரணமாக அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.8.1 (ஆ), 2.8.4, 4.2.2 (அ), 4.3.1, 4.3.2, 5.2.1 (அ), 5.3.10 மற்றும் 8.9.1 போன்ற பிரிவுகள் மீறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.4 பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கட்டளைகள் அமுல்படுத்தப்படாமை**

சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சபையின் தலைவராக இருப்பதுடன் அவர் நிதிசார் நடவடிக்கைகள் தொடர்பான நிறுவனமாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையின் தலைவராகவும் இருக்க வேண்டியிருந்தமை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு அதிகாரச் சட்டத்தின் 5(2) ஆம் பிரிவு திருத்தம் செய்யப்பட வேண்டியமையும் 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுக் கூட்டத்தின் போது பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும், 2017 மே 31 வரையிலும் அதற்குரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

விகணகாධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. |
| (ஆ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | | தொழில்தருனர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற பணம் அங்கத்தவர்களின் கணக்குகளில் தாமதமின்றி செலவு வைக்காமை. |
| (இ) நிதிய முகாமைத்துவம் | (i) | தொழில்தருனர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணம் ஆகக்கூடிய பாதுகாப்புடனும் அதிக நலன்களையும் பெறக்கூடிய வகையிலும் முதலீடு செய்யப்படாமை |
| | (ii) | முதலீடு செய்யப்பட்ட நிதியத்தை மதிப்பீடு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தாமை. |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | | பாதீடு செய்யப்பட்ட வருமானங்களுக்கும் செலவினங்களுக்கும் இணங்க நடவடிக்கைகள் எடுக்காமை |
| (உ) உள்ளகக் கணக்காய்வு | | சகல துறைகளையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி





**கணக்காய்வளர் தலைமை அதிபதி அறிக்கைக**
கான சபையின் அவதானிப்புக்கள்
2016

### 2.3.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**அ)** மேல் நடவடிக்கைகளுக்காக கவனத்திற் கொள்ளப்பட்டது.

### ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இல 16

இலங்கை கணக்கீட்டு நியம இல 16இல் 51ஆவது பிரிவின் பிரகாரம் வருடாந்தம் சொத்துக்கள் பெறுமானத்தேய்வு முறை மற்றும் எஞ்சிய ஆயுட்காலத்தினை மாற்ற வேண்டும் என கருதப்படின், குறிப்பிட்ட சரிப்படுத்தல்கள் இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 8இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டின் வித்தியாசமாக கணக்கில் வைக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சொத்தொன்று 25 வருட காலமாகப் பயன்படுத்தப்படல் மற்றும் குறிப்பிட்ட பயன்படுத்தப்படும் சொத்து குறைந்து செல்லும் மீதி முறையின் கீழ் கழிப்பது இலங்கைக் கணக்கீட்டு நியம இல 16இன் 51ஆவது பிரிவின் பிரகாரம் காணப்படும் பெறுமானத்தேய்வு கொள்கையினை மாற்றுவதற்கு காரணம் அல்ல என்பது எமது அபிப்பிராயமாகும்.

கணக்காய்வு விசாரணையின் போது குறிப்பிட்டுள்ள 441 மில்லியன் ரூபா பெறுமதியுள்ள சொத்துக்களின் 2016.12.31ஆந் திகதியில் தேறிய பெறுமதி 176 மில்லியன் ரூபா மாத்திரமே என்பதுடன், குறிப்பிட்ட சொத்துக்களில் 54 மில்லியன் ரூபா காணிகள் மற்றும் கட்டடங்களைக் கொண்டிருப்பதுடன், தேறிய சொத்துக்கள் பெறுமதி 122 மில்லியன் ரூபாவாகிய எஞ்சிய சொத்துக்கள் சபையினால் அனறாடம் பயன்படுத்தப்படும் மோட்டார் வண்டிகள், அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் கணினி உதிரிப்பாகங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளன. சபையின் கணக்கீடுடுக் கொள்கையின் பிரகாரம், சொத்துக்ளின் பெறுமானத்தேய்விற்கு குறைந்து செல்லும் மீதி முறை கொள்கையினைப் பயன்படுத்துவதுடன், சொத்தொன்று பாவனைக்குப் பொருத்தமற்றது எனத் தீர்மானித்து அகற்றும் வேளை வரை குறைந்து செல்லும் மீதி புத்தகங்களில் காட்டப்படும். அதன் படி, எஞ்சிய ஆயட்காலம் மற்றும் பெறுமானத்தேய்வு ஆண்டுதொகை முறையினை மாற்றும் தேவை சபைக்கு இது வரையில் ஏற்படவில்லை.

### இ) இலங்கை கணக்கீட்டு நியம இல 39

(i) தங்கள் அவதானிப்புடன் இணங்க முடியவில்லை.

இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 39இன் 61 ஆவது பிரிவின் பிரகாரம், முதலீட்டொன்றின் செலவு நியாயமான விலையை விடக் குறைவான பெறுமதியைக் கொள்ளல் முதலீட்டில் நிலையான மதிப்பிழப்பினை ஏற்படுத்தியதாக (ீநசஅயநெவெ ஐஅியசைஅநவெ) உறுதி செய்வதற்கு ஒரு காரணியாக அமையலாம் என்றாலும் (ஆயல டிந உழளெனைநசநன) அது ஒன்றே ஒரு காரணியல்ல. இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 39இன் 61 ஆவது பிரிவின் பிரகாரம், கவனத்திற் கொள்ளும் முதலீடுகளின் முன் விளைவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் தொழில்நுட்ப விடயங்கள், சந்தை நிலைமை, பொருளாதார காரணிகளின் சட்டரீதியான சூழல்கள் ஆகிய காரணிகளை மிகவும் ஆழமாக ஆய்தல் வேண்டும்.

சபையின் முதலீட்டுப் பகுப்பாய்வாளர்களால் தொடர்ச்சியாக முதலீட்டுத் தொகுப்பில் உள்ள எல்லா முதலீடுகள் தொடர்பில் விபரமாக ஆய்வொன்று மேற்கொள்ளப்படுவதுடன், சந்தை விலை மாறல்களை மாதாந்தம் பணிப்பாளர் சபைக்கு அறிவிப்பதும் மேற்கொள்ளப்படும். 2016ஆம் ஆண்டிற்கு உரியதாக அவ்வாறு நிலையான மதிப்பிழப்பொன்று ஏற்பட்டதாகக் கருதி இலாப நட்டக் கணக்கில் பதிவழிப்பதற்கு எவ்வித முதலீடும் குறித்து பணிப்பாளர் சபை தீர்மானித்ததில்லை.

எவ்வாறெனினும், 2017 ஆண்டில், முதலீடுகள் சில அவ்வாறு நிலையான மதிப்பிழப்பு ஏற்பட்டதாகக் கருதி ஏற்கனவே இலாப நட்டக் கணக்கில் பதிவழிக்கப்பட்டுள்ளதுடன், 2017ஆம் ஆண்டு இறுதியின் போது, மேலும் சில முதலீடுகளை அவ்வாறு பதிவழிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால், அவ்வாறு முறையான ஆண்வின் பின்னர் நிலையான மதிப்பிழப்பிற்கு ஆளானதாக முகாமை தீர்மானிக்கும் பட்டியலிடப்பட்ட முதலீடுகள் கணக்கிட்டு நியமங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கில் வைக்கப்படும்.



(ii) தங்கள் அவதானிப்புடன் இணங்க முடியவில்லை.

முதலீடொன்று நிரந்தரமாக மதிப்பிழத்தல் **(Permanent Loss of Capital)** கவனத்திற் கொள்ள வேண்டிய பாரிய விடயங்களுள் குறுங்கால ரீதியில் பங்கொன்றின் சந்தை விலை 20% அல்லது 30% அளவுகளுக்கு இடையில் வீழ்ச்சி அடைதலை கவனத்திற் கொள்ள வேண்டிய ஒரு விடயமாக இருப்பினும், **(May be Considered)** பங்கொன்றின் நியாயமான பெறுமதி வீழ்ச்சி அடைதல் மீது மாத்திரம் நிறுவி பட்டியலிடப்பட்ட பங்கு முதலீடுகள் நிலையாக மதிப்பிழந்ததாகக் கருதுதல் இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 39இன் 59ஆவது பிரிவின் பிரகாரம் சரியான கூற்றல்ல.

கொழும்பு பங்குப் பரிமாற்றத்தின் அண்மைய காலத்து சந்தை நடத்தையினப் பார்க்கும் போது முதலீடுகள் பலவற்றிற்கும் குறிப்பிடத்தக்க மற்றும் நீண்ட காலமாகக் கவனத்திற் கொள்ள வேண்டிய மட்டத்தில் காணப்படும் முதலீடுகளாக மட்டுப்படுத்தக் கூடிய நிலைமை காணப்படுகின்றது.

எவ்வாறெனினும், இவ் எவ்வித முதலீடும் நிதி முதலீட்டு மதிப்பீடு மற்றும் இனங்காணலுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 39இன் 59ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் முதலீட்டு நிலையான மதிப்பிழப்பிற்கு அனுகூலமாகப் பங்களிக்கும் இலாபத்தில் குறைவடைவு, பங்கொன்றின் ஆதாயத்தில் குறைவடைவு, தேறிய சொத்துக்களில் குறைவடைவு போன்ற இவ்வாறான வேறு எவ்வித நோகத்தினையும் கொண்டிராத ஆதாரமொன்று கண்டுகொள்வதற்கில்லை.

நிதிச் சொத்தொன்றின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் ஏற்படும் நிகழ்வு ஒன்றின் அல்லது சிலவற்றின் விளைவாக மதிப்பிழப்பிற்கு உட்படக் கூடிய கணிக்கப்பட்ட ஆதாரம் இருப்பின் மாத்திரம், அந்நட்டமிக்க நிகழ்வுகளினால் நம்பிக்கை மிக்கதாக மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்ட நிதிச் சொத்தின் அல்லது நிதிச் சொத்துத் தொகுதியொன்றின் மதிப்பீட்டுக்கு உட்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலில் தாக்கம் இருப்பின், அந்நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துத் தொகுதியொன்று மதிப்பிழப்பிற்கு உள்ளாக்குவதற்கு மற்றும் மதிப்பிழப்பு நட்டத்தினை அடைவதற்கு இயலும். மதிப்பிழப்பிற்கு ஏதுவாகக் கூடிய தனி, வெவ்வேறாகிய நிகழ்வுகளை இனங்காண்பதற்கு முடியாது போகலாம். ஒன்றிணைந்த நிகழ்வொன்று **(Combined Event)** அல்லது பல்வேறு நிகழ்வுகள் மதிப்பிழப்பிற்கு ஏதுவாக அமையலாம். எதிர்காலத்தில் ஏற்படும் நிகழ்வொன்றின் முன் விளைவு ஒன்றாக எதிர்பார்க்கப்படும் நட்டம் அது ஏற்படக்கூடிய இயலுமை எவ்வளவு அண்மித்ததாக இருப்பினும் இனங்காணப்படமாட்டாது.

நிதிச் சொத்தோன்று அல்லது கூட்டு நிதிச் சொத்துக்கள் மதிப்பிழப்பிற்கு பயன்படுத்தும் கணிக்கப்பட்ட ஆதாரங்களில் உள்ளடங்கிய கண்காணிப்புத் தரவுகள் கீழ் குறிப்பிட்டுள்ள நட்டமிக்க நிகழ்வுகளின் பொது சொத்துக்களைக் கொண்டிருப்பவர் கவனத்திற்கு கொள்ளுதல் வேண்டும்.

(அ) வழங்குபவரின் அல்லது பொறுப்பை உடையவரின் குறிப்பிடத்தக்க அளவிலான நிதி இடர்ப்பாடு

(ஆ) ஆரம்பத் தொகை அல்லது வட்டி கொடுப்பனவைத் தவறவிடுதல் போன்ற ஒப்பந்தமொன்றினை மீறுதல

(இ) கொடுப்பனவாளரால் வேறு விதத்தில் கவனத்திற் கொள்ளாத பொருளாதார மற்றும் சட்ட ரீதியான காரணத்தினால் கடன் வாங்குபவருக்கு ஏற்படும் நிதி இடர்ப்பாடு மீது வழங்கப்படும் நிவாரணம

(ஈ) கடன் வாங்குபவர் முறிவடைவிற்கு அல்லது நிதிப் புனரமைப்பிற்கு ஆளாகும் இயலுமை

(உ) நிதி இடர்ப்பாட்டினால் நிதிச் சொத்துக்களுக்கு செயற்படு சந்தையொன்றினைக் கண்டு கொள்ள முடியாமை

(ஊ) கூட்டுச் சொத்துக்களுள் அடங்கியுள்ள ஒவ்வொரு நிதிச் சொத்தின் குறைவடைவினை இது வரை இனங்காண முடியாதெனினும், பின்வருவனவற்றை உள்ளடக்கிய கண்காணிக்கக் கூடிய தரவுகளால் காட்டக் 4டிய கூட்டு நிதிச் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட எதிர்கால நிதிப் பாய்ச்சல்களில் கணக்கிடக்கூடிய குறைவடைவு,

(i) சமூகத்தினுள் உள்ள கடன் வாங்வோரின் செலுத்தும் நிலைமையில் ஏற்படக்கூடிய பாதகமான மாற்றமொன்று (உதாரணமாக, தாமதமாகச் செலுத்துகை உயர்வடைதல் அல்லது குறிப்பிட்ட கடன் எல்லையினை அண்மித்துள்ள மாதாந்த குறைந்தபட்ச கட்டணத்தைச் செலுத்தியவாறு உள்ள கடனட்டை உரிமையாளர்கள்)

(ii) சமூகத்தினுள் உள்ள சொத்துக்கள் மீது தவறுவதற்கு தேசிய அல்லது பிரதேச பொருளாதார நிலைமை மற்றும் தொடர்பு

(உதாரணமாக, கடன் வாங்குவோரின் பூகோளப் பிரதேசத்தினுள் நிகழும் வேலையில்லா வீதத்தில் ஏற்படும் அதிகரிப்பு, அப்பிரதேசங்களில் அடகுச் சொத்துக்களின் விலைகள் குறைவடைதல், எண்ணெய் உற்பத்தியாளர்களின் கடன் ஆதனங்களுக்கான எண்ணெய் விலைகள் குறைவடைதல் அல்லது சமூகத்தினுள் உள்ள கடன் வாங்குவோரைப் பாதிக்கும் கைத்தொழிற்றுறையில் ஏற்படும் பாதகமான மாற்றங்கள்)

மேலும், இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 39இன் 61ஆவது பிரிவின் பிரகாரம் அத்தியாயம் 59இல் குறிப்பிட்டுள்ள சந்தர்ப்பங்களுக்கு மேலதிகமாக பங்கு முதலீடுகளின் ஆகுசெலவினை மீள அறவிடமுடியாத அளவில் பாதகமான தாக்கம் ஏற்படுமாறு தொழில்நுட்பச் சந்தை பொருளாதார அல்லது சட்ட ரீதியான சூழலில் ஊற்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்களுடன் கூடிய தகல்கள் சந்தை முதலீடுகள் மதிப்பிழப்பிற்கான கணிக்கப்பட்ட ஆதாரமாகக் குறிப்பிடலாம்.

எவ்வறெனினும், முதலீட்டு அமைப்பில் உள்ள மேற் குறிப்பிட்டுள்ள காரணிகள் பலவும் உறுதிப்படுத்தப்படும் கீழ் குறிப்பிட்டுள்ள முதலீடுகளை அகற்றுவதற்கு 2017ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

| நிறுவனம் | பங்குகளின் எண். | தொகை ரூபா | விற்பனை விலை ரூபா | நட்டம் ரூபா |
|---|---|---|---|---|
| பி சீ ஹவுஸ் | 188,500 | 113,280 | 18,668 | 94,611 |
| த பினான்ஸ் | 30,600 | 306,000 | 156,385 | 149,614 |
| பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மன்ட் | | | | |
| இன்வெஸ்ட்மன்ட்ஸ் | 59,400 | 142,560 | 105,722 | 36,837 |
| புளு டயமண்ட் | 52 | 182 | 71 | 110 |
| பாம் கார்டன் | 49 | 3,062 | 1,497 | 1,565 |
| **மொத்த நட்டம்** | | | | **282,738** |

மேற் குறிப்பிட்டுள்ள நிரந்தரமாக மதிப்பிழப்பிற்கு உள்ளாகிய பங்குகளின் காரணமாக ஏற்படக் கூடிய உச்சளவு பாதகமான தாக்கம் 282,738 ரூபா அளவிலாகும்.

அதனால், கணக்காய்வு விசாரணையில் குறிப்பிட்டள்ள முதலீடுகளிலிருந்து மேற் குறிப்பிட்டுள்ள 5 நிறுவனங்களில் முதலீடுகள், நிரந்தரமாக மதிப்பிழப்பிற்கு உட்பட்டதாகக் கருதி இலாபநட்ட கணக்கில் பதிவழிப்பதற்கும், எஞ்சிய முதலீடுகளின் விலை மாற்றம் விபரமான இலாபநட்ட கணக்கில் விலை மாற்றம் எனக் காட்டப்பட்டுள்ளது.

### 2.3.2 விளக்கம் அளிக்கப்படாத மாற்றங்கள்

(அ) சபையின் 2016/2017 மதிப்பீட்டு ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வரி அறிக்கையின் படி 2016 திசெம்பர் 31ஆந் திகதியில் மொத்த வரி சேகரிப்பு 2,287,404,225 ரூபாவாக இருப்பினும் அதை வருமானக் கூற்றில் 2,394,498,000 ரூபாவாகக் காட்டப்பட்டுள்ள பெறுமதியில் சந்தை வருமானம் கிடைக்கப் பெறும் போது குறைக்கப்பட்ட நிறுத்திவைத்த வரிகளின் ஆகுசெலவு உள்ளடங்கும். இப்பெறுமானம் 107,093,775 ரூபாவாகும். வருமான வரி அறிக்கையின் பிரகாரம் வரி சேகரிப்பு மற்றும் நிதி நிலைமைக் கூற்றின் படி செலுத்த வேண்டியவ ரி சேகரிப்பில், வேறுபடும் 43,663,000 ரூபா உள்ளடங்குவது 2016ஆம் ஆண்டிற்கு உரியதாக 2017ஆம் ஆண்டில் கிடைக்கும் விலை கூறப்பட்ட தொகுதிக்கடன் வட்டியிலிருந்து மற்றும் நிலையான வைப்பு வட்டியிலிருந்து ஆரம்பத்தில் கழிக்கப்படும் வரிகளுக்குரிய சேர் வரியாகும்.



### 2.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

சபைக்குரிய நவம் மாவத்தியில் அமைந்துள்ள காணி அரச மதிப்பீட்டாளர்களால் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதுடன், குறிப்பிட்ட மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரச மதிப்பீட்டாளர்களால் அறவிடப்பட்ட கட்டணம் மிக உயர்ந்த பெறுமானம் என்பதால், அக்கட்டணத்தைக் குறைத்துத் தருமாறு உரிய நிறுவனங்களிடத்தில் கோரப்பட்டுள்ளது. குறிப்பிட்ட அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், முதலீட்டுச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டிருக்கும் இக்காணி மீள்மதிப்பீடு செய்வதால் ஏற்படும் இலாபம் **AFS**இல் குழுமமாக கணக்கு வைக்கப்பட்டிருப்பினும், 2016 ஆம் ஆண்டு முதல் நவம் மாவத்தை காணியின் மீள்மதிப்பீட்டுஇலாபம் இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 40இன் பிரகாரம் இலாபநட்டக் கணக்கிற்கு மாற்றப்பட்டது.

(ii) திறைசேரி முறிகளின் காவுகைக் கிரயம் (**Carrying Cost**) கணக்கிடும் போது ஏற்பட்ட கணித ரீதியான தவறாகும். அது திருத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட திருத்தம் தொடர்பில் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல. 4.4.1 (2)இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மீளாய்வாண்டில் திறைசேரி முறிகாளால் தேறும் வருமானத்தை சரியாகக் கணக்கிட்டு வைப்பதற்குகுறிப்பிட்ட செம்மையாக்கம் சரியானது என உறுதிப்படத்துவதற்கு சிறந்த ஓர் ஆதாரம் எனக் குறிப்பிட விரும்புகின்றேன்.

## 2.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

(அ) 2011ஆம் ஆண்டிற்கு முன் ஆண்டுகளுக்கு உரிய ஐந்தாம் வருடம் சித்தியடைந்தோருக்கு செலுத்த வேண்டியதாக திருத்தப்படுதல் வேண்டும்.

2009 ஆம் ஆண்டு வரை ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பணம் தேசிய சேமிப்பு வங்கியினாலேயே செலுத்தப்பட்டது. அதன் படி வங்கிக்கு உரிய புலமைப்பரிசில் பணத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்வராத புலமைப்பரிசில் பெறுநர்களின் பணத்தினை மீண்டும் வங்கியினால் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அப்புலமைப்பரிசில் பெறுநர்களை இனங்கண்டு 2017.11.30ஆந் திகதியில் 16 பேருக்கு 263,324.42 ரூபா தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேலும், 25 சிறுவர் சிறுமியரை இனங்கண்டு அதற்காக 404,953.75 ரூபா தொகைக் கொடுப்பனவிற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதன் பிரகாரம், எஞ்சிய 83 பிள்ளைகளுக்கு பதிவுத் தபாலில் தேடப்பட்டுள்ளது. புதிய முகவரிகளுக்கு கடிதங்கள் தபாலில் இடப்பட்டுள்ளன. அவர்கள் முன்வந்ததுடன், உரிய பணத்தினை அவர்களுக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) உரிமைக் கோரப்படாத மரண நலன்கள் கணக்கில் 2016.12.31ஆந் திகதியில் காணப்பட்ட நிலுவை 9,992,461.53 ரூபாவாகும். (நலன் விண்ணப்பதாரிகள் -842) அங்கத்தவர்களின் மரணத்தின் பின்னர் குறிப்பிட்ட அங்கத்தவரின் நலனிற்காக ஒருவரை விடக் கூடுதலாக உரிமை கோருவோர் இருப்பதாகத் தீர்வாகும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. குறிப்பிட்ட உரிமை கோருவோர் அனைவரும் ஒரே முறையில் முன்வராமை மற்றும் சிலருக்கு போதியளவு எழுத்துமூலத் தகவல்களை ( சான்றிதழ்களை விரைவில் முன்வைக்காமை போன்ற) முன்வைப்பதில் கஷ்டப்படுதல் ஆகியவற்றால் அவர்களது பங்குகள் சபையின் கணக்கில் நிறுத்தி வைத்து ஆவணங்களை முன்வைத்த பங்கு உரித்துடையோருக்கு மாத்திரம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பது தற்போது பின்பற்றப்படும் வழிமுறையாகும். 2017 ஜனவரி முதல் 2017 ஒக்டோபர் மாதம் வரை மரண நலன்கள் உரித்தோடையோரால் முன்வைக்கப்படும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு, 680,749.93 ரூபா தொகை 31 உரித்துடையோருக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன், 2017.10.31ஆந் திகதியில் உரித்துடையோருக்கு செலுத்துவதற்கு உள்ள பொறுப்பின் பெறுமதி 9,311,711.60 ரூபாவாகும். (மரண நலன்கள் விண்ணப்பங்கள் 811)

திருப்பி அனுப்பப்பட்ட நலன்கள் **(Returned Benefits – Slips)** கணக்கில் 2016.12.31ஆந் திகதியில் நிலுவை 16,087,267.34 ரூபாவாகும். (1274 நலன்பெறுவோர்) இவ் அங்கத்தவர்களுக்கு உரிய நலன் தொகையினை வங்கிகளுக்கு இடையிலான கொடுப்பனவு முறைமையின் கீழ் நலன் கோரும் விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அவர்களது வங்கிக் கணக்கிற்கு அனுப்பிய போதும், அவ்விண்ணப்பதாரியின் வங்கிக் கணக்கு விபரங்களில் உள்ள தவறுகள் காரணத்தால் குறிப்பிட்ட வங்கியால் திருப்பி அனுப்பப்பட்டுள்ள பணமே இக்கணக்கில் வைக்கப்பட்டு மேற்படி தொகை எடுத்துக் காட்டப்படுகின்றது.

2017 ஜனவரி முதல் 2017 ஒக்டோபர் வரை, நலன் கள் விண்ணப்பதாரிகளுள் 34 நலன் உரித்துடையோரினால் விண்ணப்பிக்கப்பட்டுள்ள 5,026,562.89 ரூபா தொகை நலன்களாகச் செலுத்தப்பட்டுள்ளதுடன், 2017.10.31 ஆந் திகதியன்று செலுத்த வேண்டிய பொறுப்பின் பெறுமதி 11,060,704.45 ரூபாவாகும். (960 நலன்பெறுவோர்)

கோரப்படாத மணை நலன்கள் கணக்கில் 2016.12.31ஆந் திகதியில் நிலுவை 5,310,499.29 ரூபாவாகும். (1026 நலன்பெறுவோர்) வங்கிகளுக்கு இடையிலான கொடுப்பனவு முறையின் கீழ் நலன்களைக் கொடுப்பனவு செய்வதற்கு கணக்கு விபரங்கள் இல்லாத நலன் கோருவோர் 1026 பேருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட காசோலைகள், அந்நலன்களை விண்ணப்பதாரிகள் வங்கியிலிடாத காரணத்தினால் கோரப்படாத நலன்கள் கணக்கில் நிலுவையினால் காட்டப்பட்டுள்ளது.

இந்த 1026 நலன்கள் விண்ணப்பதாரிகளுள் 68 நலன்பெறுநர்களுக்கு 2017 ஜனவரி முதல் 2017 ஒக்டோபர் மாதம் வரை 259,650.53 ரூபா தொகை மீண்டும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன், 2017.10.31 ஆந் திகதியன்று செலுத்த வேண்டிய பொறுப்பின் பெறுமதி 5,050,848.76 ரூபாவாகும். (958 நலன்பெறுவோர்)

2015.12.09ஆந் திகதியில் நடைபெற்ற முகாமைத்துவக் கமிட்டிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2001 முதல் 2005 வரை இப்பேரேடுகளில் காணப்படும் கணக்கு நிலுவைகளுக்கு உரிய அங்கத்தவர்களின் அங்கத்துவர்க் கணக்கினைச் செயற்படுத்தி அவ்வக் கணக்குகளை இற்றைப்படுத்துவதற்கு செயற்பட்டு அப்பெறுமதிகளை பேரேட்டில் உள்ள அங்கத்தவர் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2.5. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

(i) கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் சபைக்கு உரியதாயினும், ஊழியர்களுக்கு சபை ஆரம்பம் முதலே விடுமுறைகளை தாபனக் கோவை மற்றும் கடைகள் மற்றும் அலுவலகச் சட்டம் ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டே சபை வழங்கியது. இது தொடர்பில் இலங்கை தொழிலதருநர்கள் சங்கத்தின் பரிந்துரை எம்மால் பெறப்பட்டதுடன், அவ்வாறு அனுபவித்த சலுகைகளைக் குறைப்பதன் மூலம் ஊழியர்களில் தொழிற்துறை அமைதி சீர்குலையும் என்பதே அவர்களின் பரிந்துரையாக இருந்தது. அவர்களது பரிந்துரையின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(ii) மேலதிக நேரக் கொடுப்பனவு கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்ட விதிகளின் பிரகாரமே மேற்கொள்ளப்படுகின்றது.

(iii) சபை ஊழியர்களின் மேலதி நேரத்திற்கான கொடுப்பனவு கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்ட விதிகளின் பிரகாரம் மற்றும் தொழிற்றுறையில் காணப்படும் நடைமுறையின் படியே மேற்கொள்ளப்படுகின்றது.



# 3 நிதி மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

2.3.1 (இ) (ை)இன் கீழ் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதிச் சொத்துக்களின் நிலையான பெறுமதி இழப்பு () ஏற்பட்டுள்ளதாக முடிவெடுத்தல் நடைபெறாமையால் 2016ஆம் அண்டில் கணக்குகளில் குறிப்பிட்டுள்ள நிதிசர் விளைவுகள் சரியானவை ஆகும்.

## 3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

(அ) 2.3.1 (இ) (ை)இன் கீழ் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நீண்ட கால முதலீடுகளில் பெறுமதி இழப்புப் பெறுமானம் 282,738 ரூபா மாத்திரம் என்பதால், மற்றும் 9% அளவிலான வட்டி மற்றும் பங்கிலாப சரிப்படுத்தல்களின் பின்னர் திரவத்தன்மை திரள்வுகளில் (Revenue Reserve) முன்கொணரப்பட்ட பெறுமதி 3,449,498,000 ரூபா என்பதாலு 2016ஆம் ஆண்டிற்கான 9மூ வட்டி மற்றும் பங்கிலாபங்களை வெளிப்படுத்தல் சபையின் நிதிசார் செயலாற்றுகைக் குறித்து பாதகமான நிலைமை ஏற்படமாட்டாது.

(ஆ) தங்கள் அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது.

(இ) தங்கள் அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது.

(ஈ) தங்கள் அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. எனினும், நிதியத்தின் வளர்ச்சி அதிகரிக்கும் வேகத்தில், சபையின் வருமானம் வளர்ச்சியடைய வேண்டும் என்ற முடிவிற்கு எழ முடியாது. ஏனெனின், நிதியத்தின் வளர்ச்சி ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகளின் விளைச்சலின் காரணமாகத் தீர்மானிக்கப்படுவதுடன், ஒரு வருடத்தினுள் வளர்ச்சி பெறும் அங்கத்தவர் நிதியத்தின் பங்கொன்றினால் மாத்திரம் வருமானத்தில் குறிப்பிடத்தக்களவு பாதிப்பினை ஏற்படுத்த முடியாது.

## 3.3 நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

தங்கள் அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. உரிய வழக்கு நடவடிக்கைகளை விரைவாக முடிவுறுத்துவதற்கு தேவையான எல்லா நடவடிக்கைகளும் சபையின் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

# 4 செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றுகை

(அ) இலங்கை ஆளணிச் சந்தையில் 62% அளவு ஒழுங்கமைப்பற்ற துறையினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், அவர்களில் அநேகமானோர் குடும்ப, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகங்களை மேற்கொள்கின்றனர். மேலும், தேசிய அருங்கலைகள் சபை முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வட்டியற்ற சிறிய கைத்தொழில்களுக்கு கடன் வழங்குவதற்கு தெரிவு செய்யப்படும் பிரிவினரை ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவினாலும் அறிவுறுத்துவதற்கும் அதன் மூலம் உள்வாங்குவதற்கு ஏற்கனவே முறையான வழிமுறையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொழில்தருநர் ஒருவரின் கீழ் அல்லாத இப்பிரிவினர் பங்களிப்புத் தொகையைக் கொடுப்பனவு செய்ய வேண்டியது அவர்களாலேயே என்பதால் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு குறைந்த ஆர்வப்போக்கினைக் காட்டுகின்றனர்.

(i) ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையுடன் ஒப்பிடுகையில் கூடிய நலன்களைச் செலுத்துவதற்கு பிரதான காரணம், அவர்களால் 94% அளவிலான நிலையான வருமான முதலீகளிலிருந்து (Fixed Income Secrurities) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையை விட வருடாந்தம் வருவாயினைப் பெறுவதால் ஆகும்.

ஊழியர் சேமலாப நிதியம் விசேட சந்தர்ப்பங்களிலும், பெண்கள் 50 வயதைப் பூர்த்தி செய்ததும் மற்றும் ஆண்கள் 55 வயதைப் பூர்த்தி செய்ததும் நலன்கசை் செலுத்துகின்றது. அதன் படி ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதி நீண்டகால முதலீடுகளில் ஈடுபடுத்தலாம். எனினும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அங்கத்தவர்களுக்கு ஐவைந்து வருடங்களில் நலன்களைப் பெற்றுக் கொள்ளும் இயலுமை உள்ளதால், முதலீட்டுத் தீர்மானத்தை எடுக்கும் போது குறுங்கால திரவத்தன்மை குறித்து மிகவும் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது. தாங்கள் அறிந்துள்ள படி உள்நாட்டு நிதிச் சந்தையில் நீண்ட கால முதலீட்டுக்கு கூடிய வட்டி வீதம் கொடுக்கப்படுவதுடன், மத்தியகால முதலீடுகளுக்கு வட்டி வீதத்திற்கு ஒப்பாக கீழ் பெறுமானத்தை எடுக்கும். குறிப்பிட்ட நீண்ட கால முதலீடுகளால் கிடைக்கும் சாதகமான வட்டி வீதங்களின் தாக்கம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கிடைத்துள்ளது.

மேலும், 2015 ஆரம்பமாகும் வரை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி முறிகளை கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பம் இல்லாதிருந்ததுடன், திறைசேரி முறிகளை இரண்டாந்தரச் சந்தையில் விற்பனை செய்யவும் இது வரையில் மேற்கொள்வதற்கான அனுமதி இல்லை. குறிப்பிட்ட விடயங்கள் காரணமாக நிதிச் சந்தையில் காணப்படும் சந்தர்ப்பங்களினால் அதிகபட்ச பயனைப் பெறும் ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், தற்போது சபையினால் நிதிய அங்கத்தவர்களுக்கு 10 நலன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இதற்காக வருடாந்தம் 600 மில்லியன் ரூபா அளவிலான ஆகுசெலவினையும் மேற்கொள்கின்றது. இவ்வாறான நலன் திட்டங்கள் ஊழியர் செமலாப நிதியத்திற்கு இல்லாமையால் அது நேரடியாக அவர்களது இலாபத்திற்கு சாதகமாகச் செல்வாக்குச் செலுத்தும்.

மேற் குறிப்பிட்டுள்ள 2 அடிப்படை விடயங்களினால், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு ஒப்பாக ஊழியர் சேமலாப நிதியம் 2016ஆம் ஆண்டில் 10.5%ஆன நலனைப் பெற்றுக் கொடுத்துள்ளது. கூடிய விரைவில் முதலீடுகளுக்கு அதிகபட்ச நலனைப் பெற்று அங்கத்தவர்களுக்கு உயர்ந்த நலனைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(ii) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபங்களை பங்கிலாபங்களை அறிவிப்பதற்காகப் பயன்படுத்தும் தடை இல்லை. அதன்படி, கடந்த காலம் முதல் அங்கத்தவர்களுக்கு அதிகபட்ச நலனைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் நிறுத்த வைத்த இலாபங்கள் பங்கிலாபங்களாகப் பகிர்நதளித்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

(iii) இந்த அவதானிப்புடன் இணங்க முடியாது. பங்கிலாபம் சமப்படுத்தும் ஒதுக்கமொன்றைப் பேணுவதற்கான ஒரே நோக்கம் நிறுவனத்தின் இலாபம் குறைவடைந்த காலப்பகுதியில் செலுத்தப்படும் பங்கிலாப வீதத்தினை சிறந்த மட்டத்தில் பேணுவதற்கு நிறுவனத்தின் ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு தடைகள் ஏற்படாதவாறு நிதியத்தினை ஏற்படுத்திக் கொள்வதற்காகும். அதன் படி தேவையான சந்தர்ப்பங்களின் போது அங்கத்தவர்களுக்கு நியாயமான பங்கிலாப விகிதத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறே பங்கிலாபத்தினை அறிவிப்பதற்கு நிறுத்தவைத்த பங்கிலாபங்கள் அல்லது பங்கிலாபம் சமப்படுத்தும் ஒதுக்கத்தைப் பயன்படுத்துவதற்கு 1980 இல 46ஐக் கொண்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தினால் எவ்விதத் தடையும் இல்லை என்பதையும் அறிவிக்க விரும்புகின்றேன்.

அவ்வாறே கடந்த 02 வருடங்களில் அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி மற்றும் பங்கிலாபங்களுக்கு ஒப்பாக பங்கிலாபம் சமப்படுத்தும் ஒதுக்கம் மற்றும் நிறுத்தி வைத்த இலாபங்களைப் பயன்படுத்தி அளவுகளின் வீதங்கள் கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | செலுத்தப்பட்ட பங்கிலாபம் மற்றும் வட்டி (மி.ரூபா) | வட்டி மற்றும் பங்கிலாபத்திற்கு நிதி வழங்குதல் | | வீதம் (ஈட்டப்பட்ட இலாபம் மூலம்) | வீதம் (ஒதுக்கும் மூலம் |
|---|---|---|---|---|---|
| | | ஆண்டில் ஈட்ட-ப்பட்ட இலா-பங்கள் மூலம் (மி.ரூபா) | ஒதுக்கம் மூலம் (மி.ரூபா) | | |
| 2013 | 15,841 | 15,498 | 343 | 9.783 | 0.217 |
| 2014 | 17,624 | 17,109 | 515 | 9.708 | 0.292 |

இதன் படி செலுத்தப்பட்ட பங்கிலாபங்களுக்கு ஒப்பாக பங்கிலாபம் சமப்படுத்தும் ஒதுக்கத்தின் மூலம் கடந்த இரு ஆண்டுகளிலும் மிகவும் குறைந்த வீதமே பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதால் தாங்கள் விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு பங்கிலாபக் கொடுப்பனவிற்கு எவ்வித பாதகமான தாக்கத்தினையும் ஏற்படுத்த மாட்டது என்பதை அறிய முடிகின்றது.

அதன் பிரகாரம், மீளாய்வு ஆண்டின் போது பங்கிலாபத்தினைச் செலுத்துவதற்கு, அதற்காகவே கடந்த வருடங்களில் ஈட்டப்பட்ட இலாபத்தினால் ஏற்படுத்தப்பட்ட பங்கிலாபம் சமப்படுத்தும் ஒதுக்கத்தனால் 0.2% அளவிலான பற்றாகுறையான (Immaterial) அளவினைப் பெற்றுக் கொள்ளுதல் அங்கத்திவர்களின் ஈட்டல்களுக்கு எவ்வித தாக்கத்தினையும் ஏற்படுத்தாது.

(௬) செயற்படு அங்கத்தவர்களுக்கு சபையினால் கொடுக்கப்படும் நலன்புரி நலன்கள் செயற்படு செலவுடன் சரிப்படுத்தல் பொருத்தமல்ல. இப்பெறுமதி அங்கத்தவர்களுக்கு கொடுக்கப்படும் நலனாகும்.

(௭) 2016 ஆம் அண்டில் ஐஊவுயு நிறுவனத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் தற்காலத்திற்குப் பொருந்தும் வகையில் கணினித் தொகுதியொன்று பெற்றுக் கொடுத்தல் சம்பந்தமாக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றிற்கு கைச்சாத்திட உள்ளதுடன், அதன் படி கணினித் தொகுதியை மீண்டும் நிர்மாணிக்கும் (Re-engineering) செயன்முறையின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 10 வருடங்கள் பழமையான தற்போது காணப்படும் கணினித் தொகுதி எவ்வகையில் மாற்றப்படல வேண்டும் என ICTA நிறுவனம் மேற்கொள்ளும் வர்த்தக முறைமைகளை விருத்தி செய்யும் ஆய்வின் (Business Process Improvement Study) பின்னர் மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. அதனால், கணினித் தொகுதியின் மீள் கட்டமைப்பு மற்றும் வீரத்தி என்பன 2016ஆம் ஆண்டில் மேற்கொள்ள முடியவில்லை.

எனினும், 2017/2018ஆம் வருடங்களில் நவீன தொழில்நுட்பத்தற்குப் பொருந்தும் வகையில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் எல்லா தரப்பினருக்கும் (Stake Holders) வசதியளிக்கும் விதத்தில் அரசாங்கத்தின் முழுமையான அனுசரணையுடன் கணினித் தொகுதியொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இடர்களைத் தவிர்க்கும் திட்டம் 2016ஆம் ஆண்டினுள் செயற்படுத்தவதற்கு முடியாதெனினும், 2018ஆம் ஆண்டில் நவீன தொழில்நுட்பத்திற்குப் பொருந்தும் வகையில் அவ்விடர்களைத் தவிர்க்கும் திட்டங்களைச் செயற்படுத்தவதற்கு தேவையான நடவடிக்கை 2017இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## 4.2 நிதி முதலீடு

2015.05.20ஆந் திகதி அப்போதிருந்த நிதிப் பிரதி அமைச்சர் கௌரவ ஹர்ஷ டி சில்வா அவர்கள் சபைக்கு வருகைத் தந்த சந்தர்ப்பத்தில் 200 பில்லியன் ரூபாவையும் விடக் கூடுதலான முதலீடுகளைக் கொண்ட நிறுவனமான எமது சபைக்கு ஆலோசனைகளைப் பெறுவதற்காக CFA தகைமை கொண்ட அதிகாரி ஒருவர் இல்லாமை குறைபாடு ஒன்றாகும் எனவும் அதற்கு உடனேயே CFA தகைமை கொண்ட ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுரை வழங்கப்பட்டது.

அதன்படி, ஆரம்ப நடவடிக்கையாக NDB Wealth Management நிறுவனத்தின் CFA தகைமை கொண்ட ஆலோசகர் ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், அதற்கான பணிப்பாளர் சபை அனுதியும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

மாதாந்தம் 25,000/- ரூபா தொகைக்கு அவர்களது சேவையினை வழங்குவதற்கு அவர்களால் ஆலோசிக்கப்பட்டது. எனினும், ஒப்பந்தத்தின் சில விடயங்களில் இரு தரப்பினரும் இணங்க முடியாமையால் ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட முடியவில்லை.

முதலீட்டு ஆலோசகர்களின் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி பெற்றதன் பின்னர் அவர்களது சேவையினைப் பெற்றுக் கொள்ளல் 2015.07.27ஆந் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் தயாரிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் அவர்களது மாதாந்தக் கட்டணம் 75,000/- ரூபா என அவர்களே மாற்றிக் கொண்டிருப்பினும், அது பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

அரசின் பிணைகளைக் கொள்வனவு செய்தல் தொடர்பில் முதலீட்டுப் பிரிவின் அனுபவங்கள் மற்றும் ஆற்றல்களுடன் கூடிய அலுவலர்கள் உள்ளமையால் ஆலோசகர்களின் அறிவுறுத்தல்களையும் பயன்படுத்தி இக்காலத்தினுள் அரச பிணைகள் கொள்வனவு செய்யப்பட்டன.

மேலும் இரண்டாந்தரச் சந்தையில் செயற்படுதல் தொடர்பில் ஆலோசகர்களின் அனுபவம் மற்றும் அறிவு சபையின் அதிகாரிகளால் பயன்படுத்தப்பட்டன. முதலீட்டு ஆலோசகர்களுக்கு வழங்கப்பட்ட சபை குறித்து ஒரேயொரு தகவலானது முதலீடு செய்வதற்கு உள்ள பண அளவு மாத்திரம் என்பதுடன், வேறு எவ்விதத் தகவல்களும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

ஆரம்ப வியாபாரிகளால் வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் எமது சபைக்கு மாத்திரம் வழங்கப்பட்ட விசேடமான இரகசிய வட்டி வீதம் அல்ல. மேலும், முதலீட்டு ஆலோசகர்களின் அறிவுறுத்தல்களை அவ்விதமே பின்பற்றுபதற்கு நாம் கடப்பாடு கொண்டவர்கள் அல்லர் என்பதுடன், இப்பிரிவின அலுவலர்களின் அனுபவம் மற்றும் கருத்தின் படி பலதரப்பட்ட தீர்மானம எடுக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. தற்போது இரண்டாந்தரச் சந்தையிலிருந்து திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யாமையால் முதலீட்டு ஆலோசகர்களின் சேவைப் பெறப்படுவதில்லை.

(அ) (ஆ) மற்றும (ஈ)

மேற்குறிப்பிட்டுள்ள 4.2 (அ), 4.2 (ஆ) மற்றும் 4.2 (இ) கணக்காய்வு விசாரணைகளிலிருந்து சிற்சில நாட்களில் முன்வைக்கப்பட்ட ஏலவிற்பனைக்கு உரிய வட்டி வீதம் உயர்ந்தது என்பதால் மத்திய வங்கியால் மறுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் மற்றும் அதன் பின்னர் அப்பணத்தைப் பயன்படுத்தி இரண்டாந்தரச் சந்தையில் முறிகளைக் கொள்வனவு செய்கையில் நட்டம் ஏற்பட்டுது என்பது குறித்து பிரதானமாக விசாரணை செய்யப்பட்டுள்ளது. எல்லா ஏலவிற்பனையிள் போதும் மிகவும் வெற்றிகரமாக உயர்ந்த வட்டி வீதத்திற்கு முதலீடு செய்தல் நடைமுறை ரீதியில் செய்ய முடியாததுடன், சில சந்தர்ப்பங்களில் தோல்வியடைதலும் ஏற்படினும் ஒட்டுமொத்தமாக வருடத்தினுள் சாதாரண நிறையிட்ட சராசரி வருவாய் வீதத்தை (W.A.Y) விடக் கூடுதலான வீதத்திற்கு முதலீடு செய்தல் வெள்ளிகரமானதாகும். அதன் படி எம்மால் முன்வைக்கப்பட்ட ஏலவிற்பனை (W.A.Y)க்கு எலத்திலிருந்து கொள்வனவு செய்யின் அப்பணத்திற்கு கிடைக்கும் வட்டி வீதம் 11.75% ஆகும். எனினும், ஒட்மொத்தமாகப் பார்க்கையில் 12.02% வட்டி வீதத்தை நாம் தக்க வைத்திருப்பது (இணைப்பு 1)மூலம் தெளிவாகின்றது.

மேலும், 4.2 (இ) யில் குறிப்பிட்டுள்ள சந்தை வீதத்தின் படி ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகிய இரு நிறுவனங்களும் சந்தை வீதத்தை விடக் கூடுதலாக ஏலவிற்பனையினை முன்வைத்துள்ளதுடன், சில சந்தர்ப்பங்களில் ஊழியர் சேமலாப நிதியத்தை விடக் கூடுதலாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை ஏலவிற்பனை முன்வைத்து வெள்ளிபெற்ற சந்தர்ப்பஙகளும் உண்டு. ஊழியர் சேமலாப நிதியம் எம்மை விட சில சதவீதம் குறைவாக ஏலவிற்பனை முன்வைத்துள்ளமை அவர்களிடம் எம்மை விடக் கூடுதலான பணத் தொகை அச்சந்தர்ப்பத்தின் போது முதலீடு செய்வதற்கு இருந்ததால் என்பது தெளிவாகிறது. ஊழியர் சேமலாப நிதியத்தால் முன்வைக்கப்படும் ஏலவிற்பனை தொடர்பில் எமக்கு முன் அறிவு கிடையாது.

மொத்தத்தில் எமது திறைசேரி முறிகளின் முதலீடு 12.02% மட்டத்தில் பேணப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் குறை காலப்பிரிவு உள்ளது. திறைசேரி முறிகள் நீண்டகால முறிகளுக்கு ஒப்பாக குறைந்த வட்டி வீதத்திற்கு எம்மால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை சாதாரண சந்தை நிலைமை ஆகும்.

(ஈ) முதலீட்டுக் கொள்கையின் பிரகாரம் தற்போது இரண்டாந்தரச் சந்தையில் அரச பிணைகளை விற்பனை செய்வதற்கு அனுமதி இல்லை. மேலும், மூலதன இலாபத்தைப் பெறுவதற்கு சந்தையில் குறைந்த வட்டி வீதங்கள் காணப்படும் சந்தர்ப்பங்களில் எம்மிடம் உள்ள உயர்ந்த வட்டி வீதங்களைக் கொண்ட அரச பிணைகளை விற்பனை செய்தல் வேண்டும். எனினும் அவ்விற்பனையில் இருந்து கிடைக்கும் மொத்தப் பணத்தை மீண்டும் முதலீடு செய்ய வேண்டியது அப்போதிருக்கும் குறைந்த வட்டி வீததிலாகும்இ. அந்நிலைமை எதிர்காலத்தில் குறைந்த வட்டி வீதத்துடன் கூடிய அரச பிணைகள் மாத்திரம் எஞ்சுவதற்கு இடமிருப்பதால் தற்போது இரண்டாந்தரச சந்தையில் அரச பிணைகளை விற்பனை செய்வதற்கு பணிப்பாளர் சபை அனுமதி வழங்கவில்லை. நிறுவனத்தின் கொள்கையின் படி கூடுதல் வீதத்தில் முதலீடு செய்ய வேண்டியது திறைசேரி உண்டியல்களிலும் திறைசேரி முறிகளிலும் ஆகும். எவ்வாறெனினும் முதிர்ச்சியடையும் வரை நிறுத்தி வைக்காது இரண்டாந்தரச் சந்தையில் விற்பனை செய்வது குறித்து எதிர்காலத்தில் கவனத்திற் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ) எமது ஏலவிற்பளையை முன்வைப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் ஆரம்ப வியாபார பிரதிநிதி ஒருவராவதற்கு அவசியம் இல்லை. அதற்கு (direct bidding facility) வசதிகளைப் பெற்றுக் கொள்வது போதியதாகும். அவ்வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆரம்ப வியாபார பிரதிநிதி ஆகுவதும் அவசியமன்று. மேலும், ஆரம்ப வியாபார பிரதிநிதி ஒருவர் நிறைவேற்ற வேண்டிய பல பொறுப்புக்கள் உண்டு. உதாரணமாக ஏலத்தின் போது முன்வைக்கப்படும் பிணைகளை பெறுமதியில் 1/10இற்கு ஏலத்தினை முன்வைத்தல் வேண்டும். அவ்வாறான பணிகளை நிறைவேற்றுவதற்கு வேறு தரப்பினருடன் பல்வேறு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளல் வேண்டும். வேறு வெளிவாரித் தரப்பினர்களின் (Repo) பணத்தினைப் பெற்றுக் கொள்ளும் முறையினை ஏற்படுத்துதல் வேண்டும். அதற்கு சட்டரீதியான அனுமதி இல்லை. ஊழியர் சேமலாப நிதியமும் இன்னும் ஆரம்ப வியாபார பிரதிநிதி அல்ல. எனினும் direct bidding facility மாத்திரம் பெற்றுக் கொள்வதற்கு 2016.11.22ஆந் திகதி மத்திய வங்கிக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளதுடன், 2017.03.08ஆந் திகதி நினைவுட்டல் செய்யப்பட்டுள்ளது. இது வரை இது குறித்து எவ்வித பதிலும் இல்லை.

(ஊ) எமது சபை இரண்டாந்தரச் சந்தையிலிருந்து முறிகளைக் கொள்வனவு செய்யும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் பின்வருமாறு.

- I எல்லா ஆரம்ப வியாபாரிகளிடமிருந்தும் விலை கோரல்
- II கிடைத்த விலைகளை சுருக்கமாகக் கொள்ளல்
- III அவ்வாறு ஏலம் அனுப்பப்பட்ட ஆரம்ப வியாபாரிகளுக்கு நாம் எதிர்பார்க்கும் வட்டி வீத காலம் மற்றும் முதலீடு செய்வதற்கு உள்ள பணம் ஆகியவற்றை அறிவித்தல்
- IV எமது சபைக்குத் தேவையான வட்டி வீதத்திற்கு மற்றும் காலத்திற்கு உரிய முறிகளைப் பெற்றுக் கொடுக்க முடியுமான ஆரம்ப வியாபாரிகளிடமிருந்து கொள்வனவு செய்தல

ஆரம்ப சந்தையில் உள்ள எல்லா ஆரம்ப வியாபாரிகளிடமிருந்தும் ஏலத்தொகை கோரி குயஓ அனுப்பப்படும். எனினும் எமது குயஓஇற்கு பதில் கொடுப்பது மட்டப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான ஆரம்ப வியாபாரிகளே. மேலும், பதில் கூறும் அம்மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கைக்கு எமது கொள்வனவு செய்வதற்கான வட்டி வீதம் மற்றும் காலத்தினையும் அறிவிப்பினும் அத்தேவைகளை நிறைவேற்றக்கூடிய வியாபாரிகளிடமிருந்து மாத்திரம் கொள்வனவு செய்யப்படும். நாம் எல்லா ஆரம்ப வியாபாரிகளிடமிருந்தும் விலைமனு பொரியபோதும் அதற்கு பதிலளித்தல் மற்றும் கொள்வனவு செய்தல் ஆரம்ப வியாபரிகளின் ஆற்றல் மீது தங்கியுள்ளன.

ஆரம்ப வியாபாரிகள் இருவர் மாத்திரம் கூடிய வட்டி வீதங்களை பர சந்தர்ப்பங்களில் முன்வைப்பதாக 2016.06.20ஆந் திகதி கொண்ட பணிப்பாளர் சபை பத்திரம் மூலம் பணப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், சபைக்கு Treasury Bond கொள்வனவு செய்ய முடிவது உயர்ந்த வட்டி வீதத்தை முன்வைக்கும் தரப்பினரிடமிருந்து ஆகும்.

(எ) முதலீடு செய்வதற்கு நேரிய பணத் தொகை 2016.09.01ஆந் திகதியில் முதிர்ச்சியடைந்த திறைசேரி முறிகள் மற்றும் கூப்பன் வட்டியாகுவதுடன், 2016.09.12ஆந் திகதி பொதுத் திறைசேரியிலிருந்து தலைவருக்கு கிடைத்த கட்டளையின் பிரகாரம் இம்முதலீடு மேற்கொள்ளப்பட்டதுடன், இம்முதலீடு குறித்து முன் ஆண்வொன்றினை செய்வதற்கான சந்தர்ப்பம் இருக்கவில்லை.

## 4.3 கருத்து முரண்பாட்டினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்களங

(அ) சபையின் ஊழியர்களின் அங்கத்துவத்தினால் எழுப்பப்பட்ட விளையாட்டுக் கழகத்திற்காக வருடாந்த 10மூ வட்டி அடிப்படையில் 3,000,000 /- கடன் தொகை பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் வழங்கப்பட்டுள்ளதுடன், உரிய தவணைக்கட்டணம் உரிய விதத்தில் சபைக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

சபையின் விளையாட்டுக் கழகத்தினால் ஊழியர்களுக்கு நாளாந்தம் தேநீர் வழங்குவதற்காக மற்றும் சபையின் அலுவலகங்களைச் சுத்தஞ் செய்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளில் இருந்து அவரக்ளுக்கு வழங்கப்பட்டுள்ள மேற்படி கடன் தொகையின் தவணைக்கட்டணம் குறைக்கப்படும்.

(ஆ) 2006ஆம் ஆண்டில் இலங்கை வங்கியால் எமக்கு வழங்கப்படும் சேவைகளுக்காக எமது சபையால் பெற்றுக் கொடுக்கப்படும் வசதிகள் வேலை செய்தல் வேண்டும் என்பதாக முன்மொழியப்பட்டது. இது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று 2006 ஏப்பிரல் மாதம் 28ஆந் திகதி நிதி மற்றும் நிதித் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பீ. ஜயசுந்தர அவர்களின் தலைமையில் நிதி அமைச்சில் அப்போதிருந்த எமது சபையின் தலைவர் திரு டப்ளியூ. கருணாஜீவ அவர்களுடன் நடைபெற்றதுடன், அது தொடர்பில் தலைவரால் விடயங்களைத் தொளிவுபடுத்தி கடிதமொன்று 2006.05.05ஆந் திகதி இலங்கை வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதன் பின்னர் இரு தரப்பினரும் விடயங்களைக் கலந்துரையாடியதுடன், 2006.06.27ஆந் திகதி இலங்கை வங்கியால் தமது சேவைகளை மற்றும் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அப்போது பேணப்பட்டிருந்த வைப்புப் பணமான 10 மில்லியன் ரூபாவை, 500 மிலியன் ரூபா வரை அதிகரிக்குமாறு அல்லது நடைமுறையிலுள்ள மாதாந்தக் கட்டணமான ஒரு இலட்சம் ரூபாவை 04 இலட்சம் ரூபா வரை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. அதன் படி 500 மில்லியன் ரூபா வரை வைப்பின அதிகரிப்பதற்கான சபையின் இணக்கத்தை 2006 ஆகஸ்ட் 01ஆந் திகதி கொண்ட கடிதம் மூலம் தலைவரால் இலங்கை வங்கிக்கு அறிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம், எமது சபையினால் அப்போது பேணப்பட்டு வந்த 10 மில்லியன் ரூபா வைப்பு 500 மில்லியன் ரூபா வரை அதிகரிப்பதற்கு வைப்புச் செய்ய வேண்டியிருந்த 490 மில்லியன் ரூபா தொகை (REPO) மீள்கொள்வனவு செய்தல் வைப்பிற்கு மாற்றுவதற்காக 2006.08.17ஆந் திகதி தலைவரிடமிருந்து அனுதி பெறப்பட்டது.

இந்த 500 மில்லியன் ரூபா பணம் இலங்கை வங்கியில் வைப்பாகப் பேணப்படுவது சாதாரண வெறும் முதலீடாக அன்று. அது வங்கியால் எமது சபையின் கணக்கிற்கு காசோலைகளைச் சேர்த்தல் அடுத்த நாள் தேறுவதற்கான சேவை மற்றும் வழங்கப்படும் ஏனைய வசதிகளுக்காக வங்கியின் வேண்டுதலின் பேரில் சபை மேற்கொள்ளும் வைப்பாகும். அவ்வாறே 500 மில்லியன் ரூபா பணம் வங்கியால் அவ்வக் காலப்பிரிவிற்கு பெற்றுக் கொடுக்கும் வட்டி வீதங்களின் படி இணங்கப்பட்ட விதத்தில் மீண்டும் மீண்டும் வருடாந்தம் முதலீடு செய்யப்படும். அம்முதலீடுகளுக்கு வருடாந்தம் தலைவர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி வைப்புக்களில் முதலீடு செய்யாது வங்கியால் மேற்கொள்ளப்படும் ஏனைய ஆலோசனையின் படி 04 இலட்சம் ரூபா வரை மாதாந்தம் செலுத்தும் அளவினைக் கூட்னால் ஒவ்வொரு மாதமும் 03 இலட்சம் ரூபா வீதம் வருடாந்தம் மேலதிகமாக 3.6 மில்லியன் ரூபா செலவொன்றினை சபைக்கு மேற்கொள்ள நேரிடும். முதலீட்டு மதிப்பீட்டின் படி அது சபைக்கு பாதகமாகும்.

வங்கியால் பெற்றுக் கொடுக்கும் சேவைகளுக்கு மேலதிகமாக கீழ் குறிப்பிட்டுள்ள சாதகமான நிலைமைகள் வங்கியுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் போது எமது சபைக்கு கிடைக்கும்.

1. காசோலைகளுக்கு அடுத்த நாள் தேறக்கூடிய பணத்தை வழங்குவதால் ஒரு நாள் முன்னர் முதலீடு செய்வதற்கான வாய்ப்பு கிடைப்பதால் மேலதிக வட்டி வருமானத்தினைப் பெற்றுக் ெகள்வதற்கு முடியுமாக இருத்தல்.
2. மேற் குறிப்பிட்டுள்ள 500 மில்லியன் ரூபா முதலீட்டினால் சபை இது வரையில் பெரும் வட்டி வருமானத்தை ஈட்டியுள்ளது.
3. இலங்கை வங்கியால் பெற்றுக் கொடுக்கும் சேவையொன்றாக காசோலைகளை எடுத்தச் செல்வதற்கு எமது சபையின் வளங்களை (ஊழியர் ஒருவர் மற்றும் வாகன வசதிகள்) ஈடுபடுத்தின் அதன் குறிப்பிட்ட ஒரு பணிக்கான ஆகுசெலவு மீதமாதல்

## 4.4 இனங்காணப்பட்ட இழப்புக்க

(அ) அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் 1994இல் 15 மில்லியன் ரூபா பெறுமதியான தொகுதிக் கடன் எல்கடுவ நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டது. அந்த 15 மில்லியன் ரூபா தெகுதிக்கடனுக்கு கிடைக்க வேண்டிய வட்டிப்பணம் 12,292,556.16 ரூபாவாகும்.

இந்நிலுவைத் தொகை தொடர்பில் ஒரிய தப்பினருடன் கலந்துரையாடப்பட்டதுடன், 5 இலட்சம் ரூபா வீதம் மாதாந்தம் செலுத்தி தீர்க்கப்படுவதாக வாக்களிக்கப்பட்டது. அதன் படி முதல் கட்டணம் 2011 ஜனவரி மாதம் செலுத்தப்பட்டதுடன், 2011 நவம்பர் வரை 11 தவணைக் கட்டணங்களின் நிலுவை காணப்படுகின்றது. அவ்வாறே 2014.06.16ஆந் திகதிய கடிதம் மூலம் பொதுத் திறைசேரிக்கு அனுப்பி உள்ளதுடன், 2015.07.07 ஆந் திகதி எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தால் மீண்டும் அவர்களது நிதி நெருக்கடி மற்றும் அது தொடர்பில் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளருடன் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்கடுவ நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள இவ்வட்டி வருமானம் தொடர்பில் 2015.11.17ஆந் திகதி கொண்ட கடிதம் மூலம் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு சபையினால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரதி ஒன்று பொதுத் திறைசேரியின் அரச வர்த்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. எமது கடிதத்திற்கு பதிலாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தின் தலைவர்ஃ முகாமைத்துவப் பணிப்பாளருக்கு இப்பணத்தினைச் செலுத்தும் விதம் குறித்து விபரங்கோரி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், எமது சபைக்கு அதன் பிரதியொன்று அனுப்பப்பட்டுள்ளது. நிறுவனத்தின் நிதி நெருக்கடி இது வரையிலும் காணப்படுவதாக 2016.08.10ஆந் திகதி கொண்ட கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக வெணிக் நிறுவனத்திடமிருந்தும் தொகுதிக்கடன்களில் மேற்கொண்டுள்ள முதலீடுகளிலிருந்து பணம் பெற வேண்டியுள்ளது. அதன் விபரம் 4.5 (உ) பதிலின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சபையில் பணி புரியும் ஊழியர்களின் நலன்புரி நடவடிக்கையாக பேணப்படும் அனுராதபுரத்தில் அமைந்துள்ள விடுமுறை விடுதியை இலாபத்தை ஈட்டும் நோக்குடன் நடாத்திச் செல்லும் உபாயமிகு வர்த்தக அலகொன்று (Strategies Business Unit) அல்ல. விடுமுறை விடுதியில் தங்கும் சபை உறுப்பினர்கள் அதன் செயற்படு ஆகுசெலவினை (Operational Cost) ஈடுசெய்வதற்கு மாத்திரம் சாதாரண தொகையொன்று அறவிடப்படும். கணக்குகளில் காட்டப்படும் தேறிய இலாபத்திற்கு ஏதுவாக அமைவது வருடாந்தம் மேற்கொள்ளும் தேய்மானம் மற்றும் அதன் சேவைக்காக ஈடுபடுத்தப்படும் ஊழியர்களின் சம்பளச் செலவும் ஆகும்.

(இ) 2016ஆம் ஆண்டில் சந்தையில் காணப்பட்ட பாதகமான நிலைமை மீது இவ்வலகுடைமையின் விலைகள் வீழ்ச்சியடைந்தாலும், 2017.06.30ஆந் திகதியாகையில் அவ்வலகுடைமையின் பெறுமதி 2016.12.31ஆந் திகதியுடன் ஒப்பிடுகையில் 34,063,575 ரூபாவினால் அதிபரிப்பினைக் காட்டியுள்ளது.

(ஈ) கம்பனிகளுக்கு கலைப்பின் கீழ் இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையில், இம்முதலீடுகளை மீட்பதற்கான நிச்சயத்தன்மையினை உறுதிப்படுத்த முடியாது.

(உ) வெணிக் இனகோப்பரேஷன் நிறுவனத்தின் வாக்குறுதிச் சீட்டுக்களில் முதலீடு செய்த பெறுமானம் 12,174,382.19 ரூபாவாகும். அது கீழ்வருமாறு அமைந்துள்ளது.

- 15 மிலிலயன் ரூபா பெறுமதியான தொகுதிக்கடனுக்காக வழங்கப்பட்ட வாக்குறுதிச் சீட்டுக்களின் மீதியை செலுத்தாத தொகை — ரූ. 11,262,382.19
- 1997.12.10ஆந் திகதி வழங்கப்பட்ட தொகுதிக்கடனுக்கான 2001ஆம் ஆண்டிற்கான வட்டிக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிச் சீட்டுக்களின் பெறுமதி — ரූ. 912,000.00

வாக்குறுதிச் சீட்டாக மாறிய மொத்தப் பெறுமதி — ரූ. 12,174,382.19

**11,262,382.19 ரூபா.**

2002 ஜனவரி 01ஆந் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த 15 மில்லியன் ரூபாவிற்குரிய வாக்குறுதிச் சீட்டுக்களுக்கு வட்டி வீதம் 15.50மு. மாதாந்தம் வாக்குறுதிச் சீட்டுக்களுக்கு உரிய வட்டியையும் ஆரம்ப தொகையையும் பகுதி பகுதியாகச் செலுத்தவதற்கு தீர்வாகியதுடன், அவ்வட்டி மற்றும் ஆரம்பப் பணம் செலுத்துதல் 2002 யூலை மாதம் வரை மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் எவ்விதக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்படாததுடன், மீதி செலுத்த வேண்டிய வாக்குறுதிச் சீட்டுக்களின் பெறுமதி 11,262,382.19 ரூபாவாகும்.

**912,000.00 ரூபா**

வெணிக் இன்கோப்பரேஷன் நிறுவனத்தில் எம்மால் தொகுதிக்கடன்களில் முதுலீடு செய்த ஆரம்ப தொகை 7,450,259.00 ரூபாவாகும். (விலை மதிப்பு ரூபா. 6இ080இ000.00) வட்டி வீதம் 15.75 மூஆகும். முதலீட்டுத் திகதி 1997.12.10ஆம் திகதியாகும். அதற்கான 2000ஆம் ஆண்டு வரை வட்டி செலுத்தப்பட்டது. 2001ஆம் ஆண்டிற்குரிய வட்டித் தொகையான 912,000.00 ரூபா செலுத்தப்படாததுடன், அது வாக்குறுதிச் சீட்டாக மாற்றப்பட்டது. எனினும், அவ்வாக்குறுதிச் சீட்டும் இன்னும் செலுத்தப்படவில்லை.

வெணிக் இன்கோப்பரேஷன் நிறுவனத்தில் தொகுதிக்கடன்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள பெறுமதி 7,450,259.00 ரூபா

1997ஆம் ஆண்டில் முதலீடு செய்துள்ளதுடன், மீள்கட்டமைப்பு செய்யப்பட்டதன் பின்னர் 2007 முதல் 2011 வரை செலுத்த வேண்டியதெனினும் அதுவும் செலுத்தப்படவில்லை.

இது வரையில் வெணிக் இன்கோப்பரேஷன் நிறுவனத்திற்கு எதிராக வழக்கொன்று இருப்பதுடன் எதிர்வரும் வழக்குத் திகதி 2018.01.18ஆகும்.

(உ) சபையின் 2016.12.31ஆந் திகதியில் காணப்பட்ட சாதாரண பங்குகள் முதலீட்டின் நியாயமான பெறுமதிக்கு ஒப்பாக 2017.03.31ஆந் திகதியில் அம்முதலீடுகளின் நியாயமான பெறுமதி 465,748,000 ரூபாவால் வீழ்ச்சியடைந்த போதும் அப்பங்குகள் ஆமதலீடுகளின் சாதாரண பெறுமதி 2016.12.31ஆந் திகதியிற்கு ஒப்பாக 2017.06.30ஆந் திகதியில் 920,376,000 ரூபாவால் அதிகரித்து இருந்தது.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பொது முகாமையாளர் பதவியில் வெற்றிடம் நிரப்புவதற்காகப் பல சந்தர்ப்பங்களிலும் வெளிவார் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர் முகப் பரீட்சைகள் நடாத்தப்படினும், பொருத்தமான விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்ய முடியவில்லை. அதனால் அவ்வெற்றிடத்தினை நிரப்புவதற்கு வேறு உபாயமொன்றினைப் பின்பற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



## 4.6 செயற்படு நடவடிக்கைகள்

கீழ்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016.02.10ஆந் திகதி நிறுவப்பட்ட விசேட அலகினால் 2017 யூலை மாதம் முதல் நவம்பர் மாதம் வரை 305,497,327 ரூபா தொகை கணக்குகளில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், 2017.11.30ஆந் திகதியில் நிலுவை 1,459,498,285 ரூபாவாகும்.

(ஆ) இச்சபையின் தலைவரால் தொழில் ஆணையாளரிடம் விடுக்கப்பட்ட கோரிகடகையின் படி சபையால் தற்காலிக இலக்கம் பெற்றுக் கொடுத்துள்ள தொழில்தருநர்களுக்கு தொழில் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதிய இலக்கம் உள்ளடங்கிய இறுவட்டு ஒன்று எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. அதன்படி தற்காலிக இலக்கத்தின் கீழ் உள்ள பங்களிப்புத் தொகை நிலையான ஊழியர் சேமலாப நிதிய இலக்கததிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

சேமலாப நிதிய இலக்கத்தைப் பெற்றுக கொள்ளாத எனினும் தற்காலிக இலக்கத்தின் கீழ் பங்களிப்புத் தொகையினைச் செலுத்தும் தொழில்தருநர்களின் கணக்குகளில் உள்ள பணம் உரிய அங்கத்தவர்களின் கணக்குகளில் வரவிலிடுதல் மேற்கொள்ளப்படும்.

# 5 கணக்களிப்புப் பொறுப்பு மற்றும் நல்லாளுகை

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

அ) மற்றும் (ஆ)

சபையின் முகாமைத்துவத்தின் தேவையின் பேரில கீழ் குறிப்பிட்டுள்ள முன் கணக்காய்வு ஒன்று 2016ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

(i) நலன் விண்ணப்பங்களைப் பரிசீலித்தல்

| | பரிசீலித்து கொடுப்பனவிற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சாதாரண நலன்கள் விண்ணப்பங்களைப் பரிசீலித்தல் | 57,544 |
| மரண நலன்கள் விண்ணப்பங்களைப் பரசீலித்தல் | 1,114 |
| கண்பளிங்கு வில்லைப் பதித்தல் | 541 |
| இதய சத்திரசிகச்சை | 817 |
| நிரந்தர அங்கவீனத்திற்கு ஆளாதல் | 73 |
| சிரமசுவ | 1,540 |
| சிறுநீரக மாற்றுச் சிகிச்சை | 23 |
| உயர் தரம் மற்றும் ஆண்டு 5 புலமைப்பரிசில் | 218 |
| பணிக்குழாத்தினர் வைத்திய செலவு | 12,829 |
| **மொத்தம்** | **104,699** |

(ii) பணிக்குழாத்தினர் சேவையினை முடிவுறுத்தும் போது செலுத்த வேண்டிய மற்றும் அறவிட வேண்டிய பணம் குறித்து பரிசோதனை தொடர்பில் முன்வைக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை 26 ஆகும்.

(iii) மாதாந்த பணிக்குழாத்தினர் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வீதத்தைப் பரசீலித்தல்.

(iv) வீடமைப்புக் கடன் மீளளிப்புக்காக பணத்தை விடுவித்தல்.
(v) பணிக்குழாத்தினரின் வருடாந்த மிகையூதியக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் -2016
(vi) மீதமுள்ள வருடாந்த விடுமுறைகளுக்கு கொடுப்பனவு செய்வதற்கு பணிக்குழாத்தினரின் விடுமுறைகளைப் பரிசீலித்தல் - 2015

மேற்படி முன் கணக்காய்வுகளுக்கு மேலதிகமாக கீழ் குறிப்பிட்டுள்ள பின் கணக்காய்வு அறிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

1. பங்களிப்பு மற்றும் மிகைஅறவீட்டுப் பணம் குறித்து பரிசீலனை -2015
2. முதலீடுகள் மீதான நலன்கள்
3. நவம் மாவத்தை வாகனத் தரிப்பிட வருமானம் குறித்து கணக்காய்வு
4. கண்டி பிரதேச அலுவலகம் குறித்து கணக்காய்வு
5. சுயதொழில் பிரிவில் தேறாத பணக் கட்டளைகள் குறித்து பரிசீலனை
6. வருடாந்த பொருட்பதிவேட்டுப் பரிசோதனை 2015
7. முன் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் கட்டுப்பாடுகள் மற்றும் வேறு விடயங்கள் தொடர்பில் ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் வெ்வவேறாக அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, வழபத் தலைவரால் விதிக்கப்பட்ட எல்லா உள்ளகக் கணக்காய்வு அறிக்கைககளும் (முதலீடுகள் கொள்வனவுகள் உட்பட) கணக்காய்வு தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(இ) 2016ஆம் ஆண்டில் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு தகைமைப் பெற்ற அனுபவமிக்க பதவியணியினர் 03உடன் மட்டுப்படுத்தப்பட்டதுடன், அரச வர்த்தகங்கள் தொர்பில் பாராளுமன்றக் கமிட்டி (ஊழூீநு) யால் பெற்றுக் கொடுத்த பரிந்துரைகளின் பிரகாரம் 2017 யூன் மாதமாகையில் தகுதியுள்ள 04 உதவி உள்ளகக் கணக்கய்வாளர்கள் உள்வாங்கப்பட்டனர்.

இதன் படி, உள்வாங்கப்பட்ட புதிய அதிகாரினள் இருவர் பிரதிப் பொது முகாமையாளரின் (உள்ளகக் கணக்காய்வு) நேரடி கண்காணிப்பின் கீழ் முழுநேர முதலீடுகள் மற்றும் நிதி நடவடிக்கைகள் கணக்காய்வில் ஈடுபடுத்தப்பட்டதுடன், மற்ற இருவரும் கொள்வனவு மற்றும் ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் கணக்காய்வு நடவடிக்கைகளை ஆரம்பித்து உள்ளனர். மேலும், உதவிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) புதிய பதவிகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதுடன், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் அலுவலர்களுக்கு உரிய பதவி உயர்வுகளையும் பெற்றுக் கொடுத்து முன் கணக்காய்வு மற்றும் முதலீடுகள் உட்பட பின் கணக்காய்வு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை வலுப்படுத்துவதற்கு தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

## 5.2 வரவு செலவுப் பேரேட்டுக் கட்டுப்பாடு

(அ) மற்றும் (ஆ)

இடர் நேர்வற்ற அரச பிணைகளில் முதலீடு மற்றும் ஏனைய நிலையான வட்டி வருானங்களுடன் கூடிய முதலீடுகள் தேறும் நாளில் நிதிச் சந்தையில் காணப்படும் நிதி வீதங்கள் மற்றும் சந்தையின் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் பங்கிலாபங்கள் மற்றும் மூலதன இலாபங்கள் காரணமாகவே சபையின் வரவுசெலவுக்குட்பட்ட வருமானம் 94% அளவும் தங்கியிருக்கின்றது. அதன் படி, ஒவ்வொரு முதலீட்டு உருப்படியிலிருந்து கிடைக்கும் வருமானம் வரவுசெலவை விட உண்மையான பெறுமதி மாறக்கூடியதாயினும் முதலீட்டுக் கலவையானக் கருதி (Investment Portfolio) வரவுசெலவுக்குட்பட்ட வருமானத்தினை இண்டுவது சபையின் உபாயமாகும் ( Stratergy). அதன் படி, 2016ஆம் ஆண்டில் வரவுசெலவுக்குட்பட்ட மொத்த வருமானம் மற்றும் உண்மையான மொத்த வருமானம் ஆகியவற்றுக்கு இடையிலான வித்தியாசம் 2.2மூஐ சாதகமாகப் பேணுவதற்கு சபையால் முடிந்தது.

கணக்காய்வு விசாரணையின் போது செலவின் அசைவைக் கவனத்திற் கொண்ட போது சபையால் கட்டுப்படுத்த முடியுமான எல்லா செலவுகளையும் மிகக் கடுமையான கட்டுப்பாடொன்றின் (வுபாவ ஊழவெசழட) கீழ் முகாமை செய்யப்பட்டதுடன், அங்கத்தவர் நலன்கள் போன்ற சில செலவுகளை சபையால் எவ்விதத்திலும் கட்டுப்படுத்துவதற்கு முடியவில்லை. வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது அங்கத்தவர் நலன்கள் சபைக்கு எதிரவரும் ஆண்டில் செலவிடுவதற்கு எதிர்பார்க்கும் பெறுமானங்களைக் குறிப்பிடுவதாயினும், உண்மையான செலவு தீர்மானிக்கப்படுவது அங்கத்தவர்களால் குறிப்பிட்ட நலன்களைக் கோரினால் மாத்திரமே ஆகும். அங்கத்தவர் நலன்கள் தொடர்பில் வரவுசெலவுக்குட்பட்ட செலவு மற்றும் உண்மையான செலவினை ஒப்பிட்டுப் பார்த்து வரவுசெலவு முகாமைத்தவக் கட்டுப்பாட்டு உபாயமாக பயன்படவில்லை எனக் குறிப்பிடுவது நடைமுறை சார்பற்றதல்ல.

எனினும், ஆண்டின் வரவுசெலவு வருமானம் மற்றும் செலவும் உண்மையான வருமானமும மற்றும் செலவுக்கும் இடையிலான வித்தியாசம் முறையாக 2.2% மற்றும் 2.3மூ இடையில் பேணிச் செல்வதன் மூலம் மிகச் சறிந்த வரவுசெலவுக் கட்டுப்பாடொன்றை சபை கொண்டிருக்கின்றது எனபது உறுதிப்படுத்தபடுகின்றது.

## 5.3 கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயன்முறை

2016ஆம் ஆண்டிற்குரிய எல்லா கொள்வனவுகளையும் அரச கொள்வனவு வழிகாட்டல் தொகுப்பு மற்றும் சபையின் அனுமதிக்கப்பட்ட கொள்வனவுச் செயன்முறைக்கு இணங்கலாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் படி, எல்லா கொள்வனவுகளையும் மேற்கொள்ளும் போது அரச கொள்வனவு வழிகாட்டல் தொகுப்பின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் கமிட்டியை நியமித்தல் மற்றும் விலைமனு கமிட்டியை நியமித்து மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 500,000 ரூபா வரையிலான எல்லா விலைமனுக்களும், விலைமனு சபையின் சிபாரிசின் பின்னர் தலைவரால் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், 500,000 ரூபாவை விடக் கூடுதலான எல்லா விலைமனுக்களும், விலைமனு சபையின் சிபாரிசின் பின்னர் பணிப்பாளர் சபையின் அனுமதியையும் பெற்றுக் கொண்டுள்ளது.

## 5.4 பொது முயற்சிகள் குறித்து கமிட்டியின் கட்டளைகளைச் செயற்படுத்தாமை

சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி சபையின் தலைவர் என்பதாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு சிதியச் சட்டத்தின் 5(2)ஆவது பிரிவில் உள்ள ஏற்பாடுகளைத் திருத்தவேண்டும் என்பதாகவும் 2016 ஆகஸ்ட் 26ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் கமிட்டி கூட்டத்தின் போது முன்மொழியப்பட்டது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தினைத் திருத்துதல் 2009ஆம் ஆண்டில் ஆரம்பித்து கடும முயற்சியின் பின்னர் அமைச்சரவையின் அனுமதிக்காக தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட புதிய திருத்தம் கோப் கமிட்டி ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு முன்மொழிந்த வேளையில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு சிதியச் சட்டத்தில் செய்ய வேண்டிய திருத்தங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அதனால், தற்பொது சட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட திருத்தம் மேற்கொண்டதன் பின்னர் மீண்டும் ஒரு திருத்தமாக கோப் கமிட்டி உத்தேசித்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு சிதியச் சட்டத்தின் 5 (2)ஆவது பிரிவில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களைச் செயவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

# 6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

(அ) கணக்கீடு

சபை நிதிக் கூற்றுக்களைத் தயாரிகும் போது இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் (LKAS மற்றும் SLFRS) மேற்கொள்கின்றது.

(ஆ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு

1981ஆம் ஆண்டு முதல் 2014.12.31ஆந் திகதி வரையிலான காலத்தினுள் பங்களிப்புத் தொகையாக 135,779 மில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளதுடன், 2017.12.26ஆந் திகதியில் ஒவ்வொரு அங்கத்தவரினதும் கணக்கில் வரவு வைக்கப்படாது தொழில்தருநர்களின் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அங்கத்தவர் பணத்தின் பெறுமதி 1,519 மில்லியன் ரூபாவாகும். இப்பெறுமதியைப் பெற்றுள்ள அங்கத்தவர் பணம் பெறுமதியின வீதமாகக் கொள்கையில் 1.12மூ ஆகும். (ஆண்டு

ரீதியாக ஒவ்வொரு அங்கத்தவர் கணக்குகளிலும் வரவு வைக்கப்படாத தொழில்தருநர்களின் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பெறுமானங்களைக் குறிப்பிடும் அட்டவணையொன்று இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.)

இப்பணத்திற்காக சரியான அங்கத்தவர் விபரங்களை தொழில்தருநர்கள் நிறுவனங்களிலிருந்து மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து பெற்று அங்கத்தவர் கணக்குகளில் செம்மைப்படுத்தலுக்கு பிரத்தியேகமான விசேட அலகொன்று 2016.02.10ஆந் திகதி ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, கீழ் குறிப்பிட்டுள்ள தவிர்க்க முடியாத காரணங்களால் கணக்குகளில் அங்கத்தவர் பணத்தினை வரவு வைப்பதற்கு தாமதமாகி உள்ளதென அறிவிக்க விரும்புகின்றேன்.

1. தொழில்தருநர்கள் அங்கத்தவர் பணத்தைச் செலுத்தி உள்ள போதும், அப்பணத்தினை வரவிலிடுவதற்கு தேவையான ஊழியர் விபரங்களைப் பெற்றுக் கொடுக்காமை.
2. பல நிறுவனங்களுக்கு ஒரு காசோலை மூலம் அங்கத்தவர் பணத்தினைச் செலுத்தியுள்ள சந்தர்ப்பங்களில், அப்பணத்தினை வெவ்வேறாக நிறுவனங்களுக்கு பிரித்திடும் விதத்தை தெளிவுபடுத்திக் கொள்வது கடினமாயிருத்தல் (உரிய தொழில்தருநர் நிறுவனங்கள் தற்போது செயற்படா நிலையில் இருத்தல்).
3. நிறுவனத்தினால் பெற்றுக் கொடுக்கும் அரை ஆண்டு அறிக்கைகளில் உள்ளடங்கும் தரவுகள் தெளிவின்மை. (உரிய தொழில்தருநர் நிறுவனங்கள் தற்போது செயற்படா நிலையில் இருத்தல்).
4. நிறுவனங்களின் முகாமைத்தவம் மாற்றமடைவதால், அதற்கு முன்னர் உள்ள காலத்திற்கு உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருத்தல் மற்றும் அக்காலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு புதிய முகாமைத்தவம் ஆதரவு வழங்காமை.
5. விசேடமாக பெருந்தோட்டம் சார் நிறுவனங்களில் அங்கத்தவர்களுக்கு தேசிய அடையாள அட்டை இல்லாமையால் மற்றும் பெயர்களின் ஒரு பகுதி மாத்திரம் தொழில்தருநர்கள் பெற்றுக் கொடுப்பதால் அடையாளங் காண்பதில் பிரச்சினைகள் ஏற்படல்.

(இ) நிதி முதலீடு

வாடிக்கையாளர்களிடம் இருந்து சேகரிக்கும் பணத்தின் அதிகபட்ச பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் விதத்தில் நிதியத்தின் 94மூ இடர் நேர்வற்ற மற்றும் நிலையான வட்டி வீதத்ததைக் கொண்ட முதலீடுகள் மேற்கொண்டுள்ளதுடன், 6மூ மாத்திரம் இடர் நேர்வு கொண்ட முதலீடுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 2016ஆ் அண்டில் மொத்த முதலீட்டு வருமானமாக 10.51மூ இனை ஈட்டுவதற்கு சபை வெற்றிகண்டுள்ளது.

(ஈ) வரவுசெலவுக் கட்டுப்பாடு

ஆண்டின் வரவுசெலவு வருமானம் மற்றும் செலவும் உண்மையான வருமானமும மற்றும் செலவுக்கும் இடையிலான வித்தியாசம் முறையாக 2.2மூ மற்றும் 2.3மூ இடையில் பேணிச் செல்வதன் மூலம் மிகச் சறிந்த வரவுசெலவுக் கட்டுப்பாடொன்றை சபை கொண்டிருக்கின்றது எனபது உறுதிப்படுத்தபடுகின்றது.

(உ) உள்ளகக் கணக்காய்வு

2016ஆம் ஆண்டில் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு தகைமைப் பெற்ற அனுபவமிக்க பதவியணியினர் 03உடன் மட்டுப்படுத்தப்பட்டதுடன், அரச வர்த்தகங்கள் தொர்பில் பாராளுமன்றக் கமிட்டியால் (ஊழூநு) பெற்றுக் கொடுத்த பரிந்துரைகளின் பிரகாரம் 2017 யூன் மாதமாகையில் தகுதியுள்ள 04 உதவி உள்ளகக் கணக்கய்வாளர்கள் உள்வாங்கப்பட்டனர்.

இதன் படி, உள்வாங்கப்பட்ட புதிய அதிகாரினள் இருவர் பிரதிப் பொது முகாமையாளரின் (உள்ளகக் கணக்காய்வு) நேரடி கண்காணிப்பின் கீழ் முழுநேர முதலீடுகள் மற்றும் நிதி நடவடிக்கைகள் கணக்காய்வில் ஈடுபடுத்தப்பட்டதுடன், மற்ற இருவரும் கொள்வனவு மற்றும் ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் கணக்காய்வு நடவடிக்கைகளை ஆரம்பித்து உள்ளனர். மேலும், உதவிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) புதிய பதவிகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதுடன், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் அலுவலர்களுக்கு உரிய பதவி உயர்வுகளையும் பெற்றுக் கொடுத்து முன் கணக்காய்வு மற்றும் முதலீடுகள் உட்பட பின் கணக்காய்வு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை வலுப்படுத்துவதற்கு தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

# STATISTICAL ANNEXURE


















| | (Rs:000) | (Rs:000) | (Rs:000) | (Rs:000) | (Rs:000) | % |
|---|---|---|---|---|---|---|
| Income | | | | | | |
| | 23,492,350 | 20,274,204 | 19,056,836 | 17,331,497 | 14,663,189 | 10% |
| | (6,759,768) | (6,013,817) | (5,287,328) | (4,752,333) | (4,189,948) | 10% |
| | 486,194 | 360,582 | 309,256 | 318,660 | 208,701 | 18% |
| | 68,592 | 833,850 | 894,917 | 68,178 | (304,378) | - |
| | 331,650 | 320,139 | 317,455 | 286,047 | 258,892 | 5% |
| Total Income | 17,619,018 | 15,774,958 | 15,291,136 | 13,252,049 | 10,636,456 | 11% |
| Expense | | | | | | |
| | 985,963 | 994,389 | 813,000 | 720,022 | 632,244 | 9% |
| | 140,819 | 132,608 | 134,786 | 125,307 | 110,702 | 5% |
| | 2,904 | 1,988 | 3,041 | 2,657 | 2,485 | 3% |
| | 454,466 | 429,610 | 380,512 | 314,372 | 289,908 | 9% |
| | 15,290 | 16,896 | 18,605 | 18,863 | 20,878 | -6% |
| | 173,630 | 148,737 | 209,073 | 128,958 | 118,220 | 8% |
| Total Operating Expenses | 1,773,072 | 1,724,228 | 1,559,017 | 1,310,179 | 1,174,437 | 9% |
| | 15,845,946 | 14,050,730 | 13,732,119 | 11,941,870 | 9,462,019 | 11% |
| | 2,394,498 | 2,060,646 | 1,947,132 | 1,781,100 | 1,504,018 | 10% |
| Profit after Taxation | 13,451,448 | 11,990,084 | 11,784,987 | 10,160,770 | 7,958,001 | 11% |




| | (Rs:000) | (Rs:000) | (Rs:000) | (Rs:000) | (Rs:000) | % |
|---|---|---|---|---|---|---|
| Assets | | | | | | |
| | 614,332 | 841,949 | 2,653,133 | 1,043,164 | 414,831 | 8% |
| | 2,286,723 | 1,829,018 | 733,167 | 7,550,428 | 6,871,632 | -20% |
| | 10,140,142 | 8,973,928 | 8,592,784 | 485,835 | 485,835 | 84% |
| | 222,454,509 | 198,320,192 | 169,651,791 | 153,137,676 | 135,407,687 | 10% |
| | 1,343,876 | 1,336,538 | 7,535,296 | 7,418,615 | 7,234,690 | -29% |
| | 9,145,957 | 7,865,283 | 6,512,779 | 5,478,972 | 4,451,654 | 15% |
| | 176,378 | 173,144 | 187,008 | 183,067 | 18,824 | 56% |
| | 192 | 266 | 369 | 514 | 717 | -23% |
| | 3,200,000 | 3,200,000 | 3,200,000 | 3,200,000 | 3,200,000 | 0% |
| Total Assets | 249,362,110 | 222,540,319 | 199,066,327 | 178,498,271 | 158,085,870 | 10% |
| | 81,082 | 33,582 | 68,330 | 122,359 | 109,797 | -6% |
| | 304,104 | 351,851 | 267,841 | 235,917 | 156,894 | 14% |
| | 87,841 | 213,754 | 76,923 | 41,482 | 37,497 | 19% |
| Total Liabilities | 473,027 | 599,187 | 413,094 | 399,758 | 304,188 | 9% |
| | 248,889,083 | 221,941,132 | 198,653,233 | 178,098,513 | 157,951,099 | 10% |
| Total Liabilities and Equity | 249,362,110 | 222,540,319 | 199,066,327 | 178,498,271 | 158,255,287 | 10% |



# Other Annexures

# BRANCH NETWORK




01 No.70, Martyn Road,
Jaffna
+94 21-2220010

02 No. 27, Sri Lanka Red Cross Building,
Kachchiri Road, Kurunegala
+94 37-2228194

03 No: 247, Main Street,
Kegalle
+94 35-2222991

04 No: 23, Wijayarama Rd, Queen Mary's
Mawatha, Gampaha
+94 33-2234520

05 No: 122, Nawala Road, Narahenpita,
Colombo 05
+94 11 2369698

06 No: 92 A, Kirula Road, Narahenpita,
Colombo 05
+94 11 2368616

07 No: 44/5, Narahenpita Road,
Nawala
+94 11 2806834

08 No: 294, Galle Rd,
Kalutara North
+94 34-2237722

09 No: 90/1/1, Main, Street,
Ratnapura
+94 45-2222529

10 No: 80/C1, Havelock Place,
Galle
+94 91-2245814

11 No: 63/2, Kalidasa road,
Matara
+94 41-2222625

12 No: 114, Gonnoruwa Road,
Hambantota
+94 47-2220655

13 No: 9A, Main Road, Hatton
+94 51-2223840

14 No.693, Malwatta Road,
Ampara
+94 63-2222845

15 No. 230, Keppitipola Mawatha,
Badulla
+94 55-2224482

16 No; 79, Housing Secretariat,
Yatinuwara Veediya, Kandy
+94 81-2233793

17 No: 87/25, 1st Lane, Dharmapala Mw,
Anuradhapura
+94 25-2222185

සේවා නියුක්තයන්ගේ භාර අරමුදල් මණ්ඩලය
1 වන මහළ, කම්කරු මහ ලේකම් කාර්යාලය,
කොළඹ 05.
දුරකථන : 011-2581704
ෆැක්ස් : 011-2806832
ඊ මේල් : finance@etfb.lk
වෙබ් : www.etfb.lk